படைப்பு
ஊற்று-3 | நதி-10 | பிப்ரவரி-2021 | திங்களிதழ்
ISSN : 2582-4015
www.padaippu.com

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

"நான் எழுதுகிறேன்.. உயிரோடு இருப்பதாக நம்புவதற்கு அதுவே பெருந்துணையாக இருக்கிறது.."

▪ எழுத்தாளர் கரிகாலனுடனான நேர்காணல்

• தமிழர்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டும் தொ.ப.வின் வாழ்வும் பணியும்

- கே.கே.மகேஷ்

• கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

- மு.முருகேஷ்

• மைக்கண் வானம்

- எம். எம். தீன்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-3 | நதி-10 | பிப்ரவரி 2021

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**ஸ்டெல்லா தமிழரசி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **"நான் எழுதுகிறேன்.. உயிரோடு இருப்பதாக நம்புவதற்கு அதுவே பெருந்துணையாக இருக்கிறது.."**
  - எழுத்தாளர் கரிகாலனுடனான நேர்காணல் -பக். 05
- **தமிழர்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டும் தொ.ப.வின் வாழ்வும் பணியும்**
  - கே.கே.மகேஷ் -பக். 15
- **வெளிச்சப்பூக்களை ஏந்தும் கவிதைகள்**
  - வீரசோழன் க.சோ.திருமாவளவன் -பக். 23
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 25
- **கற்பதுவே.. கேட்பதுவே..!**
  - மௌனன் யாத்ரிகா -பக். 28
- **பெருமக்கட் கூட்டத்தின் சிறு தீ**
  - அமாசே -பக். 34
- **மீண்டெழும் ஒரு துயர வாழ்வு**
  - கவிஜி -பக். 40
- **அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..**
  - கவிஞர் விக்ரமாதித்யன் -பக். 42
- **மனநிலைக் குறிப்புகள் 08**
  - ஆதிரன் -பக். 55
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 61

## சிறுகதைகள்


- **மைக்கண் வானம்**
  - எம். எம். தீன் -பக். 20
- **கமலா**
  - பவித்ரா பாண்டியராஜ் -பக். 35
- **வெற்றிடம்**
  - சுரேஷ் பரதன் -பக். 51


## கவிதைகள்


- **தங்கேஸ்** -பக். 13
- **சன்மது** -பக். 13
- **ப.தனஞ்ஜெயன்** -பக். 14
- **பி.கே.சாமி** -பக். 14
- **ப.தாணப்பன்** -பக். 14
- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 7**
  - ஜின்னா அஸ்மி -பக். 33
- **ஊர்மிளை**
  - கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன் -பக். 49

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' முப்பத்துநான்காம் மின்னிதழ் உங்கள் கண்முன் பரந்துவிரிந்திருக்கிறது.

தமிழ்ச் சுவடிகளை அச்சு நூலாக்க உவேசா உள்ளிட்ட பதிப்பு முன்னோடிகள் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் அருஞ்சாதனைகள். புள்ளியற்ற மெய்கள், இடைவெளியும் நிறுத்தற்குறிகளுமற்ற தொடர்கள் எனப் பதிப்பாக்கத்தின்போது சுவடி குறித்த புரிதலுக்கே அவர்தம் பங்கு பெருமளவில் இருந்தது. பல பதிப்புகளைக் கண்ட பழந்தமிழ் நூல்களின் முதல் பதிப்பிற்குப் பின்னால் பெரு வரலாறு இருக்கும். அச்சுச் செயல்பாடுகள் எளிதான பிறகு நூல்களும் பதிப்பகங்களும் பல்கிப் பெருகின. நவீனத் தொழில்நுட்ப வளர்ச்சிகள் வாசிப்பை எளிமையாக்கிவிட்டன. இருந்த இடத்திலேயே நம்மைத் தேடி அச்சு நூல்களும் வருகின்றன.. மின்னூல்களும் கிடைக்கின்றன. அச்சில் உள்ள சில நூல்களே இலவசக் கோப்புகளாகப் பகிரப்பட்டுவருவது பதிப்பகங்கள் சந்திக்கும் ஒரு துயரம். தொடர்ச்சியாக எழுத்தாளர்களுக்கும் பதிப்பகங்களுக்கும் இடையிலான உறவு நிலை இலக்கியங்களாகப் பதியப்பட்டு வந்திருக்கிறது. நமது தகவில் வெளியான கவிஞர் விக்ரமாதித்யனுக்கு நகுலன் எழுதிய கடிதங்கள்கூட அக்காலத்திய பதிப்பு குறித்த செய்திகளைக் கொண்டிருந்தது. ஜெயமோகனின் அறம் சிறுகதையில் பதிப்பகங்களுக்கும் எழுத்தாளர்களுக்குமான உறவின் மற்றுமொரு நிலை வெளிக்காட்டப்பட்டிருக்கும்.

இன்று வாசிப்பு எளிதாக வாய்க்கின்ற ஒன்று. வாசிப்பின் மீது காதல் கொண்டோருக்குப் புத்தகக் கண்காட்சிகள் வரமாய் வாய்த்தவை. அங்கு குவிந்திருக்கும் நூல்கள் அனைத்தும் தமிழரின் அறிவுச் செதுக்கல்கள். சிந்தைக்குள் துளையிட்டு ஊற்றாய்ப் பெருகும் எண்ணங்களின் அந்த வார்ப்புகள் அடுத்த தலைமுறைக்கான நம் அறிவு அடையாளங்கள்.

நம் படைப்புப் பதிப்பகத்தின் வாயிலாகவும் பல நூல்கள் பதிப்பு கண்டு சென்னை புத்தகக் கண்காட்சியில் களம் கண்டிருக்கின்றன.

புத்தகக் கண்காட்சி என்றவுடன் ஆதவன் தீட்சண்யாவின் மீசை என்பது வெறும் மயிர் என்ற புனைவு நூல் நினைவுக்கு வருகிறது. புகழ்பெற்ற ஃபிராங்பர்ட் புத்தகக் கண்காட்சிக்கு எதிரில் உள்ள நிலவறைக் கண்காட்சி குறித்த சித்தரிப்புகளும் அதன்வழி கண்டறிய முடிந்த பீம்தாஸ் என்ற நாடு திரும்பாத எழுத்தாளர் குறித்த கதையோட்டமும் அப்புனைவிற்கான தனித்தன்மை மிக்க தளத்தை உருவாக்கித் தந்துவிடுகின்றன. ஒரு சமூகத்தை வாசிப்பின்வழி, எழுத்தின்வழி, படைப்பாளர்வழி அணுகமுடிவதை உணர்த்திய புனைவு.

இந்த வருட சென்னை புத்தகக் கண்காட்சியின் வழியாகவும் பல நூல்களைத் தரிசிக்க வாய்ப்பு வந்திருக்கிறது. படைப்பு அரங்கு எண் F-19.

எழுத்தாளர் கரிகாலனின் நேர்காணல் இந்த இதழில் இடம்பெறுகிறது. தேநீர் சாலை வழி நமக்குள் பல்வேறு உணர்வுகளைக் கடத்தியவர். நவீன கவிதைகளின்வழி களம் புகுந்தவர் புதினம் எழுதினார்.. சங்க இலக்கியம், தற்காலப் படைப்புகள், சினிமா, தமிழர் வாழ்வியல் என எது குறித்தும் தன் கருத்தைத் தெளிவாய் முன்வைக்கிறார். தமிழ்க்களத்தில் தொடர்ந்து இயங்கிவரும் எழுத்தாளர் கரிகாலனின் கருத்துக்கள் விடைகளாய் நமக்கொரு வெளிச்சத்தைத் தருகின்றன.

மேலும் கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்..

நன்றி.

**– ஆசிரியர்** ■

● பாரதி ஆர், மா.சு. பழனிவேல்

# "நான் எழுதுகிறேன்.. உயிரோடு இருப்பதாக நம்புவதற்கு அதுவே பெருந்துணையாக இருக்கிறது.."

## – எழுத்தாளர் கரிகாலனுடனான நேர்காணல்

நம்பிக்கையையும் வாழ்தல் மீதான பற்றையும் அளிப்பவை கரிகாலன் கவிதைகள். புலன்வேட்டை, பாம்பாட்டி தேசம், அபத்தங்களின் சிம்பொனி, மெய்ந்நிகர் கனவு, செயலிகளின் காலம் உட்பட பத்துக்கும் மேற்பட்ட கவிதை நூல்களைத் தமிழுக்கு அளித்தவர். கடந்த முப்பது ஆண்டுகளாக இலக்கியத்துறையில் இயங்குபவர். இவரது நிலாவை வரைபவன் இலக்கியப் புலத்தின் கவனத்தை ஈர்த்த புனைவாகும். கதா, ஏலாதி, ஜெயந்தன் நினைவு விருது போன்ற இலக்கிய கௌரவங்களைப் பெற்றவர். வானத்துக்கும் கீழ் உள்ள எதுவொன்றைப் பற்றியும் இவரோடு உரையாட முடியும். சமீப காலமாக சினிமா, சங்க இலக்கியம் குறித்தும் நிறைய எழுதி வருகிறார். தகவு மின்னிதழுக்காக ஓர் அந்திப் பொழுதில் கவிஞரை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினோம். அந்த உரையாடலின் எழுத்துவடிவத்தைத் தகவு வாசகர்களிடம் பகிர்ந்துகொள்வதில் மகிழ்கிறோம்.

**உங்கள் இளமைப்பருவம், வளர்ந்த சூழல் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்.**

மணிமுத்தாறு, வெள்ளாறு எனும் இரு நதிகளுக்கு இடையில் அமைந்த மருங்கூர் எனும் மருத நிலத்தில்தான் பிறந்தேன். அப்பா இரத்தினசபாபதி ஒரு பள்ளி ஆசிரியர். அம்மா ராசலட்சுமி. என்னைச் சிறப்பாகப் படிக்கவைத்து ஒரு பொறியாளராக ஆக்க வேண்டும் என்பது அப்பாவின் விருப்பம். நன்றாகப் படித்தபோதும் அலட்சிய மனோபாவம், கட்டற்ற விடுதலை சுபாவத்தால் என்னால் பொறியியல் படிக்க முடியாமல் போனது. ஆங்கில இலக்கியம் பயின்று ஆசிரியனானேன். அப்பா நிறைய படிப்பார். ஏழாவது எட்டாவது படிக்கும்போது இலக்கிய மன்ற உரைகளை எனக்குத் தயாரித்துத் தந்தார். வீட்டில் மு.வ., பாரதிதாசன், அகிலன், ஜெயகாந்தன், சோவியத் இதழ்கள், ரஷ்ய மொழிபெயர்ப்பு புதினங்கள் இருந்தன. அது சிறிய கிராமம். அப்போது படிப்பதைத் தவிர வேறு பொழுதுபோக்கே இருந்ததில்லை. வயலில், தொழுவத்தில், வீட்டுக் கூடத்தில் லாந்தரைக் கொளுத்திவைத்து படித்தபடியே இருந்தேன். சாண்டில்யன் நாவல்களை விடிய விடிய படித்திருக்கிறேன்.

**அதிகமாக உழுகுடிகளைப் பற்றி பேசுகிறீர்கள். ஒருவகையில் இது நிலப்பிரபுத்துவ மனநிலையின் தொடர்ச்சி என்று கருதலாமா?**

எனது இளம்பிராயத்தில் நிலப்பிரபுத்துவம் முற்றிலும் உடையத் தொடங்கியிருந்தது. உலகமயமாதல் மெல்ல உருவாகிக்கொண்டிருந்தது. உழுகுடிகள் விதை தானியங்களைச் சந்தையில் வாங்கும் நிலை உருவாகியிருந்தது. எங்கள் கிராமத்துப் பெட்டிக்கடைகளுக்கு சாஷேயில் ஷாம்பு வந்தது. கூடவே கேபிள் டிவியும் வந்தது. கிராமம் தன் அடையாளத்தை இழந்திருந்தது. எனக்குள் நிலப்பிரபுத்துவத்தின் எச்சங்களும், நகரமயமாதலால் உருவாக்கியிருந்த புதிய பண்பாடும் இணைந்து செயல்பட்டன. நான் முழுமையாகக் கிராமத்தைப் பூசிக்கவில்லை. அதற்குள் நிலவிய சாதியம் என் கிராமிய மனநிலையில் உடைவுகளைத் தோற்றுவித்திருந்தது. உழுகுடி வாழ்வில் உள்ள உழைப்பு, இயற்கை நேசம், உழவின் மேன்மை பற்றிய நல்ல ஞாபகங்கள் தொடர்ந்து வந்தன. மற்றபடி என் நிலவுடைமை மனநிலையை அவ்வப்போது கலைத்தபடியேதான் இயங்கிவருகிறேன்.

**தாமரை மழை தொகுப்பில் நிறைய கவிதைகள் கிராமத்தை வியந்தோதுபவையாக இருந்தன. கிராமத்தைவிட்டு விலகி வந்தமைக்காகக் கவலைப்படுவது போன்ற தொனி அதில் செயல்படுகிறது. புதிய நகரங்களில் வாழ்வதை நீங்கள் பாதுகாப்பாக உணரவில்லையா?**

இளம் வயதில் ராகுல்ஜியின் ஊர்சுற்றி புராணம் நூலைப் படித்தேன். அது எனக்குள் ஒருவித உடைப்பை ஏற்படுத்தியிருந்தது. கிராமத்துச் சிந்தனை முறையில் இருந்து என்னைத் துண்டித்துக்கொள்ள சதா முயன்றபடி இருந்தேன். நகரம் என்பது கிராமத்தைவிட சில விசயங்களில் பரவாயில்லை என்றே தோன்றியது. இருந்தாலும் இரண்டாயிரத்துப் பதினான்கு வாக்கில் ஏற்பட்ட வலதுசாரி அரசியல் திருப்பம், இந்தியாவை ஒற்றைமைய அரசியலுக்கு அழைத்துச் சென்றது. அடையாள அழிப்பைப் பரவலாக்கியது. இந்த நிலையில் தமிழ் நிலத்தின் பலவிதமான நிலவெளிகளை, மாந்தர்களை, அவர்தம் பண்பாட்டைப் படைப்புகளில் கொண்டுவருவது அவசியமென எண்ணினேன். ஒவ்வொரு இனக்குழுவிலும் செயல்படும் குடும்ப வழமைகள், சிறு தெய்வ வழிபாடுகள், கிராமங்களில் உள்ள உணவுமுறைகள், விவசாயப் பண்பாடு போன்றவற்றை எழுத விரும்பினேன். அடையாள மீட்பு எனும் எதிர் அரசியலாகவே தாமரை மழை கவிதைகள் அமைந்திருந்தன. மற்றபடி கிராமிய சமூகத்தின் சாதிய மேட்டிமைகளைக் கொண்டாடுவதாக அந்தக் கவிதைகள் எழுதப்படவில்லை.

**தங்கள் கவிதைகளில் அழகியல்- தத்துவம் - அரசியல்... இந்தச் சமநிலையை எப்படி அணுகுகிறீர்கள்?**

கவிதை என்பது கருத்துக்களாலும் உணர்ச்சிகளாலும் வளர்வது. சில வேளை கவிதைகளில் செயல்படும் எண்ணங்கள் தத்துவார்த்த சாயலில் அமையலாம். ஆனால் கவிதைகளில் தத்துவம் செயல்படவேண்டும் என்கிற அவசியம் இல்லை. பிளேட்டோ போன்ற தத்துவவாதிகள் கவிதைகளில் பொய்மையைக் காணுகிறார்கள். கவிதையைவிட தத்துவங்கள் உண்மையைத் தேடுபவை என்கிறார்கள். அரசியல் என்பது எப்போதுமே கவிதையின் உள்ளுறை ஆற்றலாக இருக்கிறது. நெல்லிக்காயில்

சி விட்டமின் இருக்கிறது. ஆனால் நெல்லி மரம் சி விட்டமின் தருவதற்காக நெல்லிக்காயை உற்பத்தி செய்வதில்லை. அது மண், நீர் இவற்றின் சாரத்திலிருந்து தன் விளைபொருளில் உயிர்ச் சத்தைச் சேமித்துக்கொள்கிறது. கவிதைகளும் அப்படிதான். வாழ்வின் சாரத்தில் இருந்து தத்துவங்களையும் அரசியலையும் எடுத்துக் கொள்கிறது. வழங்குகிறது. பாப்லோ நெருடா சொல்வதுபோல காதலை ஒரு முத்தத்தில் இருந்து கற்றோம். கவிதையை வாழ்விலிருந்துதான் கற்கிறோம். எழுதுகிறோம். ஒரு ஓவியன் மலரை வரைய விரும்புகிறான். அவனது குரு ஒரு நேர்க்கோட்டை வரைய சொல்கிறார். அந்த ஓவியன் மீண்டும் மீண்டும் மலரை வரைகிறான். அது ஒரு நேர்க்கோடாகும்வரை. அப்படிதான் கவிதையில் தத்துவம், அரசியல் போன்றவற்றின் சமநிலையும்!

**நவீன கவிதைகளின் சமகாலப் போக்கு பற்றி..**

நவீன தமிழ்க் கவிதைப் போக்குகள் குறித்து ஒரு நூல் எழுதியிருந்தேன். அதில் இதுபற்றி விரிவாகக் கூறியுள்ளேன். சமகால கவிதைகளில் மொழிதல் மீது மிகுந்த அக்கறை காணப்படுகிறது. மொழியின் கச்சிதத்தன்மைக்கும் அழகியலுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுவதைக் காண்கிறோம். இதுவன்றி கடந்த முப்பது ஆண்டுகளில் தமிழ்க் கவிதைகளில் நிறைய மாற்றங்கள் நடைபெற்றுள்ளன. பெரியார், அம்பேத்கர் நூற்களால் எழுச்சி பெற்ற புதிய தலைமுறையினர் கவிதை எழுதவந்தனர். புதிய உள்ளடக்கங்களால் தமிழ்க் கவிதை செழித்திருக்கிறது. பெண்ணியம், தலித்தியம், பின் நவீனத்துவம் எனத் தமிழ்க் கவிதைகளின் வகைமைகளும் பரிமாணங்களும் கூடியிருக்கின்றன. நிறப்பிரிகை போன்ற அரசியல், தத்துவார்த்த இதழ்களும் கவிதைகளின் போக்குகளில் தாக்கத்தை விளைவித்தன. சமூக ஊடகங்களில் குடும்பப் பெண்கள் கவிதைகள் எழுதுவதை அவதானிக்க முடிகிறது. திருநங்கைகள், உதிரி சமூகங்களில் இருந்து வந்தவர்கள் கவிதைகள் எழுதும் பொற்காலம் உருவாகியிருக்கிறது.

**கவிதை அரசியலை அணுகும் விதம் எவ்வாறு இருக்க வேண்டும் எனக் கருதுகிறீர்கள்?**

இது ஒவ்வொருவரிடமும் மாறுபடுகிறது. டி. எஸ். எலியட் *Poetry is not a turning loose of emotion, but an escape* என்கிறார். ரோலன் பர்த் போன்றவர்கள் எழுத்தாளனின் மரணத்தை அறிவித்தார்கள். வாசகன் படிப்பது எழுத்தாளன் எழுதியதை அல்ல. வாசகன் எழுத்தாளனின் பிரதியில் இருந்து தன்னுடைய பிரதியை உருவாக்கிக் கொள்கிறான்! எனச் சிந்தித்தார் ஃபூக்கோ. வாசிப்பு ஒழுங்கைக் குலைக்க முயன்றார் ழாக் தெரிதா. ரொமாண்டிக் கவிதைகளின் காலம் முடிவடைந்தது. கவிதைகளில் பலபடித்தான தன்மை இன்று கூடிவருகிறது.

கீழ்ப்படியாமையே விடுதலையின் அறம் எனும் சிந்தனையை நான் கவிதையின் அரசியலாக அணுகுகிறேன்.

**இந்தப் போக்கு அதிகமாக உங்களது செயலிகளின் காலம் தொகுப்பில் இயங்குவதைக் கவனிக்க முடிகிறது. குறிப்பாக மதம் உருவாக்கிய மதிப்பீடுகளைக் கவிழ்த்துக் கொட்டும் தன்மை அந்தக் கவிதைகளில் காணப்பட்டன. இதைத் திட்டமிட்டு உருவாக்கினீர்களா?**

இந்தியாவின் வலதுசாரித் திருப்பம் எனது சிந்தனைப் புலத்தில் மிகுந்த காயத்தை ஏற்படுத்தியிருந்தது. மீண்டும் சனாதன மதத்தை வலிமையுடன் செயல்பட வைக்கும் போக்குகள் நம்மை நூற்றாண்டுகளுக்குப் பின்னுக்கிழுத்துவிடும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் சனாதன மதிப்பீடுகளைக் கேலி செய்கிற மனநிலை இயல்பாகவே உருவாகிறது. இப்போது பெரியார் பாணி சிந்தனைமுறை நமக்குக் கைகொடுக்கிறது. மதம் உருவாக்கி வைத்திருக்கும் அச்சங்களைக் கவிழ்த்துக் கொட்ட வேண்டியிருக்கிறது. அந்த வேலையைத்தான் செயலிகளின் காலம் தொகுப்பு செய்கிறது.

**திடீரென்று சினிமா குறித்து அதிகம் எழுதுகிறீர்கள். இலக்கியம், சினிமா விமர்சனம் - இந்த இரட்டைப் பயணம் குறித்து..**

லாக்டவுன் காலத்தில் ஒடிடியில் நிறைய சினிமாக்கள் பார்க்க முடிந்தது. சினிமா ஒரு பொழுதுபோக்கு கலை வடிவம் என்கிற நிலை எப்போதோ மாறிவிட்டது. ஜே.கே ரௌலிங், வில்லியம் கோல்ட்மேன், ரே பிராட்பெர்ரி, ட்ரூமேன் கப்போட், மெக்கார்த்தி, வில்லியம் ஃபாக்னர் போன்ற எழுத்தாளர்கள் திரைக்கதைகள் எழுதினார்கள். மலையாளம், வங்காளத்தில் சினிமாவுக்கும் இலக்கியத்துக்கும் நிறைய தொடர்புகள் இருக்கின்றன. லாக்டவுன் அளித்த வெறுமையைப் போக்க விரும்பி சினிமா குறித்து எழுதினேன். அது ஒரு நூலாகும் அளவு நீண்டது. மற்றபடி நான் திரை விமர்சகனெல்லாம் கிடையாது. ஒரு பார்வையாளனாக எனக்குத் தோன்றியதைப் பகிர்ந்துகொண்டேன். அவ்வளவுதான்.

**நாட்குறிப்பு பாணியில் எழுதப்படுகின்ற உங்கள் முகநூல் பதிவுகளின் நவீனத்தன்மை குறித்து..**

ஆங்கிலத்தில் *column writing* என்கிற வடிவம் உண்டு. அன்றாட அனுபவங்களை, அதிலிருந்து பெறும் படிப்பினைகளைப் பகிர்ந்துகொள்ள இது நல்ல வடிவமாக இருக்கிறது. இவ்வகை எழுத்துக்கள் எனக்கு முகநூலில் நிறைய வாசகர்களை அடையாளம் காட்டியுள்ளது. இத்தகைய எழுத்துக்கள் தன் சமகாலத்தன்மையில் இருந்தே நவீனத்துவத்தைப் பெறுகின்றன.

**சடங்கான ஒரு கேள்வி. தொடர்ந்து முப்பது ஆண்டுகளாக எழுதுகிறீர்கள். நிறைவாக உணர்கிறீர்களா? எப்போதாவது, புறக்கணிக்கப்படுவதாக எண்ணியிருக்கிறீர்களா?**

நிறைவடைவது படைப்பாளிக்கு இயலாத விசயம். நிறைவின்மையே நம்மைத் தொடர்ந்து இயங்க வைக்கிறது. கவிதை என்பது அதிகாரத்தை எதிர்ப்பது. விடுதலையைக் கொண்டாடுவது. இது ஒருவித நிறைவடையாத தொடர்ச்சியான பணி. கணியன் பூங்குன்றன், வள்ளுவன், இளங்கோ எனத் தொடரும் வேலை. புறக்கணிப்பு எனத் தோன்றியதில்லை. கவிதை எழுதுவது, அங்கீகாரம், புகழடைதல் சம்மந்தப்பட்டதல்ல. அது விலகியிருப்பது, தனித்திருப்பது, அதேவேளை சமூகத்தோடு இணைந்திருப்பது குறித்த இயக்கம். வள்ளலார், பாரதி இப்படி இருந்தவர்களே. கவித்துவ இயக்கத்தில் புறக்கணிப்பைக் கவிஞனே செய்கிறான். அதிகார சமூகத்தை, லௌகீக சமூகத்தைத் தொடர்ந்து கவிஞன் புறக்கணிக்கிறான். அந்தப் புறக்கணிப்பின் நெருப்பே கவிதையில் அனலைச் சேர்க்கிறது. கவிஞன் அரசியல்வாதியோ மதபோதகனோ இல்லை. அவனுக்குக் கூட்டம் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் கூட்டம் அமைதியாக வாழ வேண்டும். ஒருவருக்குள் ஒருவர் அடித்துக்கொண்டு சாகக்கூடாது எனக் கவிஞன் சிந்திக்கிறான். புறக்கணிப்பு என்றால் எப்படி புரிந்துகொள்வது? தெரியவில்லை. கவிஞன் சொல்வதைச் சமூகம் கேட்கிறதா? வள்ளுவனுக்குக் கோட்டம் அமைத்தோம். சிலை வைத்தோம். மனப்பாடம் செய்யச் சொல்லி பரிசு கொடுக்கிறோம். சமூகம் வள்ளுவனை ஏற்றுக்கொண்டதா? அங்கீகரிக்கிறதா? பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றானே! ஈராயிரம் ஆண்டுகட்கு மேலாகிவிட்டதே! தமிழர் பின்பற்றுகிறார்களா? இது புறக்கணிப்பில்லையா? சமூகப் புறக்கணிப்புதான் கவிஞனை அணையாமல் பாதுகாக்கிறது. தொடர்ந்து இயங்க அவனுக்கு உந்துதலாக இருக்கிறது.

**இடையில் சில காலம் எழுதாமல் இருந்தீர்கள். பிறகு பாம்பாட்டி தேசம் தொகுப்பு வந்தது. புலன் வேட்டை, அபத்தங்களின் சிம்பொனி போன்ற தொகுப்புகளிலிருந்த தொனி முற்றிலுமாக அதில் மாறியிருந்தது. அந்தக் கவிதைகளில் கனிந்த மனதைக் காண முடிந்தது. இந்த மாற்றம் எப்படி நிகழ்ந்தது?**

வயதும் அனுபவமும் நிறைய விசயங்களைக் கற்றுக்கொடுக்கின்றன. தவிப்பும் பதற்றமும் தணிந்ததொரு காலத்தை வந்தடைந்ததுபோல் உணர்ந்தேன். பிள்ளைகள் வளர்ந்திருந்தார்கள். கல்வி நிலையங்களை நோக்கி அவர்கள் நகர்ந்திருந்தார்கள். தனிமையும் நிதானமும் இருந்தது. எதையும் விலகிப் பார்க்கிற பக்குவத்தை அடைந்திருந்தேன். இங்கு வெறுக்க எதுவும் இல்லை என்கிற எண்ணம் மனமெங்கும் வியாபித்திருந்தது. ஆற்றின் ஈரம் கரையைக் கடந்து பரவி வேர்களுக்குக் குளுமை தருவதுபோல பார்க்கிற காட்சிகளை எல்லாம் ரசிக்கிற, படிப்பினை பெறுகிற நிலையை அடைந்திருந்தேன். அந்தத் தருணத்தில் பாம்பாட்டி தேசம் தொகுப்பு வந்தது.

**நிலாவை வரைபவன் புதினம் எழுதினீர்கள். புதிய வகைமையில் அமைந்த நாவல் அது. ஆனாலும் அடுத்த புதினம் உங்களிடமிருந்து வராதது ஏமாற்றமாக இருக்கிறதே!**

எனது சிந்தனை அமைப்பில் சிறிது குறைபாடுகள் உண்டு. தர்க்கரீதியாக ஒரு புனைவை வளர்த்துச் செல்கிற மன அமைப்பை நான் பெற்றிருக்கவில்லை. நாம் வாழும் காலம் உருவாக்கியிருக்கிற பதற்றம், ஞாபகமறதி போன்றவற்றுக்குப் பலியாகியிருக்கிறேன். ஒரு பாத்திரம் எனது புனைவில் இயல்பான நிலையில் வயோதிகம் அடைய முடியாது. எனது சிந்தனை முறையில் கால வளர்ச்சி சற்று குழம்பியிருக்கும். எனது காலம் முன்னும் பின்னுமாக நகர்ந்தபடி இருக்கிறது. இத்தகைய போக்கிற்கு உகந்த புனைவாக நிலாவை வரைபவன் அமைந்திருந்தது. அப்படி ஒரு கதை மனதுக்குள் உருப்பெற்று பாதி வளர்வதும் பிறகு அழிவதுமாக இருக்கிறது. ஆனால் அதற்கான ஒத்திகை மனதில் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

**திடீரென்று சங்க இலக்கியம் குறித்து எழுதத் தொடங்கிவிட்டீர்கள். இந்த மாற்றம் எப்படி நிகழ்ந்தது?**

ரைட்டர்ஸ் பிளாக் என்பார்கள். தாமரை மழை தொகுப்புக்குப் பிறகு ஒரே மாதிரி கவிதைகளே எழுதுவது மாதிரி தோன்றியது. வேறு வேலைகளைச் சிறிது காலம் பார்க்கத் தோன்றியது. இயல்பாகவே எனக்கு சங்க இலக்கியத்தின் மீது ஆர்வம் இருந்தது. என் தாய்மாமா மறைந்த பொன்னேறுவளவன் புலவர் பட்டம் பெற்றவர். அவரிடம் ஏராளமான சங்க இலக்கிய நூல்கள் இருந்தன.

புலியூர் கேசிகன், வ.சுப.மாணிக்கம் போன்ற ஸ்காலர்களுடைய புத்தகங்களை விடுமுறை தினங்களில் படித்தேன். சங்க அகப்பாடல்களில் இருந்த நாடகக்கூறுகள் என்னை உள்ளிழுத்துக் கொண்டன. சுஜாதா போல் சங்க இலக்கியத்தைச் சமகாலத் தொனியில் சுவாரஸ்யமாக எழுதலாமே எனத் தோன்றியது. இப்படி எழுதியதுதான் என்மனார் புலவர், நோம் என் நெஞ்சே போன்றவை எல்லாம்!

**சுஜாதா என்றதும் ஞாபகம் வருகிறது. தொடர்ந்து உங்களை அவர் எழுதி வந்திருக்கிறார். அபத்தங்களின் சிம்பொனிக்கு சுஜாதா அவார்ட்ஸ் வழங்கினார். உங்களுக்கும் அவருக்கும் இருந்த பழக்கம் எப்படி அமைந்திருந்தது?**

சுஜாதா என்மீது அன்புடையவராக இருந்தார். நிறைய இடங்களில் என்னை அடையாளப்படுத்தியிருக்கிறார். கணையாழி திஜா குறுநாவல் போட்டியில் என்னுடைய நாவலைத் தெரிவு செய்திருந்தார். நான் ஞானதிரவியத்தின் கவிதைத் தொகுப்பு ஒன்றைக் கொண்டு வர முயன்றேன். ‘ஏன் கரிகாலன் சிரமப்படுகிறார். நாம் சிந்து பதிப்பகம் மூலமாகக் கொண்டு வருவோம்’ என நண்பன் ரவிசுப்ரமணியத்திடம் கூறியவர். அப்படி கொண்டும் வந்தார். ஓரிருமுறைதான் அவரைச் சந்தித்திருக்கிறேன். வழக்கம்போல் எனது கூச்சம் காரணமாக அவரிடமிருந்து விலகியே நின்றேன்.

**உங்களது இலக்கியப் பார்வைகளை உருவாக்கியவர்கள் அல்லது விரிவாக்கியவர்கள் என்று யாரைச் சொல்வீர்கள்?**

நிறைய பேர் இருக்கிறார்கள். எங்களூரில் பட்டி சு.செங்குட்டுவன், உ.செ.துளசி, வே.சபாநாயகம் போன்றோர் இருந்தார்கள். இவர்களோடு அடிக்கடி இலக்கியம் குறித்துப் பேசிய அனுபவங்கள் எழுதுவதற்கான உந்துதலை அளித்தன. அதுபோல் விருத்தாசலத்தில் எழுத்தாளர் உதயசங்கர் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராகப் பணிபுரிந்தார். அவரது கேபினில் மணிக்கணக்காக அமர்ந்து அவர் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். நிறைய தெரிந்துகொள்ள முடிந்தது. பிறகு அ.மார்க்ஸ், பழமலய், ரவிக்குமார் போன்றவர்களோடு நிறைய பயணிக்க முடிந்தது. இவர்கள் என்னிடம் நிறைய தாக்கத்தை விளைவித்தார்கள். நண்பர் ரமேஷிடம் பேசிய உரையாடல்கள் தெளிவைக் கொடுத்தன. இப்படி நிறைய நண்பர்கள், வழிகாட்டிகள் இருந்திருக்கிறார்கள். எழுத்து தனிமனித விளைபொருளன்று. சமூக செயல்பாடு!

**உங்கள் துணைவியார் சு.தமிழ்ச்செல்வி தமிழகத்தின் முக்கியமான எழுத்தாளர்களுள் ஒருவர். பிள்ளைகளுக்கு இலக்கிய ஆர்வம் இருக்கிறதா?**

மகள்கள் சிந்து, சுடர் இருவரும் முதுநிலை மருத்துவம் படிப்பவர்கள். இருந்தபோதும் வாசிப்பில் ஆர்வம் உடையவர்கள். மகன் கார்க்கி விரைவில் சட்டப் படிப்பை நிறைவு செய்ய இருக்கிறார். இலக்கியம், சினிமா குறித்த அக்கறை, ஆர்வம் இருக்கிறது. மூவரும் எழுதுகிறார்கள். ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். அவர்கள் தமிழில் எழுத வேண்டுமென விரும்புகிறேன்.

**சினிமா குறித்து எழுதுகிறீர்கள். சினிமாவுக்கு எழுதும் விருப்பம் இருக்கிறதா?**

இருபது ஆண்டுகட்டு முன்பே சினிமாவுக்குப் பாடல் எழுதுகிற வாய்ப்பு வந்தது. நண்பர் தங்கர்பச்சான் நடிக்கவும் அழைத்தார். அப்போது ஏனோ ஆர்வம் இல்லை. இப்போது சில வாய்ப்புகள் வரத்தொடங்கி உள்ளன. எதிர்வரும் நாட்களில் பாடல்கள் எழுத எண்ணியுள்ளேன்.

**இதுவும் சம்பிரதாயமான கேள்விதான். உங்களுக்குப் பிடித்த கவிஞர்கள்..**

நிறையபேர் இருக்கிறார்கள். சொல்லும்போது சில விடுபடல்கள் நிகழ வாய்ப்பிருக்கிறது. இலக்குமி குமாரன் ஞானதிரவியம், யவனிகா ஸ்ரீராம், குட்டி ரேவதி, சுகிர்தராணி, ரமேஷ், தபசி, இசை, இளங்கோ கிருஷ்ணன், மாலதி மைத்திரி, கதிர்பாரதி, சக்தி ஜோதி இப்படி நிறைய பேர் இருக்கிறார்கள். நிறைய புதிய இளைஞர்கள் நம்பிக்கை அளிக்கும் வகையில் எழுதுகிறார்கள்.

**கவிதைகளில் பரிசோதனை முயற்சிகள் தேவையா?**

கவிதைகளில் மட்டும் அல்ல. எல்லாத் துறைகளிலுமே புதுமை, பரிசோதனை முயற்சிகள் தேவை. புதியன விழையும் மனமே கலையும் அறிவியலும் வளர காரணமாய் இருக்கின்றது.

**நீங்கள் ஏன் எழுதுகிறீர்கள்?**

எழுதுவது நம்மைச் சுயபரிசோதனை செய்துகொள்ள உதவுகிறது. நம்மிடம் இருக்கும் கீழ்மைகளைக் கண்கொண்டு பார்க்கவும், அதை அகற்ற முயலவும் எழுதுவதில் ஆர்வமுடைய மனம் துணை செய்கிறது. எழுதுவது இந்த வாழ்வில் காணப்படும் பிழைகளை அழிக்கவும் சரிசெய்யவும் உபயோகமாக இருக்கிறது. யதார்த்த உலகுக்கு மாற்றாக இரண்டாவது யதார்த்தத்தை உருவாக்கிப் பார்ப்பதில் திருப்தி ஏற்படுகிறது. அழிக்கப்படும் மற்றைமைகளைச் சதா நினைவுகூரவும், எழுத்து மனம் உகந்ததாக இருக்கிறது.

எழுதாமல் இருப்பது மனசுக்குப் பிடித்த விசயத்திலிருந்து தள்ளி நிற்பது போன்றது. நீங்கள் ஒரு கடலை எழுத்தில்தான் அமுதம் பெருகுவதாகக் கற்பனை செய்யமுடியும். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று எழுத்து வழியேதான் கனவு காண முடியும். எழுதுவதன் மூலம் டால்ஸ்டாய், தாஸ்தாயேவ்ஸ்கி, தாகூர், கம்பன் போன்றோர்க்கு அருகில் இருப்பது போல் எண்ணத் தோன்றும். எழுத்து உங்களைத் தற்கொலை விளிம்பில் இருந்து காப்பாற்றும். எழுத்து, உங்கள் நதி குளிரில் உறைந்துவிடாமல் பாதுகாக்கிறது. எழுத்து உங்கள் மீனை, நதியைத் தான்தான் இயக்குவதாகக் கனவு காண வைக்கிறது. நான் எழுதுகிறேன்.. உயிரோடு இருப்பதாக நம்புவதற்கு அதுவே பெருந்துணையாக இருக்கிறது.

**புதிதாக எழுத வருபவர்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது...**

எதுவும் கூறாமல் இருப்பதே அவர்களுக்குச் செய்யும் உதவியாக இருக்க முடியும். ஒரு நதி தன் உள்ளுணர்வில் இருந்தே தன் பாதையைத் தெரிவு செய்கிறது. அப்படிதான் புதிதாக எழுத வருபவர்களும். தங்கள் அனுபவங்களில் இருந்து, தங்கள் உள்ளுணர்வில் இருந்து, தங்களுக்கான வடிவத்தை, உள்ளடக்கத்தை அவர்கள் கண்டடைவார்கள். அவர்கள் சிந்தனை முறையில் குறுக்கீடு செய்யாமல், அவர்கள் எழுதிய பிறகு வாசித்து, அபிப்ராயங்களை, பாராட்டுகளைத் தெரிவிப்பதே, அவர்களை உற்சாகப்படுத்துகிற செயலாக அமையும்.

**சமூகத்தில் கவிதையின் இடம் என்ன? கவிதை சமூகத்தை மாற்றுமா?**

கவிதை ஒரு பண்பாட்டு வடிவம். அது மனித மனதை முற்போக்கான மாற்றங்களை நோக்கி படிப்படியாக அசைக்கிறது. சமூகத்தின் மனசாட்சியாகவும் கவிதைகள் திகழ்ந்ததுண்டு. தேசத்தின் ஆன்மாவாக தாகூர், பாரதியின் கவிதைகள் அமைந்தன. பூமிக்கடியில் வேர்கள் ஒரு தாவரத்துக்கு எப்படி உதவியாக இருக்கிறதோ, அப்படிதான் கவிதையும் பணி செய்கிறது.

எந்த ஒரு நிகழ்வுக்கும் கவியின் சொல்லைத்தான் சமூகம் உதாரணமாகக் காட்டுகிறது. இந்தக் கவிதை நாகரீகம் சுமேரியாவில் சீனாவில் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றியது. அப்படிதான் தமிழ் நிலத்திலும் தோன்றியது. பிரிவைப் பற்றி பேசும்போது, ‘நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு’ என்று ராமாயணத்தைச் சுட்டுகிறோம். அரசியலில் பிழை புரிபவர்களைப் பார்த்து, ‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்’ என்று சிலம்பைச் சொல்கிறோம். ‘தீதும் நன்றும் பிறர்தர வாரா’ என்று புறநானூற்றைச் சுட்டிக் காட்டுகிறோம். ஒருமுறை பிரம்மராஜன், ‘கவிதைகள் வாசிப்பதை விடவும் வேறு முக்கியமான வேலைகள் இருப்பதுபோல் இச்சமூகம் பாவனை செய்கிறது!’ எனக் கூறினார். ஆனால் சமூகம் அப்படி கருதவில்லை என்றே எண்ணுகிறேன். கவிதை அரசியல் தளங்களில் தூலமாக மாறுதல்களை உருவாக்குவதை விடவும், மதிப்பீட்டுத்

தளங்களில் மாற்றங்களை உருவாக்குகின்றன. தமிழர்க்கு இருக்கும் பெருமைதான் என்ன? நாம் தொல்காப்பியத்துக்கும், குறளுக்கும், அகநானூறுக்கும் புறநானூறுக்கும், சிலப்பதிகாரத்துக்கும், மணிமேகலைக்கும், பக்தி இலக்கியங்களுக்கும் சொந்தக்காரர்கள் என்பதுதானே.

**நவீன கவிதை எழுதுபவர்களுக்கு சங்க இலக்கியப் பரிச்சயம் தேவை எனக் கருதுகிறீர்களா?**

அவசியமா? என்று தெரியவில்லை. ஒருவர் தம் பண்பாட்டின் வேர்களை அறிந்திருப்பது நல்லதுதானே. அது அவர்கள் மொழியை, எழுத்தாளுமையைச் செழிக்க உதவும். அதேவேளை சங்க இலக்கியம் அறிந்துதான் எழுத வரவேண்டும் என்பது அவசியம் இல்லை. இன்றைய ஞாயிறு கம்பன் கண்ட ஞாயிறு இல்லை. இன்றைய அரசியல் அறம் இளங்கோ கண்டதல்ல. இன்றைய சமூகம், அரசியல், பண்பாடு போன்றவை மாறியிருக்கின்றன. அதேவேளை இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் வெட்டி அருகருகே வைத்துப் பார்க்க விழைகிறது பின் நவீனத்துவம். ஆகவே சங்க இலக்கியப் பரிச்சயம் ஒரு கவிஞனின் மொழி அறிவுக்கும் பண்பாட்டுத் தொடர்ச்சிக்கும் உதவுவதாகவே இருக்கும்.

**தமிழில் உரைநடைக்கு இருக்கும் மதிப்பு கவிதைக்கு இருப்பதாகத் தெரியவில்லையே..**

அப்படி சொல்ல முடியாது. கவிதை கலைகளின் ராணி. புனைகதையாளர்கள் பலருக்கும் கவிதை எழுதிப் பார்க்கும் ஆர்வம் இருந்தது. புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், சுந்தரராமசாமி, வண்ணதாசன் போன்றோர் புனைவுகளோடு கவிதைகளும் எழுதினார்கள். ஆயிரம் பக்கம் சொல்ல வேண்டிய விசயத்தைக் கவிதையில் சில வரிகளில் சொல்லிவிட முடிகிறது. புனைவெழுத்தை விட கற்பனைக்கும் சிந்தனைக்கும் கவிதையிலேயே இடம் அதிகம். எந்த ஒரு சமூகத்திலும் கவிஞருக்கான இடம் முதன்மையானது. உரைநடை விருட்சம் என்றால் கவிதை கனி. உரைநடை அரியணை என்றால் கவிதை மகுடம். உரைநடை நிலம் என்றால் கவிதை நதி. கவிதைகள் போலத் தோற்றமளிக்கும் சிலவற்றில் ஏமாந்தவர்கள் உருவாக்கும் மதிப்பீடுகள் நிரந்தரமானவை ஆகாது.

**பிறகு ஏன் கவிதைப் புத்தகங்கள் விற்கவில்லை என்கிற கூற்று இங்கு விவாதிக்கப்படுகிறது?**

அச்சுத்துறை அபாரமான வளர்ச்சியை அடைந்திருக்கிறது. அசுர பசி கொண்ட அச்சு இயந்திரங்களுக்குத் தீனி போட வேண்டிய அவசியம் இருக்கிறது. எல்லா மனிதர்களும் தங்கள் கவிதைகள் சிலவற்றை எழுதிப் பார்க்க விரும்புகிறார்கள். அது தவறு இல்லை. இந்த உலகத்தில் பிறந்த அனைவரும் ஒரு கவிதையாவது எழுதிப்பார்க்க வேண்டும் என விரும்புகிறவன் நான். ஆனால் கவிஞராக நீடிப்பது என்பது வேறு. அதற்கு மொழிப் பயிற்சி, விடுதலை மனம், விலகியிருக்கும் தன்மை போன்றவை தேவைப்படுகிறது. கவிதை ஒருவரின் ஆன்மாவைக் குடிக்கும் தாகம் கொண்டது. அது மறுகரையற்ற சமுத்திரத்தை நீந்திக் கடக்கும் முயற்சி. புதுவெள்ளம் ஓய்ந்துவிடும். தெளிந்த நீர் நாளடைவில் பாய்ந்தபடி இருக்கும். கவிதைக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்களின் கவிதைகள் ஒருபோதும் தேங்குவதில்லை.

**கவிஞர் எனும் ஆளுமை, அவர் எழுதும் கவிதையில் இருந்து உருவாகிறதா அல்லது வாழ்விலிருந்து உருவாகிறதா?**

இது சற்று சிக்கலான கேள்வி.

ஒருவர் பழக்கத்திலிருந்து கவிதை எழுதிவிட முடியும். ஆனால் கவிஞராக வாழ்வதுதான் சிரமமானது. கவிஞர் எனும் ஆளுமையால் நடைமுறை உலகோடு ஒத்துப்போக முடியாது. இந்த உலகு ஏற்றுக்கொண்ட நம்பிக்கைகளுக்கு எதிரானவர்களே கவிஞர்கள்.

அதனால் தன் ஊராரால், தெருக்காரர்களால் அவர்கள் வெறுக்கப்படுவதும் உண்டு. பாரதி அப்படி வெறுக்கப்பட்டான். கவிதை மனதால் தனக்கு இழப்புண்டு எனத் தெரிந்தும் அதைப் பாதுகாக்க விரும்புவோரே கவிஞர்கள். கவிஞர் என்பவர் புதுமை விரும்பி. மாற்றங்களை விழைபவர். விடுதலையைக் கொண்டாடுபவர். கவிஞர் எனும் ஆளுமை அகன்று விரிந்த அவரது வாழ்வின் பரிமாணங்களிலிருந்தே கொண்டாடப்படுகிறார்! ■

ஓவியங்கள் : அன்பழகன்

**து**யரத்தின் வாசலைக் கடப்பது
அத்தனை எளிதல்ல
ஒரு கால் முன்னிழுக்க
மறுகும் மனது பின்னிழுக்க
சுவர் பல்லிகள் போலே
கண்களை உருட்டியபடி
ஆத்மாக்கள் நம்மையே
நோக்கிக் கொண்டிருக்கும்
துயரத்தின் வாசலைக் கடப்பது
அத்தனை எளிதானதல்ல
மூர்ச்சையுற்றிருக்கும்
ஒரு கணத்தை
தட்டி எழுப்பி
ஆசுவாசப்படுத்தி
கைத்தாங்கலாக
அழைத்துச் செல்வது போல்
வாடிவிடாத
ஒரு வாடாமல்லி தோட்டத்திலிருந்து
சொல்லிக்கொள்ளாமல்
விடைபெறுவது போல்
ஈரம் காயாத உறவுகளை
கைக்குட்டையில் சங்கடமின்றி
துடைத்துப்போவது போல்
இன்னும் தூசி படியாத
பச்சை பசும் மருதாணி இலைகளை
ஆசையிருந்தும்
நீவிவிடாமல் விலகிச் செல்வது போல்
துயரத்தின் வாசலைக் கடப்பது
அத்தனை எளிதல்ல
தோண்டியெடுக்கும்போது
பாதி முறிந்துவிட்ட
மரச்சீனிக்கிழங்கு போல்
மண்ணுக்குள்
புதைந்து கிடக்கும் இதயங்களை
காலால் இடறியபடி
துயரத்தின் வாசலைக் கடப்பது
அத்தனை எளிதல்ல

– தங்கேஸ்

*

## அவளோவியம்

ஏதோ ஒன்றை வரைந்துகொள்கிறாள்
என்னவாக இருக்குமென்று
தீர்மானிக்கும் வரையில் அது
அவளுடைய ஓவியமாகவே தெரிகிறது
நிறமிகள் கொண்டு நெளிந்துகொள்ளும்
விரல்களில்
உயிரோவியம் வழிந்துகொள்கிறது
இழைவு கொள்ளும் தாள்
அவள் கண்களில் புனைந்துகொள்கிறது
கோலங்களில் சிதறிக்கொண்ட புள்ளிகளாய்
விளங்கிக்கொண்டது எனக்கு
களைப்புடன் கூடிய குறுநகைப்பில்
நிறைவுகொள்கிறது அவளோவியம்

– சன்மது

ஓவியங்கள் : அன்பழகன்

# பிரபஞ்சத்தின் கணங்கள்

**பூ**மி சதைகளில் ஒரு மௌன அதிர்வு
சுழலும் அச்சில்
ஒரு ஆழமான புன்னகை
அதிசயமான உடல் இசை
தட்டாய் சுழல்கிறது

நீர் தெறிக்கும் இசை
மோதி மடிகிறது உடலெங்கும்
பூமித்தாயைப் பிளக்கும்
விதைகளில் இருக்கிறது
பச்சை சதையுதடு
பூமி இருள் குடித்து
பகல் அருந்தி வழிகிறது
மணித்துளிகள்
சாயை கோடுகளில் புறப்பட்டு
நடந்து செல்கிறது பூமி
துணைக்குச் சில கோள்களின்
ரீங்காரம்
கோள்களைப் பெற்றெடுத்த
கருவறையா பிரபஞ்சம்
மனித மனதில் எரிகிறது
பிரபஞ்ச விளக்கு
மாயை எண்ணெய்யானது
சாயை திரியானது
இரண்டும் கலந்து மனித உயிரானது
கடந்து செல்ல முனையும்
கோள்களை
கட்டிவைத்துள்ளான் மனிதன்
மனக் கயிற்றைக் கழட்டி எறிந்தால்
ஒளியின் தூரத்தில் தெரிகிறது
முத்திரை
மனித மூச்சில் வழிகிறது
அணுதானியம்
அணுக்களைக் குடித்து மகிழ்கிறது
வெகுதூரத்தில் கருந்துளை.

– ப.தனஞ்ஜெயன்

•

**கு**டைக்கம்பி வழியாக
ஒழுகும் மழைக்கு
எதிர்பாராத வளைவு.

– பி.கே.சாமி

•

**உ**ய்விக்க
ஈகித்துப் பொழிகிறது
வான்மழை.
கசிந்துருகி
தான் நனைந்தே
குடை தருகிறது
ஒரு
கொடை மனது.
பொழிதல் என்றும்
பொய்ப்பதில்லை!

– ப.தாணப்பன்

● கே.கே.மகேஷ்

# தமிழர்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டும் தொ.ப.வின் வாழ்வும் பணியும்

பேராசிரியர் தொ.பரமசிவன் மறைந்த மறுநாளில், அங்கு நடந்த இரங்கல் கூட்டத்தில் காலச்சுவடு கண்ணன் சொன்னார், 'காலச்சுவடுக்கு அவர் எழுதிய ஒரு கட்டுரை, ஐந்தாறு கையெழுத்துக்களில் இருந்ததைக் கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன். பிறகுதான், அவர் சொல்லச் சொல்ல அவரது மாணவர்களே எழுதுவார்கள் என்கிற அவரது நடைமுறையை அறிந்துகொண்டேன்' என்று. உண்மைதான். பேராசிரியருக்குக் கொஞ்சம் எழுத்துச் சோம்பல் உண்டு. பொதுவாக, அவர் சொல்லச் சொல்ல மாணவர்கள்தான் எழுதுவார்கள். அப்படி எழுதி, தொ.ப.வால் என் எழுத்துப் பிள்ளையார் என்று வேடிக்கையாக அழைக்கப்பட்டவர்களில் ஒருவர் மதுரை பள்ளி ஆசிரியர் தமிழ்க்குமரன்.

இரு மாதங்களுக்கு முன்பு பேராசிரியரைப் பார்க்கச் சென்ற மதுரைத் தோழர்கள் குழுவில் அவரும் ஒருவர். அதே காரில் நானும் ஒட்டிக்கொண்டு போனேன். அப்போது அய்யாவுடனான அவரது அனுபவம் பற்றிக் கேட்டேன். அவ்வளவு சுவாரசியமாக இருந்தது, அவர் சொன்னவை. அது அப்படியே இங்கே...

“இளையான்குடி ஜாகீர் உசேன் கல்லூரியில் இருந்து மாறி, மதுரை தியாகராசர் கல்லூரியில் தொ.ப. அய்யா தமிழ்ப் பேராசிரியராகச் சேர்ந்த ஆண்டில்(1987), நான் அவரது முதலாமாண்டு மாணவன். அவர் எங்களுக்கு இக்கால இலக்கியம் பாடம் எடுத்தார். முதல் வகுப்பில் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் கதைகளைப் பற்றி பாடம் நடத்த வேண்டும். எடுத்தவுடன், 'பாடப்புத்தகத்துக்கு வெளியே என்ன படிச்சிருக்கீங்க?' என்றுதான் ஆரம்பித்தார். எல்லோரும் எம்.ஏ. வகுப்புக்கு வந்துவிட்டோமே தவிர, யாருக்கும் பாடப்புத்தகத்தைத் தாண்டிய வாசிப்பு என்றொன்று இருக்கிறது என்கிற விஷயமே தெரியாமல் இருந்தது. அவரது வருகைக்குப் பிறகுதான் புற வாசிப்பு என்றொரு விஷயம் இருப்பதே எங்களுக்குத் தெரியும். வாசிக்க ஆரம்பித்தோம்.

மாணவர்களுக்கு அநியாயத்துக்கு மரியாதை கொடுப்பார் அய்யா. டவுசர் போட்ட பையன்களைக்கூட 'வாங்க, போங்க' என்றுதான் அழைப்பார். பெரியாரிடம் இருந்து

வந்த பண்பு அது. ஆசிரியர், மாணவர் என்ற எல்லையைத் தாண்டி எங்களோடு வகுப்பில் உரையாடியதால், பலாப்பழத்தை மொய்க்கிற ஈ போல அவரை நாங்கள் பின்தொடர ஆரம்பித்தோம். வகுப்பு இடைவெளியில் கேன்டீனில் கூட அவர் பேசுவதைச் சுற்றி நின்று கேட்டுக்கொண்டிருப்போம். அவர் சொல்லிச் சொல்லித்தான் கொஞ்சம் கொஞ்சமாக வெளி வாசிப்புக்கு எங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டோம். பழைய புத்தகக் கடைகளுக்கெல்லாம் போக ஆரம்பித்தது அப்போதுதான்.



முதல் செமஸ்டரில் இக்கால இலக்கியம் நடத்தியபோது, அய்யா, மார்டன் லிட்ரேச்சரில்தான் கில்லி போல என்று நினைத்துக் கொண்டிருந்தோம். இரண்டாவது செமஸ்டரின் முதல் நாளில் சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டம் எடுத்தார். அன்றுதான் எங்களுக்குப் பயங்கர பிரமிப்பாக இருந்தது. ஏனென்றால், சிலப்பதிகாரப் புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டே அதைப் பார்த்து வாசிக்க நாங்கள் திணறுவோம். அப்படித் தடுமாறுகையில், அய்யாவே 'சொல்லுங்க... சொல்லுங்க' என்று அடுத்தடுத்த அடிகளைக் கடகடவென்று மனப்பாடமாகச் சொல்லுவார். பாடம் நடத்துற மாதிரியே இருக்காது. அப்படியே அந்தக் கால மதுரைக்குள் கையைப் பிடித்துக் கூட்டிக்கிட்டுப் போற மாதிரி இருக்கும். அதுக்கப்புறம்தான் இவர் பாரம்பரியமான பேராசிரியர்களுக்கும் ஒருபடி மேலானவர் என்கிற கருத்து எங்கள் புத்திக்கு உரைக்க ஆரம்பித்தது.

அவர் கொஞ்ச காலம் மதுரை சிம்மக்கல் கணபதி லாட்ஜில் தங்கியிருந்தார். கல்லூரி முடிந்ததும் அவர் கூடவே, அறைக்கும் போய்விடுவோம். எனக்கு என்ன கொடுப்பினை என்றால், எம்.பில். வழிகாட்டியாக அவர் எனக்குக் கிடைத்துவிட்டார். அதனால், எம்.ஏ. மட்டுமின்றி எம்.பில். முடிக்கிற வரைக்கும் நான் அவர் கூடவேதான் இருந்தேன். அதனால் மற்ற மாணவர்களை விட கூடுதலாக அவருடனே இருக்கிற வாய்ப்பு கிடைத்தது.

மற்ற பேராசிரியர்கள், நண்பர்கள் எல்லாம் 'அய்யா நீங்க இவ்வளவு பேசுறீங்க, அதை எல்லாம் எழுதுங்க... பதிவு பண்ணுங்க...' என்று வலியுறுத்திக்கொண்டே இருப்பார்கள். ஆனால், அவருக்குக் கொஞ்சம் எழுத்துச் சோம்பல் இருந்தது. அவரே வேடிக்கையாகச் சொல்லுவார். 'நான் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு கூட *60* மார்க் மட்டும்தான் அட்டன் பண்ணுனேன்' என்று. காரணம், வேகமான எழுத்து அவருக்கு வராது. அடுத்து போதும் என்று திருப்தியடைய மாட்டார். முடிந்தவரையில் தெரிந்த செய்திகளை எல்லாம் எழுதிவிட முயற்சிப்பார்.

'நான் எழுதுறேன்யா' என்று சொன்னதும், சின்னச் சின்ன கட்டுரைகளை எல்லாம் சொல்ல ஆரம்பித்தார். முதல்ல நாங்க எழுதியது 'இதுதான் பார்ப்பனீயம்' என்ற நூல்தான். *1991*இல் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த நேரம். பார்ப்பனீயத்துக்கு எதிரான ம.க.இ.க. பாட்டெல்லாம் வந்த நேரம். ஆட்சி போனதால, கலைஞரும் ஆரிய எதிர்ப்பை இன்னும் தூக்கலாகப் பேச ஆரம்பித்திருந்தார். அந்தச் சூழலில் அய்யா இந்த விஷயம் பற்றிக் கூடுதலாகச் சிந்தித்தார். அவரது பேச்சிலும் அது அதிகம் வெளிப்பட்டது. எனவே, இதைத்தான் முதலில் எழுதணும் என்று முடிவெடுத்தார். மாலை அஞ்சாறு மணிக்கு அவரது அறையில் போய் உட்கார்ந்தோம் என்றால், கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்ல ஆரம்பிப்பார். முதலில் குறிப்புகளாகத்தான் எழுத ஆரம்பித்தேன். பிறகு கட்டுரையாகவே சொல்லத் தொடங்கிவிட்டார். இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் உட்கார்ந்தாலும் மூணு, நாலு பக்கம்தான் ஓடும். பேச்சு நிறைய இருக்கும். பொதுவாக அவர் ஒரு வார்த்தையைப் போட்டால், அதைவிடப் பொருத்தமான வார்த்தை யாருக்கும் தோன்றாது. அப்படியிருந்தும் ஒரு வட்டம் எழுதியதைத் திரும்ப வாசிக்கச் சொல்லுவார். இன்னொரு வட்டம் அவரே வாசித்துச் சில திருத்தங்களைச் சொல்லுவார். திருப்தியாக வந்ததும், இதை அப்படியே ஒரு நூலாக்கிடுவோம் என்றார். நான் அவரது அறைக்குப் போனது, அவரோடு பேசினால் நமக்கும் கொஞ்சம் அறிவு கிடைக்குமே என்பதற்குத்தான். அதே

நோக்கத்தோடும், வேறு வேலைக்காகவும் நிறைய பேர் அறைக்கு வருவார்கள். அதனால், எழுத்துப்பணி தடைபடும். எனவே, ஒரு சின்ன நூல் எழுதி முடிக்கவே பல மாதங்களாகும்.

அடுத்து 'பூனா ஒப்பந்தம்' பற்றி எழுதினோம். ஏனென்றால், அந்தக் கால கட்டத்தில் இரட்டை வாக்குரிமை பற்றிப் பேசப்பட்டது. இப்படி எழுதிய கட்டுரைகள் எல்லாம் ஒரு தொகுப்பாக வந்தது. இடையிடையே அறியப்படாத தமிழகம் கட்டுரைகளையும் சொன்னார். தெய்வங்களும் சமூக மரபுகளும் மற்றும் அறியப்படாத தமிழகம் புத்தகங்களில் கணிசமான பகுதி அய்யா சொல்லச் சொல்ல நான் எழுதியதுதான். 1997இல் அய்யா மனோன்மணியம் பல்கலைக்கழகத்துக்குப் போய்விட்டார். நெல்லை சென்ற பிறகு, கூடுதலாக ஓரிரு கட்டுரைகளை அய்யா சொல்லச் சொல்ல ஆ.இரா.வேங்கடாசலபதி எழுதி, அதை அறியப்படாத தமிழகம் புத்தகமாகப் பதிப்பித்திருக்கிறார். இப்படி கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் ஓடின. அப்பவும் கூட எழுதுவதற்காகவே அவ்வப்போது பாளையங்கோட்டைக்குப் போவதுண்டு.

ஒரு வரிக் கருத்தைச் சொல்கிறார் என்றால், அதற்குப் பின்னணித் தகவல்களையும், வரலாற்றுச் சான்றுகளையும் சொல்லிவிட்டுத்தான் அதைச் சொல்லுவார். அதுவும் போகிறபோக்கில் சொல்லிவிட மாட்டார். நிறைய அசை போட்டு, யோசித்துத்தான் சொல்லுவார். அதைக் கேட்பதற்கே அவ்வளவு சுவாரசியமாக இருக்கும். பார்வையாளர்கள் பலர், வந்த வேலையை மறந்துவிட்டு அவர் சொல்வதை ஆவென்று வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள். நான் மட்டுமல்ல அவரது நேரடி மாணவரான அழகு பாரதியும் இப்படி வந்து எழுதிக் கொடுப்பார். சில சமயங்களில் நாங்கள் ரெண்டு பேருமே சேர்ந்துகூட போவதுண்டு. இப்படி நிறைய மாணவர்கள் வருவார்கள். கொஞ்சம் அதிகமாக எழுதும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பிற்காலத்தில் பாளையங்கோட்டை ச.நவநீத கிருஷ்ணனும் நிறைய எழுதியிருக்கிறார். அவரது பெயரை 'பாளையங்கோட்டை' புத்தகத்தின் ஆசிரியர்களில் ஒருவராகப் போட்டுக் கௌரவித்தார் அய்யா. அவரசமாக சில கட்டுரைகள் எழுத வேண்டும் என்றால், அப்போது பக்கத்தில் யார் இருக்கிறார்களோ அவர்களை எழுத வைப்பார். அப்படிச் சில பேர் எழுதியிருக்கிறார்கள்.

அந்த ஏழு ஆண்டு, எட்டாண்டுகளை இப்போது நினைத்துப் பார்த்தாலும் ரொம்ப நெகிழ்ச்சியாகவும், பெருமிதமாகவும் இருக்கிறது. அவரது அன்பையும், அறிவையும் பெற்ற காலகட்டம். பாளையங்கோட்டையைத் தொடர்ந்து மதுரை கோட்டை வரலாற்றையும் எழுத விரும்பினார். ஆனால், எழுதவில்லை. தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றை எழுதத் தொடங்கினோம். தொல்காப்பியம் வரை எழுதியிருந்தோம். அவர் நெல்லை போன பிறகு அதைத் தொடர முடியாமல் போய்விட்டது. அதேபோல இளங்கோ மன்றம் என்ற ஒரு இலக்கிய அமைப்பைத் தொடங்கி, முப்பது காதைகளையும் முப்பது நாட்கள் அவரைப் பேச வைக்க வேண்டும் என்று நானும், தமிழ் பாரதியும் நினைத்தோம். அதுவும் நடக்காமல் போய்விட்டது. காரணம், அந்த நேரத்தில்தான் அய்யாவுக்கு அறுவை சிகிச்சை செய்யுமளவுக்கு உடல் நலம் கெட்டுப்போனது. அவர் நேரத்திற்குச் சாப்பிட்டதில்லை. குடும்பத்துடன் இல்லாததால், உடல்நலத்தில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. சில பேராசிரியர்கள் சமைத்தெல்லாம் சாப்பிட்டார்கள். ஆனால், இவர் அப்படியல்ல. அவருக்கு இயற்கையாகவே நல்ல உடம்பு. அதனால்தான் இவ்வளவு காலம் அவரால் தாக்குப்பிடிக்க முடிந்தது. அவர் கற்றுத் தந்த தோழமையையும், ஜனநாயகத் தன்மையையும் என்னுடைய மாணவர்களுக்கு

அளித்தால், அதுவே அய்யாவுடன் பழகியதற்கு அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று நினைக்கிறேன்'' என்றார் தமிழ்க்குமரன்.

ஆய்வாளர்கள் சிலருக்கு விளம்பர மோகம் இருக்கும். சில நேரங்களில் யாரோ

கண்டுபிடித்துச் சொன்னதை எல்லாம் தன்னுடைய கண்டுபிடிப்பு போல பதிவு செய்துவிடுவார்கள். அதேபோல தெரியாத விஷயங்களையும் தெரிந்தது போல பேசுவார்கள். ஆனால், தொ.ப. அப்படியல்ல. சமீபத்தில் வெளியாகி புகழ்பெற்ற 'சுளுந்தீ' வரலாற்று நாவலின் ஆசிரியர் இரா. முத்துநாகுவின் அனுபவம் இதற்கொரு சான்று. அய்யா மறைந்த இரு நாள் கழித்து, 'நீங்கள் தொ.ப.வை முதன்முதலில் சந்தித்த அனுபவத்தைச் சொல்லலாமா?' என்று கேட்டேன்.

"எப்படி இனக்குழுக்களுக்கான ஏற்றத்தாழ்வு வந்தது? தமிழன் எதிர் தெலுங்கன் என்று படித்தேன். நாயக்கர் ஆட்சிக்காலத்தில் சமூகக் கட்டுமானம் சரியாகத்தானே இருந்திருக்கிறது. பறையர் சமூகத்திற்கென்று சில பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள், பள்ளர் சமூகத்தினரை நீர்ப்பாசன அதிகாரத்தைப் படைத்தவர்களாகவும், நிலத்தை உழுவதற்கான அதிகாரம் பெற்றவர்களாகவும் இருப்பார்கள் என்று செப்புப் பட்டயம் சொல்கிறது, இப்படி ஒவ்வொரு இனக்குழுவுக்கும் ஒரு அதிகாரம் இருக்கிறபோது, அவர்கள் எந்த இடத்தில் அடிமைப்படுத்தப்பட்டார்கள் என்ற கேள்வி என்னைக் குடைந்துகொண்டே இருந்தது.

இதற்கான பதில் அறிவதற்காக மதுரையில் வசிக்கும் ஓய்வுபெற்ற பேராசிரியர் ராஜய்யனைப் போய்ப் பார்த்தேன். அவர், 'இதுவரை இதுபற்றி என்னென்ன புத்தகங்களைப் படிச்சிருக்க?' என்று கேட்டார். படித்ததைப் பூராம் கடகடவென ஒப்பித்தேன். 'நல்லா வாசிச்சிருக்கீங்க' என்று சொல்லி, வீட்டிற்குள் போய் மேலும் ரெண்டு ஆங்கிலப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு வந்து தந்தார். 'தீக்கொளுத்தி என்று சில ஊர்களில் சிலரைச் சொல்கிறார்களே? அவர்களின் பங்கு என்ன?' என்பது போன்ற சில கேள்விகளை அவரிடம் கேட்டேன். 'இந்த மாதிரியான கேள்விகளுக்குப் பதில் சொல்ல சரியான ஆள், தொ.ப.தான். காமராசர் பல்கலைக்கழகத்தில் போய்ப் பாருங்கள்' என்றார். அவரைத் தேடிப் போனேன். 'இப்போதுதான் ஒரு டூவீலரில் ஏறிப் போறாரு. டவுன் ஹால் ரோடு கோமதி லாட்ஜ்ல இருப்பாரு' என்றார்கள். உடனே டவுன் பஸ்சில் ஏறி அங்கே போனேன்.

கதரில் கருப்புச் சட்டையும், கதர் வேட்டியும் அணிந்திருந்தேன். தேய்க்காத உடுப்பு. காலையில் இருந்து அலைச்சல் வேற. பார்க்கவே பயங்கரமா இருந்தேன். காலில் செருப்பு கூட இல்ல. அய்யாவின் அறையைக் கண்டுபிடித்துப் போனேன். 'வணக்கம் அய்யா, இங்க தொ.ப.ங்கிறவரு?' என்று கேட்டேன். 'நான்தான்யா, என்ன வேணும். உட்காருங்க' என்றார். உடனே உட்கார்ந்துவிட்டேன். கதையை எல்லாம் சொன்னேன். 'ஏ... இவருக்கு டீ வாங்கிக் கொடுங்கப்பா' என்றார்.

ரொம்ப நேரம் பேச விட்டாரு. அப்ப சொன்னாரு, 'இதப் பூராம் எவனும் எழுதலையா... கடுமையாத் தேடியிருக்கீங்கய்யா... நீங்க எழுதுங்க' என்றார். அதற்குள் ரொம்ப நெருக்கமாகிவிட்டார். என் தோளில் கை போட்டு, 'என்னய்யா படிச்சிருக்க?' என்றார். 'ஜூவாலஜி' என்றேன். 'அதுனாலதான்யா நல்லாப் படிச்சிருக்க. தமிழ் கிமிழ் படிச்சிருந்தா இப்படியிருக்க மாட்ட' என்று வேடிக்கையாகச் சொன்னார். இப்ப நீ சொன்னதை எல்லாம் எழுது என்று சொன்னதுடன், வாசிக்க வேண்டிய புத்தகங்கள் பட்டியலைக் கைப்பட எழுதியும் கொடுத்தார். வீட்டு போன் நம்பரும் தந்தார். 'நீ சொல்கிற தீக்கொளுத்தி ஆட்கள் எங்க ஊர்லேயும் இருக்கிறாங்க. ஒருநாள் நீங்க வீட்டுக்கு வாங்கய்யா' என்றார். போனேன். தன் மனைவியை அழைத்து, 'தம்பி சாப்பிட்டுச்சான்னு கேளு' என்றார். உறவுமுறை சொன்னபோது நெகிழ்ந்தேவிட்டேன். எனக்கும் அவருக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. ஒரு சந்தேகம் கேட்டுப்போன என்னை அவர் நடத்திய விதத்திலேயே அவர் மீது மரியாதை ஏற்பட்டது" என்கிறார் இரா.முத்துநாகு.

•

## தொ.ப.வின் பெருமை

என்னுடைய பார்வையில், இளம் தலைமுறையை சினிமா, புனைகதைகளில் இருந்து பண்பாடு சார்ந்த வாசிப்பை நோக்கி ஈர்த்த ஆய்வாளர், எழுத்தாளர், பேச்சாளர் என்று சொல்லலாம். மதுரை புத்தகத் திருவிழா மற்றும் பசுமை நடை நிகழ்வுகளில் அவரது பேச்சை, சிந்தனைப் பொழிவைக் கேட்டு அவரது புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்தேன். மதுரையில் 15 ஆண்டுகளுக்கும் மேல் பத்திரிக்கையாளனாக இருந்தும், இவ்வளவு விஷயங்களைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறோமே என்று கூச்சப்பட்டு, மேலும் மேலும் வாசிக்கத் தொடங்கினேன். அதன்



தொடர்ச்சியாக தென்தமிழகம் குறித்த கதைகளை அறிந்துகொள்வதற்காக பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியனின் நூல்களையும் வாசித்தேன்.

தொ.ப. அய்யாவைப் பற்றி அவரது நெருக்கமான தோழர்களுடன் உரையாடியதில் இருந்து நான் அறிந்துகொண்டது, அவர் ஜனநாயகப் பண்பு மிக்கவர் மட்டுமல்ல, மன்னிக்கும் பெருங்குணம் கொண்டவர். அவருக்குக் கேடு செய்தோர் அறிவுத்துறையிலேயே அத்தனை பேர் இருக்கிறார்கள். யாரையும் அவர் பழிவாங்க நினைத்ததில்லை. தமிழகத்தில் அறிவுத்துறையில் இயங்குவோரிடமும் மென்மையான சாதிப்பற்று இருக்கும். தொ.ப. அப்படியல்ல. இளையான்குடி ஜாகீர் உசேன் கல்லூரியில் பணியாற்றிய நான்கு பேராசிரியர்களை நக்சலைட் மற்றும் தீவிரவாதத் தொடர்புடையவர்கள் என்று பணி நீக்கம் செய்தது கல்லூரி நிர்வாகம். அதில் தொ.ப.வும் ஒருவர். அப்படி வேலையிழந்த இரு இஸ்லாமியர்கள் உள்ளிட்டோரை அமைச்சர் தமிழ்க்குடிமகன் மதுரை யாதவா கல்லூரியில் வேலைக்கு அமர்த்தினார். தொ.ப.வையும் அப்படிச் சேர்த்துக்கொள்ள முயன்றார். ஆனால், அவரோ நான் வர மாட்டேன் என்று மறுத்துவிட்டார். அப்படி வந்தால், அது என் புலமைக்குக் கிடைத்த அங்கீகாரமாக அல்ல, ஜாதிக்குக் கிடைத்த மரியாதையாகத்தான் பார்க்கப்படும் என்றார்.

2005ஆம் ஆண்டில், இருதயப் பிரச்சினை காரணமாக, மதுரை மீனாட்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தொ.ப.வுக்கு அறுவை சிகிச்சை நடந்தது. அப்போது மதுரை யாதவர் கல்லூரியில் இருந்து குருதிக்கொடை கொடுக்க சிலர் முன்வந்தார்கள். “அண்ணனுக்கு இதெல்லாம் பிடிக்காது. தயவுசெய்து போங்க” என்று மதுரை ‘அன்பு அச்சகம்’ மாறன் உள்ளிட்ட தோழர்கள் விரட்டியே விட்டார்கள். கடைசியில் அய்யாவுக்கு ரத்தம் கொடுத்தது யார் தெரியுமா? நதீரா என்கிற ஈழப் பெண். க.சிவத்தம்பியின் மாணவி. க.சிவத்தம்பியின் பரிந்துரையின் பேரில் தொ.ப.விடம் ஆய்வு மாணவியாகச் சேர்ந்தவர். தொ.ப.வை சார் என்றும், அவரது மனைவி இசக்கியம்மாளை ஆன்டி என்றும் அழைக்கிற தமிழ்ப்பெண். தொ.ப.வின் மகன் பெயர் மாசான மணி, மகள் பெயர் விஜயலட்சுமி என்பது பலருக்கும் தெரிந்திருக்கும். மாசானம் என்பது தொ.ப.வின் மாமனார் பெயர். மணி என்பது தொ.ப.வின் ஆசானான சி.சு.மணியின் பெயர்.

இளையான்குடிக்குப் பிறகு, மதுரை தியாகராசர் கல்லூரியில் பணி கிடைத்தது. தன்னுடைய தீவிரச் செயல்பாடு குடும்பத்தினரைப் பாதிக்கிறது என்றபோதிலும் அவர், அதை முற்றாகக் கைவிடவில்லை. கொஞ்சம் எச்சரிக்கை உணர்வுடன் தொடர்ந்து செயலாற்றினார். இதனால்தான் பார்ப்பனீயம், புனா ஒப்பந்தம் ஒரு சோகக்கதை போன்ற நூல்களைத் தன்னுடைய சொந்தப் பெயரில் வெளியிடாமல், சிவக்குமரன் என்ற பெயரில் எழுதினார். அதில் சிவ என்பது அவரையும், குமரன் என்ற பெயர் அவரது மாணவன் தமிழ்க்குமரனையும் குறிக்கும். ஜெயலலிதா ஆட்சியில் கோயில்களில் ஆடு, கோழிகளைப் பலியிடத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதை எதிர்த்துப் போராடியவர் அவர். இத்தனைக்கும் அவர் சைவ உணவுக்காரர். ஈழப்பிரச்சினையில் திமுக அரசு கண்டும் காணாமல் இருப்பதாக வேதனைப்பட்ட அவர், செம்மொழி மாநாட்டிற்குக் கலைஞர் கருணாநிதியே அழைத்தும் செல்ல மறுத்தார். தன்னை 95 சதவிகிதம் பெரியாரிஸ்ட் என்று அறிவித்துக்கொண்ட அவர், சிறுதெய்வ வழிபாடு, பண்பாடு சார்ந்த விஷயங்களில் பெரியாருடன் முரண்பட்டார். அறிஞர் அண்ணா ஒன்றே தெய்வம் என்று சொன்னதையும் அவரால் ஏற்க முடியவில்லை.

ஒரு ஆய்வு எப்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு அவரது அழகர்கோயில் நூல் ஒரு கையேடு. தொ.ப. மறைந்திருக்கலாம். அவரின் வழிகாட்டுதலுடன் ஆய்வு செய்கிற வாய்ப்பு சில மாணவர்களுக்கு மட்டுமே கிடைத்திருக்கலாம். ஆனால், மறைந்த பிறகும் அவர் மாணவர்களுக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்துக்கும் வழிகாட்டியாகத் தொடர்வார். ■

● எம். எம். தீன்
● ஓவியங்கள் - அழ.ரஜினிகாந்தன்

# மைக்கண் வானம்

**மை**ம்பாத்து திண்ணையில் உக்கார்ந்து வேகவேகமாகப் பீடி வாய் மடக்கிக் கொண்டிருந்தாள். நேத்து ராவு வெள்ளிக்கிழம ராவாயிட்டதாலே மஸ்தாங்கிய தைக்கா போயிட்டு வந்து ஓதிக் கொண்டிருந்து விட்டாள்.

பஜ்ருக்கு பாங்கு சொல்ல உக்காந்தான்னா, கண்ணு மசங்குரதுக்குள்ள ரெண்டாயிரம் பீடி திண்ணயில காஞ்சிக்கிட்டு கிடக்கும். அப்படியே வாயெ மடக்கிக்கிட்டே உலையும் வச்சி சோறும் ஆனமும் தயாராயிடும். இன்னிக்கு சனிக்கிழமை பீடியெக் கொடுத்துட்டு இலத்துாள் வாங்கியாரணும். விரல்கள் இயந்திரம் போல இயங்கிக் கொண்டிருந்தன.

மேலூட்டுக்காரரு அசன்காக்கா அவுரோட உடப் பிறந்தாமாரோடு அவள் பீடி சுற்றிக் கொண்டிருக்கும் திண்ணையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அசனோட மூத்த காக்கா இப்ராயிம் எப்பவும் போல மக்காத் துண்டு கழுத்தைச் சுற்றிக் கிடக்க கையில் தப்சு மணியை உருட்டியபடி வந்து கொண்டிருந்தார். அவரின் நிழலைப் போல பணிவாக வந்தார்கள் அசன்காக்காவும் கடைக்குட்டியும்.

முற்றத்து ஓட்டிற்கும் உத்திரத்திற்கும் இடைப்பட்ட ஓட்டைக்குள் ஐந்து நாட்களாக சிட்டுக்குருவி ஆணும் பொண்ணுமாகக் குச்சிகளையும் மரநார்களையும் ஒவ்வொன்றாகச் சேர்த்து கூடு வனைந்து கொண்டிருந்தது. அவளைப் போலவே வாழக்கைத் தேடல்களுக்காய்ச் சுற்றி அலைந்து திரியும் அவள் வீட்டு ஜென்மங்கள் அவைகள். அத்தனை கஷ்டத்தோடு அவைகள் கூடு கட்டுவதைப் பார்க்கும்போது மலைப்பாய் இருந்தது.

அவர்கள் அருகில் வருவதைப் பார்த்து பீடித்தட்டில் ஈரத்துணியைப் போட்டுவிட்டு தலையை முக்காடிட்டுக் கொண்டாள். "மைம்பாத்து, உன்ன சின்னப்புள்ளையிலேருந்தே தெரியும். அமைதியான சீதேவி நீ. ஒன் ஆட்டுக்காரன் அதுக்கும் மேலே. அதான் நேர்ல வந்து சொல்லிட்டுச் செய்யணும்னு வந்திருக்கோம்மா," என்றார் பெரியவர்.

"என்னா விசயம் சொல்லுங்கோ பெரியவங்களே" என்றாள்.

"ஒண்ணுமில்லே மைம்பாத்து. ஒனக்குத் தெரியாத ரோசனையா, நம்ம அசன் மவன் வெளிநாட்டுல இருக்கான்ல, அவன் என் உடன்பிறந்தானுக்குப் பணம் அனுப்பி வூடு கட்டச் சொல்லியிருக்கான். நீயும் ரெண்டு குமர வச்சிக்கிட்டு இருக்கே. அதான் பொதுச்சுவர எடுக்கணும். ஒன் வூட்ட பிரிக்க வேண்டி வரும்லா. மேவிட்டுத்தானே வேலைய ஆரம்பிக்கணும். அதான் சொல்ல வந்திருக்கோம்."

மூவரும் வெவ்வேறு திசைகளைப் பார்த்தபடி

மௌனித்தார்கள். அந்த அமைதி அந்த இடத்தில் ஒரு புழுதிப்புயல் போலச் சுழன்று கொண்டிருந்தது. “ஒங்களுக்குத் தெரியாதது ஒண்ணுமில்லே. உங்க வூட்ட கட்டுறதுக்கு நாங்க இடைஞ்சலா இருக்க மாட்டோம். என்னன்னா மழக்காலம் வருது. ஆபூத்து தொறந்து கிடந்தா நாங்க எங்க ஒண்டுறது. நான் வூட்டுக்காரர்ட்ட பேசிட்டு சொல்றேங்க. நீங்க வூடு கட்டுறத சட்டுன்னு கட்டி எனக்குப் பழைய மாதிரி வூட்ட கட்டித் தந்தரணுமில்லா.”

“மைம்பாத்து அதுல்லாம் ஊர்ல என்ன நடைமுறையோ அதெப் பேணி செஞ்சுக்குவோம்”, என்று சொல்லிவிட்டுப் போனார்கள். மேலப்பாளையம் ராவுத்தர் ஜமாத்திலும் மேவி எல்லோரும் சீக்கிரம் வீட்டக் கட்டி பழையமாரி கொடுத்திரணும்னு பேசி முடித்தார்கள்.

நெசவாளர் வாழும் ஊர்களிலெல்லாம் வரிசையாக வீடுகள் இருபக்கமும் பொதுச் சுவரால் கட்டப்பட்டிருக்கும். யாருக்கும் சொந்தச்சுவர் கிடையாது. இப்போது ஓட்டு வீடுகள் எல்லாம் மட்டப்பா வீடுகளாக மாறி வருகின்றன. அப்பிடி புதிதாகக் கட்டுகிற போது அடுத்த வீட்டு ஓட்டுக்கைகளையும் ஓட்டையும் பிரித்துத் தன் வீட்டைக் கட்டிவிட்டு அவர்கள் வீட்டு உத்திரம் கைகள் எல்லாவற்றையும் பொதுச் சுவருக்குள் வைத்து பழைய மாதிரி கட்டிக் கொடுப்பது இன்றும் வழக்கத்தில் இருக்கிறது. அப்படி புதுவீடு கட்டுற வரைக்கும் பக்கத்து வீடு ஓடுகள் கைகம்புகள் எல்லாம் ஒரு புறம் பிரித்து வானவெளியாய் கிடக்கும். மழையும் வெயிலும் ஊட்டுக்குள்ளார இருக்கும். பாதுகாப்பும் இருக்காது. கலவரத்துல உடைஞ்ச வீடு போல பரிதாபமாகக் கிடக்கும். காலங்காலமாக இப்படித்தான் நடந்து வருகிறது.

மைம்பாத்து வூட்டுக்காரரு சென்னை அன்னபூர்ணாவில் அசைவ சமையல் மாஸ்டரா இருக்காரு. அவர்ட்ட கேட்டதுக்கு “ஊர்க்கட்டு என்னமோ அதுபடி நடந்துக்க சொல்லு. கொந்துக்காரங்கள்ட்டயும், வட்டாரத்துலயும் சொல்லி அவங்கள சீக்கிரமா வேலயெ முடிச்சி வூட்ட பழைய மாரி தரச்சொல்லு”, என்று பொறுதியோடு சொல்லிவிட்டார். இது குறித்து வூட்டுக்காரரு அவரு பிரண்டுமார்ட்டயும் பேசி நீங்களும் போய்ப் பாத்து கைரான முடிவெடுங்கோன்னு சொன்னதாகச் சொன்னார்.

ராவோடு ராவாக வீட்டில் உள்ள தட்டுமுட்டுச் சாமான்களை எல்லாம் ஏற்கெனவே வாடகைக்குப் பேசி வைத்திருந்த எதிர்சிறகில் வட்டாரத்தைத் தாண்டிய வீட்டில் வைக்கும் வேலை மும்முரமாக நடந்தது.

சீக்கிரத்தில் உலகம் அழிஞ்சிப் போகும்னு யாரும் சொன்னாங்களோ என்னவோ, அதிகாலையிலேயே ஆட்களை அனுப்பி அவர்களது வீட்டைப் பிரிக்க ஆரம்பித்தார்கள். ஏழெட்டு ஆட்கள் என்றதால் மதியத்திற்குள் மேவீட்டைப் பிரித்து மைம்பாத்து வீட்டுப் பனங்கை உத்திரங்களில் பெரிய கம்புகளைத் தூணாகச் சொருகிவிட்டு பொதுச்சுவரை ஒட்டிய ஓடுகள், பட்டைகள், பனங்கம்புகள் என ஒவ்வொன்றாய்ப் பிரித்து வீட்டை முற்றத்தில் போட்டார்கள். வீட்டுக்குள் தூசியும் தும்புமாய்க் கிடந்தது. மைம்பாத்து அசன்காக்காவைக் கூப்பிட்டு, “ஏங்கோ, ஏங்கிட்ட சொல்லிட்டு வூட்டைப் பிரிச்சா என்னாங்கோ, எந்தச் சாமானத்தையும் எடுத்து வைக்காமெ எங்க வீடு சீரழியுதே,” என்றதற்கு, “மைம்பாத், ஒண்ணும் தப்பா நினைச்சிக்கிராதெ, சீக்கிரமா வூட்ட உனக்குச் செப்பனிட்டுக் குடுக்கணுமில்லா, அதான்”, என்று சொல்லிவிட்டு ஏளனமாகப் புன்னகைத்தார்.

மைம்பாத்து அதற்கு மேல் பேச விரும்பாமல் ரெண்டு குமரிப் புள்ளகளோடும் சேர்ந்து எல்லா ஏனங்களையும் சாமானத்தையும் கீழோரமாக ஒதுக்கி வைத்தார்கள். மைம்பாத்து புள்ளைகள் எதுவும் நடக்காததைப் போல மௌனமாக சாமான்களை ஒதுக்கி வைத்தபடி இருந்ததைப் பார்த்தபோது அவளுக்குக் கொஞ்சம் பெருமிதமாக இருந்தது. அன்றிரவு வரை வீட்டை ஒதுங்க வைத்து தூசி தும்புகளைப் பெருக்கி விடுவதற்குள் போதும்போதுமென்றாகி விட்டது.

குமரி புள்ளைகளப் பக்கத்தில் படுக்க வைத்து, இருண்ட வானத்தைப் பார்த்தபடியே தூங்கிப் போனாள். அதிகாலை எழுந்து பஜ்ரு தொழுகையைத் தொழுதுவிட்டு, டீ போட்டுக் குடித்துவிட்டு பீடித்தட்டில் உட்கார்ந்து விடுவாள். அன்று அசதியில் தூங்கிப் போனவள் கண்களைத் திறக்கையில் வெளிச்ச வானம் அவளைப் பார்த்தபடி இருந்தது. நாலே நாலு நீர்க்காக்கைகள் தாழமாகப் பறந்து மெதுவாக இறக்கைகளை அடித்துப் போனது. பக்கத்தில் கிடந்த பொட்டைகள் வெள்ளென எந்திரிச்சி உம்மாவுக்கு டீ போட்டு வைத்துவிட்டு வேலசோலியைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்து பாயைச் சுருட்டியபடி எழுந்தாள். சாராவும் சபுராவும் உம்மாவைப் பார்த்துச் சிரிக்க அவளும் தலையைக் குனிந்தபடி சிரித்துக் கொண்டாள்.

சொன்னபடிக்கு மேவூட்டுக்காரர்கள் வேலைகளை வேகமாகச் செய்யவில்லை.

கேட்டால் கொத்தனார் வரவில்லை, சாமான் கிடைக்கவில்லை எனச் சாக்கும் போக்கும் பதிலாக வந்தது. மைம்பாத்து அதிகம் வாய் தொறக்கவில்லை. அல்லா விட்டது வழியென முக்காடிட்டு துஆ செய்து கொண்டாள்.

மூன்று மாதம் ஓடியும் லிண்டல் மட்டம்தான் வந்தது. மழைக்காலத்திற்குள் தன் வீட்டைச் சீர்திருத்தித் தந்து விடுவார்கள் என்று எண்ணியதில் மழை விழுந்தது. மழையும் பாட்டம் பாட்டமாகப் பெய்து கொண்டிருந்தது. பேய்மழை என்பதின் அர்த்தம் விளங்க பல இரவுகள் குளிரில் நடுங்கியபடியும் தூக்கமின்றிக் கழிந்தது. சபுராவுக்கு சளியும் காய்ச்சலுமென்றால், சாராவுக்கு சூட்டு இருமல் வாட்டி வதைத்தது. நூருல்லா டாக்டர் வீட்டிற்குப் பல தடவைகள் போய் வந்தும் நின்றபாடில்லை.

அம்பது வருசத்துக்கு முன்பு பாவிய செங்கல் தரைகள் முற்றிலுமாக நனைந்து பொரிய ஆரம்பித்தன. நனைந்து நனைந்து பனை உத்தரங்கள் வளைய ஆரம்பித்தன. அசன் காக்காவிடம் சொல்லியதற்குக் கண்டும் காணாதது போல இருந்தார். ஒரு வழியாக கொந்து ஆட்களிடம் மேவியதில் அவர்கள் மூணு வருடத்திற்கு முன்பு ராவுத்தர் தெருவில் பக்கத்து வீட்டு ஓட்டுக்கைகள் இடிந்து விழுந்ததில் இரண்டு பேர் இறந்து போனதைச் சொன்னதில், அப்படி ஏதும் அசம்பாவிதம் நடந்துவிடக்கூடாதே எனப் பயந்துபோய், வேணாவெறுப்பாய் அசன் காக்கா துணைக்கம்புகளைத் தூணாக்கிக் கொடுத்தார். வீடு ஏதோ அதிசயமாய் அல்லாண்டு நின்றுகொண்டு இருந்தது.

அசன் காக்கா தன் வீட்டைக் கட்டுகிற மும்முரத்தில் கீவீட்டைச் செப்பனிட்டுக் கொடுக்கணும் என்று எண்ணவில்லை. எட்டுமாதத்தில் அசன் காக்கா கீழ்வீட்டையும், மெத்தையையும் கட்டியிருந்தார். மைம்பாத்துவின் கோரிக்கைகளையோ, ஏறிட்ட பார்வைகளையோ புறந் தள்ளினார். அவர் வீட்டு வேலைகளை முடித்து வெள்ளையடிக்கிற சமயத்தில் மைம்பாத்து வீட்டுக் கைகளைப் பொதுச்சுவரில் விட்டு வைத்திருந்த ஓட்டைகளுக்குள் சொருகி ஓடுகளைப் போட்டுக் கொடுத்தார். வேணா வெறுப்புடன் பலரும் சொன்ன பிறகு நடுவீட்டு பேந்து கிடந்த செங்கல் தரையை மாற்றி சிமிண்டு போடச் சம்மதித்தார். எந்தக் கோடையிலும் குளிர்ந்து கிடக்கும் செங்கல் பாவுன தரையில் வெறும் சிமிண்டு போடப் போவதைப் பார்த்து, பழைய மாதிரி சிவப்பாக இருக்கட்டுமே என்று எண்ணி மைம்பாத்து தனது கையிலிருந்து ரெட்ஆக்சைடு வாங்கிக் கொடுத்தார்.

ஒரு வழியாக மச்சு வீட்டை அழித்து குச்சு வீடாக்கின கதையாகத்தான் இருந்தது மைம்பாத்துவின் வீடு. "என் வூட்டையும் எடுத்துக் கட்ட வழி விடு ஆண்டவா," என்று வேண்டிக்கொண்டாள்.

அசன் காக்கா வீட்டு முன்முகப்பை உயர்தரமான வண்ண டைல்ஸ்களால் அழகாக்கி இருந்தார். வீட்டிற்குள் பெயிண்டிங் வேலை நடக்கும்போதே பால்காய்ச்சுவதற்காக வீட்டை சீரியல் பல்புகளால் அலங்காரம் செய்தபடி இருந்தார்கள்.

அசன் காக்கா சாய்தா ஏதும் கேட்காமல் பெயருக்குச் சொல்லிவிட்டுப் போனார். காலையில் இன்னிசை கீதம் பாட புதுவீட்டின் பால்காய்ப்பு நடந்தபடி இருந்தது. மைம்பாத்து பீடிக் கடைக்குப் போயிருந்தாள். அசன்காக்காவின் மூத்த காக்கா சடையன் அப்துல்லா மைம்பாத்து வீட்டுக்குள் வந்து நல்லா செம்மையா கட்டிக் கொடுத்திருக்கானே என்றும் சிவப்பு எப்படி பளபளப்பாக இருக்கிறது என்று பெருமிதமாகச் சொன்னார்கள். குமரிப் புள்ளைகள் எதுவும் பேசவில்லை. அமைதியாக நின்றதைப் பார்த்தபடி வேறெதுவும் சொல்லாமல் வெளியேறிப் போனார்.

மைம்பாத்து பீடிக்கடை போய்விட்டு வீட்டுக்குச் சாமான்கள் வாங்கியபடி வீட்டுக்குள் நுழைந்தாள். பிள்ளைகள் சாமான்களை வாங்கி காலைப் பசியாரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

எதிர்வீட்டு கைசாம்மா பால்காய்ச்சு வீட்டில் சாப்பிட்டுவிட்டுக் கையைச் சேலையில் துடைத்தபடி மைம்பாத்து வீட்டிற்குள் நுழைந்தாள். "ஏ, மைம்பாத்து, புதுவீட்டுக் கிரகப்பிரவேசத்திற்குப் போகலியா," என்றாள்.

"அல்லா கிருபையில நல்லபடியா நடக்கட்டும். பால் பொங்குறது போல புதுவீடு பொங்கி நல்லபடியா இருக்கட்டும்," தலை முக்காட்டைஇழுத்தபடி சொன்னாள்.

"எனக்க சாய்தா சொல்லல," என்ற மைம்பாத்து மேலும் தொடர்ந்தாள்.

"என்ன கைசாம்மா, ஒண்ணும் தெரியாத மாதிரி கேக்க, அவுங்க சடையன் குடும்பத்துக்கும், எங்க சீமாட்டி குடும்பத்துக்கும் உறவு ஒண்ணுமில்லையே. பொறவு எப்டி சாய்தா கேப்பாங்க, அவுங்க வூட்டுக் காரியம். நல்லபடியா நடக்கட்டும். என்ன நா சொல்றது," என்றதைக் கேட்டபடி தன் வீட்டை நோக்கிப் போனாள் கைசாம்மா.

மதியம் சாப்பாட்டிற்காக ஸ்டவ்வைப் பற்ற வைத்தாள் மைம்பாத்து. ■

● வீரசோழன் க.சோ.திருமாவளவன்

# வெளிச்சப்பூக்களை ஏந்தும் கவிதைகள்

**நூல் - சன்னத்தூறல்**
**ஆசிரியர் - பேராசிரியர் ம.கண்ணம்மாள்**
**வெளியீடு - டிஸ்கவரி புக் பேலஸ்**

பேராசிரியர் ம.கண்ணம்மாள் குந்தவை நாச்சியார் மகளிர் கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக பணிபுரிபவர். தமது கவிதைகளைச் "சன்னத் தூறல்" எனும் பெரும் படைப்பு மூலம் கொண்டு வந்து கவிதைச் சமூக வெளியில் விதைத்தவர். கவிதைகள் மூலம் எல்லோர் மனதிலும் கவிதைக் குடில் அமைத்தவர்.

இவர் சொல்லும் கவிதையின் அழகும் ஆழமும் தனித்துவமானது. ஒவ்வொரு கவிதையும் வெளிச்சப் பூக்களை ஏந்துகிறது.

பெண் கவிதை உலகில், அதன் பரவெளியில் தனித்துவமாய் மிளிர்கிறார். அவர் கவிதைகள் நின்று நிலைத்துப் பேசும் தன்மையை உடையன. தமிழ்க்கவிதை வரலாற்றில் இவரது மொழியும் புலமையும் அபாரமானது.

ஒவ்வொரு வரியையும் காதல் மொட்டுக்களால் பிணைத்துக் குழைத்து மாலையாய்க் காதல் கவிதைகளைத் தந்திருக்கிறார். கவிதைகள் காதல் சுடர் ஒளியேந்தி நிற்கின்றன.

அவரது கவிதைகள், சங்கப்பாடல்களின் மனச்சித்திரமாக மிளிர்கின்றன. அவை உணர்வோடு பின்னப்பட்டு நுட்பமான வாழ்வியலைப் பேசுகின்றன. பிடித்ததை அதன் தொன்மையோடு பிடித்தமான மொழியில் பேசுவது சிறப்பு. மனதின் பெரும் ஆரவாரத்தை மொழியாக, கவிதையாக படைத்திருக்கிறார். தற்போது எழுதும் பெண்களுக்கான கவிதை வரலாற்றில், சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் நீட்சியாய்ப் பரிணமிக்கிறார்.

..

ஒரு சொல்லுக்காய் நிற்கும் மனது என்ன செய்யும்.. காதலும் காதல் சார்ந்த இடமும் பேரன்பைச் சுமக்கும். பேரன்பின் சுமை சுகமானது. சொற்களை, அதன் தன்மையை, மனதை, பேருண்மையைப் பேசுகிறது இக்கவிதை.

'ஒரு சொல்லைத் தேடுகிறேன்
கணப் பொழுதில்
மனம் சிதைந்தாலும்
துயரம் கைநீட்டி இறுக்கும்
கழுத்தை வளைக்கும்
பொழுதுகளை இழக்க நேரிடும்
இதுவரை காத்திருந்தது போதும்
துயரங்கள் களைய
வழி தேடிக் களைத்தமர்கையில்
உணர்ச்சியற்ற கல்லாய்
உருமாறி நின்றால்
அது உன்னைத் தீண்டாதென
பொழுதுகள் செப்பின.'

இயற்கையோடு இணைந்து காதலையும், காதலுக்கான சந்திப்புகளையும் விவரிக்கும் அழகில் கூடுதலாய்ச் சேர்ந்து விடுகிறது கோடை மாலை. மனிதர்களின் பிரியத்திற்காக என உருவான புதுமொழியில் காதலை விரிக்கிறார்.

தானே யதார்த்தமாய் நிகழக்கூடிய சிறு நிகழ்வில் காதலின் மனதைக் கவித்துவமாய் விவரித்துச் சற்று பிரளயம் நிகழ்த்துகிறார்.

'வெக்கை தணியாத
கோடை மாலையில்
யாரோ வந்து அண்டி நிற்பதற்காக
வண்டும் தேனீயும் பறவையும்
கிறங்கிக் கொண்டாடும் ஒரு மரம்
உதிர்ந்த பூவோடும்
உதிராத பூவோடும்
உச்சாணிக் கிளையசைய
மௌனமாய்க் காத்துக்கொண்டிருக்கிறது
மனிதர்களின் பிரியத்திற்காக
மணித்துளிகளைக் கடத்தி'

காலம் எப்படியானது என்பதற்கும், காதலின் நினைவுகளும் அதன் சுவடுகளும் எப்படியானது என்பதற்கும் காதல் ஊறிய வார்த்தைகளைக் கண்டெடுத்து கவிபாடி அர்த்தப்படுத்துகிறார்.

'மிச்சப் பொழுதேனும்
நீ வேண்டும்
பேரன்பாய்ப் பெருகும்
வெறியில்
மன்றாடி நிற்கிறேன்
நான்.'

பெரும் காதலின் உணர்வுக் குவியல்களைத் தனது சித்திர எழுத்தால் அதன் சூடு குறையாமல் கவிதையாகப் பொழிகிறார்.

காதல் வெதுவெதுப்பான கூடுகளால் தன்னையே உருக்கும். கவிஞரின் வரிகள் காதலின் சுவடுகளையும் காலத்தையும் மலரச்செய்கின்றன.

'அன்பில் நிறைந்து
வழிகிறேன்
என் நெஞ்சுருகி
உள்ளெலும்பு துளைத்து
புகுகிறாய்
உச்சந்தலையில்
உன் கனவுகளால்
ஏந்திக்கொள்கிறாய்
உன்னிடம்
தாழ்ந்துதான் போகிறேன்
இருந்து போகட்டும்
ஆன்மாவில்
தாழ்ந்து போதல்
அழகுதான்.'

காதல் சுடரிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளில் காதல் நதியாய்ப் போகிறது. அவற்றில் கெஞ்சலும், கொஞ்சலும் கூடியே அரவணைப்பு செய்கின்றன. "நெகிழ்தலற்ற சுடு மண்ணில்" என்று புது சொல்லாடலை அதன் மொழியைப் பேசுகையில் கூடுதலாய் அந்தப் பேரன்பையும் பேசிச் செல்கிறார்.

'புன்மை நிலை யாரறிவார்?
பாலை நிலமாய்ப் பிளவுண்டு
நெகிழ்தலற்ற சுடு மண்ணில்
செம்பூக் கை கொண்டு
வில்லெறிந்து ஆடுகிறாள்
தமிழ் நிலத்தினாள்.'

காதல் ஒரு இனிப்புக்கூடு. அதன் கூடுகளுக்குள் நுழைந்ததும் கிடைக்கும் பேரின்பம் அபரிதமானது. ஒவ்வொரு நிமிடத்தையும் பொக்கிச முத்துக்களால் சேமிக்கலாம். காதல் என்பவே நினைவுகளின் சேமிப்புதானே.

'நினைவில் நீந்தும்
கலையாத சொற்கள்
நாடோடியாய் அலைவதில்லை
அது
சலனமற்ற மனங்களின் ஊடே
புகையாய் ஒளிந்திருக்கிறது.'

வெறுமனே வார்த்தைகளைக் கவிதையாக்காமல், சங்க காலத்தின் நீட்சியாய், தலைவன், தலைவி தமக்கிடையில் பேசும் மந்தகாச நிலையில் மொத்தக் காதலையும் படைக்கிறார். "முற்றின வேம்பின் அசையும் உயிர்க் கிளை" என்று எழுதுகிறார். அதனுள் இருக்கும் மொழி மனதின் அடிச்சுவட்டைப் பற்றுகிறது.

'குறுங்காஞ்சிப் பூவின்
கிளையசைத்து உடல் வருடும்
பூங்காற்றில்
சலித்தெடுத்த வெண்மணலை
குவித்தழகு பார்த்து
குறுமுறுவல் கொள்வாள்.'

ஒவ்வொரு கவிதைக்கும் கவிஞர் தரும் மொழியும் உணர்வும் உயிர் திருடும் வார்த்தைகளும் விளைச்சலாய்க் காதல் நிலமெங்கும் விளைந்து இருக்கின்றன.

கவிஞரின் உள்ளக்கிடக்கைக்குள் விரியும் வரிகள் காதலின் சொர்க்க வாசலை அடையாளம் செய்கின்றன. அவரின் மொழி பேசும் நளினங்கள் யதார்த்த வாழ்வியலை, இயற்கையோடு இணைத்து ஆனந்தமாய்ப் பேசுகின்றன.

'இளம் சூரியன் மறைந்து
நெருப்புக் கோளத்தில்
என்னைப் புகுத்தித் தசைகளெல்லாம்
எரிவது போல் உணர்வு எக்காளமிடும்
அன்பெனும் அகண்டம் மறைந்து
கொடும் பேய் கைவிரித்து ஆட்சி செய்யும் நிலையில்
பயணம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது
முகவரியைத் தேடி!'

கவிஞரின் சில கவிதைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. தன் கவிதை வரிகளால் புது மொழியால் சங்ககாலத்தின் தொன்மையை வெளிச்சமேற்றுகிறார். ஐவகை நிலம் தமிழர்களின் வாழ்வியலைப் பேசுகிறது. "நிலத் தாயாக சுவரோவியச் சிற்பமாக" என்று மொத்த உலகத்துக்குமான வாழ்வியலை வரைந்து உருகி உருகி காதல் இழையை நெய்கிறார்.

'சிலிர்ப்புற்றதில்
கடும் வெம்மை இல்லாமற் போனது
அவளை எல்லோரும்
தமக்குள் பேசி ரசித்து
ஒவ்வொரு இழையாக
நெஞ்சுக் குழியில் அழுத்தி
தத்தம் வம்சப் பின்னோருக்கு
முன்னிறுத்திக் காட்ட
இவள் உயிர் பெற்றால் எப்படியிருக்கும்
என வியந்தோர் நடுவில்
அவள் ஓர் நிலத் தாயாக
சுவரோவியச் சிற்பமாக
வரையப்பட்டிருந்தாள்.'

தொடர் 1

● மு.முருகேஷ்

# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

காலம் தன் கைகளில் தராசினை உயர்த்திப் பிடித்தபடி கம்பீரமாக நிற்கிறது. வீசும் காற்றில் தராசுத் தட்டுகளில் ஒன்று மேலேயும் மற்றொன்று கீழேயுமாய் மாறி மாறி ஏறி இறங்குகின்றன. எப்போது எந்தத் தட்டு மேலேறும் என்றோ, எந்தத் தட்டு கீழிறங்கும் என்றோ யாருக்குமே தெரிவதில்லை. ஏன்... காலத்திற்கே கூட இந்தக் கணக்கு தெரிவதில்லை.

காலக்காற்றில் உதிரும் சருகென பலரின் வாழ்வு முடிய, சிலரின் வாழ்வோ இலையாயிருக்கையிலேயே சட்டென மண்ணில் உதிர்ந்து விழுகிறது. 'அய்யோ... காலத்திற்குக் கண்ணில்லாமல் போச்சே..!' என்று நாம் கதறுவதையும் கண்கொண்டு பார்த்தபடியே இருக்கிறது காலம்.

இந்த மண்ணில் வாழும் காலங்களை மட்டுமே மனிதர்கள் வாழ்ந்த காலமெனக் கணக்கில் கொள்கிறார்கள். அதனால்தான் மனித இறப்பை, 'காலமானார்' என்று சொல்லி, கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறார்கள்.

பிறப்பு, இறப்பு என்று சொல்வதெல்லாம் மனிதர்களுக்கு மட்டுமே பொருந்தும். ஆனால், மனிதன் படைத்த படைப்பிற்கு இது பொருந்துவதில்லை. ஒரு மனிதனால் எழுதப்பட்ட படைப்பு, எழுதிய கணத்திலிருந்தே தன் வாழ்வைத் தொடங்கிவிடுகிறது.

அந்தப் படைப்புக்கு மரணம் என்பதே கிடையாது. அந்தப் படைப்பில் வெளிப்படும் சத்தியத்தின் பேரொளியே அதன் வாழும் காலத்தை வரையறுத்துக் கொள்கிறது.

எழுதும்போதே சில படைப்புகள் மரணித்துப் போகின்றன. எழுதிய படைப்பாளியின் கண்முன்னே சில படைப்புகள் செத்துப் போகின்றன. மிகச் சிலவே படைப்பாளியின் மரணத்திற்குப் பின்னும், காலங்கடந்தும் வாழ்கின்றன. இதில், சில படைப்புகளைப் படைப்பாளியே கொன்றுவிடுவதும், சில படைப்புகள் படைப்பாளியையே கொன்றுவிடுவதும் நிகழ்வதுண்டு. ஒரு படைப்பாளிக்குத் தன் வாழ்வின் கடைசி நாள் எதுவெனத் தெரியாதோ, அப்படித்தான் தன் படைப்பின் வாழும் காலமும் தெரியாது. ஆனாலும், தனக்குப் பின்னும் வாழ வேண்டுமென்கிற பெருவிருப்பத்தோடுதான் ஒவ்வொரு படைப்பாளியும் எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் வாழும் பெரும்வாழ்வு கொண்டவை படைப்புகள். 'படைப்பதனால் என் பெயர் இறைவன்' என்றார் கவியரசர் கண்ணதாசன். அப்படியான இறைவன்கள் படைத்த படைப்புகள் இறவாப் புகழோடு இன்றளவும் படிக்கப்படுகின்றன, பாராட்டப்படுகின்றன. காலத்தின் தோள்மீது ஏறி நின்று, படைத்தவன் பெயரை உரக்கச் சொல்லிக்கொண்டே இருக்கின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்து, இன்றளவும் பேசப்படுகிற உலகப் புகழ்பெற்ற ஆங்கில இலக்கியத்தின் மகாகவிகளான மூவர், மிகக் குறுகிய காலமே வாழ்ந்தவர்கள். தங்கள் வாழ்வைச் சுருக்கி,

தங்கள் படைப்பின் வழியே வாழ்வை நீட்டித்துக்கொண்டவர்கள். ஜான் கீட்ஸ் (1795-1821) 25 வயதிலும், பெர்சி பைஷி ஷெல்லி (1792-1822) 29 வயதிலும், லார்ட் பைரன் (1788-1824) 36 வயதிலும் மண்ணுலக வாழ்வை நிறைவு செய்த மகாகவிகள்.

இலண்டனிலுள்ள மூர்கேட்டில் பிறந்தவர் கீட்ஸ். இவரது கவிதைகளில் புகழ் மிக்க ஆங்கில கவிஞர்களான ஜான் மில்டன், ஷேக்ஸ்பியர் ஆகியோரின் தாக்கம் இருப்பதாகத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். தான் படித்த மருத்துவக் கல்வியோடு ஆங்கில இலக்கியங்களையும் ஆழ்ந்து கற்றறிந்தவர் கீட்ஸ். வகுப்பில் ஆசிரியர் பாடங்களை நடத்தும்போது, இவர் மட்டும் தன் குறிப்பு நோட்டில் கவிதைகளை எழுதிக் கொண்டிருப்பாராம். கீட்ஸ் தான் எழுதும் மருத்துவக் குறிப்புகளைக்கூட கவிதையாகவே எழுதுவாராம்.

ஒருமுறை உற்சாகமான கவிதை மனநிலையில் இருந்த கீட்ஸ், தனது நோயாளிக்குப் போட்ட பேண்டேஜ் மீது ஒரு நீண்ட கவிதையை எழுதினாராம். அப்படியான கீட்ஸின் கவிதைகள் இன்றைக்கும் உலகெங்குமுள்ள கவிதை ஆர்வலர்களால் படிக்கப்படுகின்றன. கவிதைத் திறனாய்வுக்கு மிகுந்த பயனளிப்பதாகவும் உள்ளன.

ஒரு மொழியின் அழகே, அந்த மொழியிலுள்ள கவிதைதான் என்பார்கள். தமிழ் மொழிக்கு கவிதை மொழி என்றொரு சிறப்புப் பெயரும் உண்டு. அந்தக் கவிதைக்குள்ளும் கதை சொல்லும் ஆற்றல் மிகச் சிலருக்கே வாய்த்த பேறு. தமிழ் இலக்கியங்கள் யாவும் தொடக்கக் காலத்தில் செய்யுள் வடிவிலேயே படைக்கப்பட்டன. உரைநடை, சிறுகதை, நாவல் ஆகியவை ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்னரே தமிழுக்கு அறிமுகமாயின. கடந்த நாற்பது ஆண்டுகளாகக் கவிதை நூல்களை, கதை நூல்களைத் தொடர்ந்து வாசித்து வருபவன் எனும் வகையில், நான் வாசித்த கவிதைகளுக்குள் கலந்திருக்கும் நேசித்த சில கதைகளைப் பற்றி பகிர்ந்துகொள்ளப் போகிறேன்.

•

தமிழ்க் கவிதையின் முகமெனக் கொண்டாடப்படும் மகாகவி பாரதி (1882-1921), 38 ஆண்டுகாலம் வாழ்ந்த ஞான சூரியனாவார்.

'சுவை புதிது; பொருள் புதிது; வளம் புதிது;

சொற் புதிது...' எனப் புதிது கொண்டாடிய மகாகவி பாரதியார், "செல்லம்மா, நான் வீட்டிற்கு

நிறைய பொருள்கள் வாங்கி வருகிறேன்" என்று சொல்லிச் சென்றார். திரும்பி வருகையில் கொண்டுவந்த மூட்டைகள் முழுக்க புத்தகங்கள். அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், திருக்குறள், திருவருட்பா, இராமாயணம் என எண்ணற்ற நூல்கள்.

"பணம் நமக்குப் பெரிதல்ல, செல்லம்மா. காலத்தால் அழியாத பெரும் செல்வமான கல்விச் செல்வத்தை நான் வாங்கி வந்திருக்கிறேன்" என்றார். வீட்டிற்குத் தேவையான மளிகை சாமான்கள் கூட இல்லாத நிலையில், எட்டையபுரம் மன்னர் தந்த ரூ.500-இல், ரூ.485-க்குப் புத்தகங்களை வாங்கி வந்த அறிவுத் திருமகன் பாரதி.

பசித்திருக்கும் வேளையிலும் வீட்டு முற்றத்தில் வந்தமர்ந்த குருவிகளுக்கு, உலையில் போட வைத்திருந்த அரிசி மணிகளை அள்ளி இறைத்த பாரதி, அப்போது அங்கு வந்த மகள் சகுந்தலாவைப் பார்த்து, "விட்டு விடுதலையாகி நிற்பாய் – இந்தச் சிட்டுக்குருவியைப் போல..." என்று பாடினார்.

1904 முதல் 1921 வரையான பதினைந்து ஆண்டுகால இலக்கியப் பணியில், "அறுநூறு பக்க அளவில் சிறிதும் பெரிதுமாக இருநூற்றி எழுபது கவிதைகள், நானூறு பக்க அளவில் சுமார் எழுபத்தைந்து சிறிய கதைகள், நாவல் பகுதிகள், நாடக ரீதி சம்பாஷணைகள், காட்சிகள் மற்றும் நானூறு பக்கங்கள் கொண்ட நூற்றி ஐம்பது சிறிதும் பெரிதுமான பல ரக, பல பொருள் கட்டுரைகளும் எழுதிய பாரதி, 'மகாகவி' பட்டத்துக்கும் மேலாக, 'மகா இலக்கியன்' என்ற பட்டத்துக்கு உரியவன்" என்றெழுதினார் எழுத்தாளர் சி.சு.செல்லப்பா (தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது – இரண்டாம் பதிப்பின் முன்னுரை).

*1910-12ஆம் ஆண்டில் பாரதி எழுதிய 'ஆறில் ஒரு பங்கு' தமிழின் முதல் சிறுகதையாக இருந்தாலும், இந்தக் கதை எழுதப்பட்ட பத்தாண்டுகளுக்குப் பிறகே வ.வே.சு.ஐயர் எழுதிய 'குளத்தங்கரை அரசமரம்' தமிழின் முதல் சிறுகதை என அறியப்படுவது வேறொரு தனிக் கதை.*

*கதை, நாவல், கட்டுரை எனப் பல்வகை எழுத்துக்குச் சொந்தக்காரரான பாரதியின் கவிதைகளையே எனக்கு மிகவும் பிடிக்கும். பாரதியின் அனைத்துக் கவிதைகளையும் தேடித்தேடி வாசித்திருக்கின்றேன். பாரதி எழுதியிருக்கும் சில கவிதைக்குள் கதைகளும் கலந்திருக்கின்றன.*

*இந்திய விடுதலையை மட்டுமல்ல, உலக நாடுகள் அனைத்தும் விடுதலைக் காற்றைச் சுவாசிக்க வேண்டுமெனப் பாடிய மானுடக் கவிஞன் பாரதி. ரஷ்யாவை ஆண்டு வந்த ஜார் மன்னனின் ஆட்சி, மக்களின் தொடர் போராட்டத்தினால் 1917-இல் முடிவுக்கு வருகிறது.*

*'மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற் கடைக்கண் வைத்தாளங்கே...' என்று பாரதி பாடிய பாடலுக்குள்ளும் ஒரு கதையிருக்கிறது. ரஷ்ய புரட்சியை மட்டுமல்ல; தான் சந்தித்த எளிய மனிதர்களையும் தன் கவிதைக்குள் பாடுபொருளாக்கி வைத்தவன் பாரதி.*

*அப்படியாக பாரதி எழுதிய ஒரு சிறிய பாடலே 'அம்மாக்கண்ணு பாட்டு'. இதைப் பாடல் வடிவில் எழுதப்பட்ட அம்மாக்கண்ணுவின் கதையென்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். அம்மாக்கண்ணு எனும் ஒரு தாயின் சித்திரத்தை இந்த 12 வரிப் பாட்டில் பதிவு செய்கிறார் பாரதி. எளிமையின் அழகும் நேர்த்தியும் வெளிப்படும் இந்தப் பாட்டு, எனக்கு மிகவும் பிடித்த பாரதியின் கதைப்பாடல் என்பேன்.*

*முதலில், யாரிந்த அம்மாக்கண்ணு என்று தெரிந்துகொள்ளலாம். புதுவையில் பாரதியார் இருந்தபோது, அவரது வீட்டில் பணி செய்த மூதாட்டி அம்மாக்கண்ணு. பாரதியின் மீது அளவு கடந்த பாசம் கொண்டவர். பாரதியும் அவரைத் தனது தாயாக, பராசக்தியாக எண்ணினார். பாரதிக்குக் கோபம் வந்தால் யாரும் அவரிடம் பேசத் தயங்குவர். அம்மாக்கண்ணு மட்டும் தைரியமாகச் சென்று பேசுவார். அவரது வார்த்தைக்குக் கட்டுப்படுவார் பாரதி.*

*ஒருநாள் பாரதி செல்லம்மாவிடம் கோபித்துக்கொண்டு, வீட்டை விட்டு வெளியேறினார். பாரதிதாசன் பாரதியைத் தேடிக் கண்டுபிடிக்க, "என் வீட்டிற்கு வேண்டாம்; உன் வீட்டிற்குப் போகலாம்" என்கிறார் பாரதி. இதையறிந்த அம்மாக்கண்ணு, ஒரு தட்டில் சில பலகாரங்களை வைத்து, பாரதி வரும் வழியில் நின்றுகொண்டார்.*

*அம்மாக்கண்ணுவைக் கண்டதும் பாரதியின் கோபம் மறைய, முக மலர்ச்சியுடன் பலகாரங்களைச் சாப்பிட்டுவிட்டு, அம்மாக்கண்ணுவுடன் சேர்ந்து தன் வீட்டிற்குச் சென்றார்.*

*இரவு நேரங்களில் பாரதி வீடு திரும்ப எவ்வளவு நேரமானாலும், கதவருகினில் காத்திருந்து பாரதி வந்ததும் கதவைத் திறந்துவிடுவார் அம்மாக்கண்ணு. 'வீரமான தாய்' என்று பாரதி பாராட்டிய அந்த அம்மா குறித்த பாடலிது.*

'பூட்டைத் திறப்பது கையாலே – நல்ல
மனந்திறப்பது மதியாலே
பாட்டைத் திறப்பது பண்ணாலே – இன்ப
வீட்டைத் திறப்பது பெண்ணாலே.

ஏட்டைத் துடைப்பது கையாலே – மன
வீட்டைத் துடைப்பது மெய்யாலே
வேட்டை யடிப்பது வில்லாலே – அன்புக்
கோட்டை பிடிப்பது சொல்லாலே.

காற்றை யடைப்பது மனதாலே – இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையாலே
சோற்றைப் புசிப்பது வாயாலே – உயிர்
துணிவுறுவது தாயாலே.'

*வாசிப்பில் பாரதியின் பாடல்களுள் இதுவுமொன்று என்றுதான் நானும் எண்ணியிருந்தேன். ஆனால், அம்மாக்கண்ணுவுக்குக் காது கேட்காததால், சைகையால் மட்டுமே அவரிடம் பேச முடியும் என்பதை அறிந்த பிறகு, இந்தப் பாடலின் பொருளும், இந்தப் பாடலுக்குள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மாக்கண்ணு எனும் பாசமிக்க ஒரு தாயின் பரிவும் என் மனக்கண்ணில் கதையென விரிகின்றன.*

**- இன்னும் சொல்வேன். ■**

கவிதையியல் குறித்த நேர்காணல்கள்

4

● மௌனன் யாத்ரிகா

# கற்பதுவே.. கேட்பதுவே..!

ஆத்மார்த்தி

**பொதுமொழியில் இயங்கும் கவிதையே எல்லாக் காலத்துக்குமான பொருத்தப்பாடுகளைக் கொண்டிருக்கும் என்ற கருத்தை எப்படி பார்க்கிறீர்கள்?**

“எல்லாக் காலத்துக்குமான” என்று எதுவுமே இல்லை என நம்புகிறேன். காலம் ஒன்றே எல்லாக் காலத்துக்குமானது. வேறொன்றுமில்லை. இதையே “அந்தந்தக் காலத்துக்கு ஏற்ற” என்று மாற்றிக்கொண்டு விடையளிக்க உத்தேசிக்கிறேன். கவிதை பொதுமொழியில் மட்டும் இயங்குகிறது என்பது ஒரு சாகச உணர்வைத் தரலாம். அது உண்மையல்ல. கவிதையின் மொழியை ஒருவன் கண்டடைய மேற்கொள்கிற பிரயாணம் மிக முக்கியமானது. கவிதைக்கு உண்டான மொழியைக் கண்டடைகிற பயணம் மட்டுமல்ல அது.

இங்கே கவிதையைக் கல்லூரிப் பாடத் திட்டத்தில் பயிற்றுவித்தெல்லாம் கற்றுக் கொடுத்து விட முடியாது. நான் பாடத் திட்டங்களுக்கு எதிரானவன் அல்லன். அது ஒரு வழி. அதனை முயன்று பார்ப்பதில் தவறில்லை. அஃது புதிய நோய்மைக்குப் பல்வேறு மருந்துகளை முயற்சித்துப் பார்க்கிற மனமுறைக்கு ஒப்பானது அன்றி வேறில்லை. கிடைத்த வரை பலிதம் என்ற நோக்கில் செய்யப்படலாம். கவிதை அந்தந்தக் காலத்துக்குத் தேவையான பொருத்தப்பாட்டினைக் கொண்டிருக்கலாம். அல்லது மறுதலிக்கலாம். இவ்விரண்டையும் தாண்டிய வேறொன்றாகவும் இருக்கலாம். அதனை அறுதியிட்டுவிட முடியாது என்றே கருதுகிறேன்.

**கவிதையின் மொழியில் இசைத்தன்மை இல்லை, அதன் தட்டையான வடிவம் சோர்வைத் தருகிறது, தற்கால நீள் கவிதைகள் வறட்சியானவை, நவீன கவிதைகளால் உணர்வு அலைகளை எழுப்ப முடியவில்லை, அறிவு சார்ந்த கேள்விக்கு இப்போதிருக்கும் கவிதைகளில் இடம் இருப்பதில்லை போன்ற வாசக விமர்சனங்களைப் பொருட்படுத்தும் போக்கு இப்போதைய கவிதைச் சூழலில் இருக்கிறதா?**

‘கவிதையின் மொழியில் இசைத் தன்மை இல்லை’ என்பது ஒருவர் கூறுகிற குற்றச்சாட்டென்றால் அதையே ‘கோலாகலம்’ என்று ஆராதிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். கவிதையில் இசைத் தன்மை இல்லாமல் பார்த்துக் கொள்வதும் இசையைக் கவிதையிலிருந்து நீக்கிவிடுகிற கவனமும் கொண்ட பலரை நான் அறிவேன். இங்கே கூறுபொருள் கருதுகோள் நம்பகம் மறுதலிப்பு எனப் பலவற்றையும் முன்னால் நடந்து கொண்டிருப்பவர்கள் கைமாற்றித் தருகிற அனுபவச்சிட்டை போலப் பெற்றுக் கொள்கிற முறைமை நிலவுவதை மறுக்க முடியாது.

எத்தனை பேர் தனக்கான கவிதை குறித்த முதன்மையான-முழுமையான கருத்தாக்கத்தை உருவாக்கிக்கொள்ள முயற்சிக்கிறார்கள்..?பலவீனமானதெனினும் சுய கருத்தைப் பற்றிக் கொண்டிருக்கக் கூடிய மனப்பற்று பலரிடமும் இருப்பதில்லை. ஒருவர் உரக்கச் சொல்கிற வாக்கியத்தை கூட்டமாய்த் திரும்பச் சொல்வது கவிதைக்குப் பொருந்தாது அல்லவா?

'தற்கால நீள் கவிதைகள் வறட்சியானவை' என்கிற பதத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. சிறு மற்றும் குறுங்கவிதைகளின் மீது எல்லையற்ற அன்பும் தேடலும் கொண்டவனாகத்தான் இதைப் பதிவு செய்கிறேன். கவிதை நிர்ப்பந்தங்களற்றது. அதன் அளவு உட்பட எதையுமே நிர்ப்பந்தித்துவிட முடியாது. அப்படி இருக்க நீள் கவிதைகள் வறட்சியானவை என்பது வேறேதோ தேடத் தொடங்கிப் பாதியில் கண்டடைகிற தீர்மானத் திருப்பமாக வேண்டுமானால் இருக்கக் கூடுமே ஒழிய அது நிஜமான பூர்த்தியாக இருக்க எந்த அவசியமும் இல்லை. நீள் கவிதைகள் வாசகனுக்குத் தர விழைகிற அனுபவம் நீர்மம் மிகுந்தது.

'நவீன கவிதைகளால் உணர்வு அலைகளை எழுப்ப முடியவில்லை' என்பதை முற்றிலுமாக ஏற்க முடியவில்லை. அப்படி ஒரிடத்தில் குவிகிறதெனில் அது நவீன கவிதைகள் முற்றித் தீர்கிற இடமல்ல என்பது என் நம்பகம். அங்கேயிருந்து நிகழ வாய்க்கிற அடுத்தகட்டப் பரவலில் அப்படியான உணர்வு அலைகள் எழக் கூடுமல்லவா? ஒன்று நிகழாது என்று முற்றுகிற இடத்தைக் கொண்டு கவிதையை அணுகுவதே என்னளவில் பொருந்தாமற் போகிறது.

நாம் கடைசி வரை காத்திருந்து அப்படிக் காத்திருத்தல் தீர்ந்து போய் அதோடு முடிவடைவதாகக் கொண்டால்கூட அது நமக்கு முந்தைய நெடுங்காலத் தொடர் இயங்குமுறை ஒன்றில் இடைக் கண்ணியாக நம் பொறுப்பின் முழுமையாக இருக்க முடியும் என்கிறேன். இல்லை இல்லை கடைசி வரை காத்திருந்தது வீண் என்று சொல்ல முயன்றால் அங்கே வேறு வினாக்கள் வருகின்றன இல்லையா.. யாருடைய முதல் துவங்கி யாருடைய கடைசி வரை என்பதெல்லாம் கேள்விகளை மாற்றியமைத்து விடுகின்றன இல்லையா.. அப்புறம் எப்படி அதற்குப் பதில் தேடமுடியும்..? நம் தீர்மானத்தை வேண்டுமானால் பதிலாக எழுதி வைத்துவிடலாம்தான். நவீன கவிதைகளால் உணர்வு அலைகளை எழுப்ப முடியவில்லை என்பது வருகிற முப்பதாம் தேதியிலிருந்து கிட்டாரிலிருந்து இசை எழாது என்பது போலத்தான் எனக்குப் படுகிறது.

'அறிவு சார்ந்த கேள்விக்கு இப்போதிருக்கும் கவிதைகளில் இடம் இருப்பதில்லையா?' இதை இன்னும் பெரிதாகப் பேசவேண்டியிருக்கும் எனப் படுகிறது. எழுதுகிற நாமா அல்லது வாசிக்கிற நாமா அல்லது எழுதாத வாசிக்காத பிறரா யார் இதனை மாற்றி அமைக்க வேண்டும் அல்லது யாரால் இது முடியும்..? நாம் எல்லாவற்றையுமே முடித்துப் பார்க்க அல்லது முடிவைப் பார்க்க விரும்புகிறோமா..?அப்படி இருந்தால் நமக்குக் கிடைக்கிற கலையினூடான அனுபவங்கள் மிகக் குறைவானதாகவே இருக்க முடியும். உண்மையில் மானுட வாழ்வு என்பதே மாபெரிய சூன்யத்திற்கு இலக்கமிட்டுப் பார்க்கிற ஒரு விளையாட்டுதான். இங்கே நாம் நம்புகிற அத்தனை விடயங்களுக்கும் முன் பின் இருக்கிற இருள் அப்படியேதான் இருக்கிறது. இடையிலே சிறு ஒளி.. அதைக் கொண்டு எல்லாவற்றையும் அளக்க முடியாது.

எதற்கு உனக்கொரு குரு தேவைப்படுகிறார்? என்று கேட்டதற்கு "என்னிடமிருக்கும் விடையற்ற வினாக்களை எழுப்புவதற்காகவே நான் குருவைத் தேடுகிறேன்" என்று ஒரு சீடன் சொன்னானாம். இப்படி ஒரு ஞானக்கதை படித்த நினைவு. அறிவு சார்ந்த உணர்வு சார்ந்த தொன்மம் சார்ந்த என்றெல்லாம் பகுத்துக் கொண்டே இருக்க வேண்டியதில்லை.

கவிதை கடவுளைவிடப் பெரியது அல்லது கவிதை ஒரு கடவுளைப் போன்றது. இந்த இரண்டில் எது ப்ரியமோ அதைக் கொள்ளலாம். அப்படி இருக்க கவிதை மேற்சொன்ன சிறு ஒளியைப் பார்க்கிற கண்களுக்கு முன்பாக நிகழ்த்தும். அப்படியான ஒளியறியும் கணங்களின் கூட்டுக் கலயமாக வாழ்க்கை மாறும்போது வாழ்வின் ஆரவாரம் நீக்கப்பட்ட அமைதி சாத்தியமாகும். நிச்சலனம் என்பது ஏற்படுத்தப்பட்ட அமைதி அல்ல. அது சென்றடைகிற நிசப்தம். அதற்குத் தேவையான பயணம் மேற்கொண்டாக வேண்டியது கட்டாயம்.

மேற்கூறப்பட்ட கூற்றுகள் என்றில்லை.. இன்னும் பல வாசக/விமர்சனங்களைப் பொருட்படுத்துகிற போக்கும் பாராமுகம் காட்டுகிற போக்கும் ஒருங்கேதான் கவிதைச் சூழலில் இருந்து வருகிறது. இது இன்று நேற்றல்ல.. பன்னெடுங்காலமாகவே இருப்பதுதான். ஒருவருடைய நம்பகம் மற்றொருவருடைய மறுதலிப்பாக இருக்க முடியும். விமர்சனம் என்பது வாசக அனுபவமாக மட்டுமே கருதப்பட வேண்டியதில்லை. வாசகன் எப்போது விமர்சனம் ஒன்றை வைக்கிறானோ அப்போது அதுவும் ஒரு படைப்பாக மாறுகிறது.

படைப்பின் மீதான விமர்சனம் மட்டுமல்ல அதன் மீதான மௌனமும்கூட எல்லையற்ற திறப்புகளில் பொருந்தக் கூடியவைதான். எந்த ஒரு படைப்பும் எம்மாதிரியான விமர்சனங்களைப் பெற்றுக்கொள்ளும் என்பதை எழுதுகிறவரால் முன் தீர்மானித்துக்கொள்ள முடியாது. என்னைப் பொறுத்தவரை கவிதையின் நீட்சி அதன் மீதான விமர்சனத்தையும் கொண்டதுதான்.

**இதுவரை எழுதிய எல்லாக் கவிதைகளையும் மறந்துவிட்டுப் புதிதாகக் கவிதை எழுதத் தொடங்குங்கள் என்று சொன்னால் உங்கள் முதல் கவிதையின் பாடுபொருள் எதுவாக இருக்கும்? அதை எழுதும்போது உங்கள் மொழியையும் அனுபவத்தையும் எப்படி பயன்படுத்துவீர்கள்?**

இந்த வினா நமக்குத் தருகிற கிறக்கம் அலாதியானது. அதைக் கவனமாக அகற்றிவிட்டுப் பார்த்தால் கவிஞன் என்றில்லை, எந்தப் படைப்பாளனும் தன் படைப்புக் கணக்கேடு ஒன்றைப் பராமரிக்கத் தொடங்குகையில் கலைக்கும் அவனுக்கும் இடையிலான எதுவுமற்ற வெறுமையில் அந்தக் கணக்கீடு வந்து அமர்ந்துவிடுகிறது. கிரிக்கெட் ஆட்டத்தில் ஒவ்வொரு ரன்னையும் சாதாரணமாகத் தேக்கி எடுத்துச் சேகரித்து ஆடுகிற ஆட்டக்காரனின் மனோ-நிலைமை முக்கியமானது.

இன்னும் சதமடிக்க நாலு வேண்டும் ரெண்டு வேண்டும் என்று அதனை நெருங்க நெருங்க உற்பத்தி செய்யப்பட்டு அளிக்கப்படுகிற பதற்றமும் படபடப்பும் புறவயமானது. முற்றிலுமாக எண்ணிக்கை சார்ந்து அல்லது ஒரு நிலையை எய்த வேண்டிய நிர்ப்பந்தம் சார்ந்து எழக் கூடியது. கால்களைச் சங்கிலியிட்டுக் கொண்டு நடப்பதும் ஓடுவதும்தான் கடினம் என்பதில்லை. கால்களில் சங்கிலியிட்டிருப்பதுதான் கடினம். அது தளை. உறங்குகிறாற் போல் காணுகிற கனவில் கூட கால்களில் சங்கிலியிட்டுக்கொண்டு இருப்பது கடினமானதுதான். இந்த இடத்தில்தான் கணக்கேடும் கணக்கீடும் எந்த மாதிரியான பிம்பச் சுமையாகக் கலைஞனுக்கு மாறுகின்றன என்பது குறித்த கேள்வி எழுகிறது.

"நான் எழுதுகிற எல்லாக் கவிதைகளுமே அது வரையிலான எல்லாவற்றையும் மறந்துவிட்டு எழுத முனைகிற முதற்கவிதை ஒன்றின் பிரதிகள்தான், நான் என் முதற்கவிதையை எழுதுவதற்கான பயிற்சியில் இருப்பவன். என்றாவது ஒரு தினம் அது நிகழக் கூடும். மொழியின் அனுபவத்தில் நான் யாராக அல்லது என்னவாக நிகழ்கிறேனோ அதனூடாக என் மொழி என்னைப் பயன்படுத்திக் கொள்வதற்கான சாளரமாகவே கவிதைகளை எண்ண விரும்புகிறேன்".

• • •

## யவனிகா ஸ்ரீராம்

**மூன்றாம் உலகச் சமூகத்திலிருந்து வெளிப்படும் கவிதைகள் பண்பளவில் அடைந்துள்ள புதிய மாற்றங்கள் குறித்துக் கூறுங்கள்.**

மூன்றாம் உலகக்கவிதைகள் எனும் வகைப்பாடு அல்லது அவைபற்றிய அரசியல் சோர்வுகள் அல்லது தற்கால நகைப்புகள் ஒருபக்கம் இருக்கட்டும். அவை பண்பளவில் இன்று கல்விப் புலத்தின் வாஞ்சையை விட்டு வெளியேறிவிட்டன. வாழுமிடத்தின் அழகியல் அம்சங்களை காதல், மொழி, சமயம், தத்துவம், பக்திசார் வர்க்க நலன் எனத் தொகுக்கும் ஒரு அமைப்பு அதில் எதிர் முரண்களோடு விலகும் கவிதைகளைத் தவிர்க்கவே செய்யும். அந்த அளவில் கவிதைகள் அவை தத்தம் பாடுபொருளில் மேற்கண்ட செவ்வியல் பண்புகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளனவா என்பதே இன்றுவரை தமிழில் காணப் பொதுவான அளவீடாக இருக்கிறது. ஆனால் இந்தியாவில் செவ்வியல் என்பது சாதி சமய பக்தி ஒழுக்கவாத நீதியியல் அழகியலாகவும் பாதுகாக்கப்படுகிறது. இந்த அழகியல் என்பது அருவருப்பின் அழகியல், அராஜகவாத பகடி அழகியல், வன்முறை அழகியல், மத்தியதர அழகியல், இடதுசாரி அழகியல், நவீனத்துவ மேலும் பின்நவீனத்துவ அழகியல் எனப் பன்மை கொண்டுள்ளது.

அவற்றில் இருந்து விலகி தமிழில் 1990களில் உருவாகி அதிகார மையங்களை நோக்கிக் குரல் எழுப்பிக்கொண்ட கவிதைகளின் கலகப் பார்வைகள். எதிர் கவிதைப் போக்குகள் கவிழ்ப்புவாத அராஜக மற்றும் குற்றமை ததும்பும் விளிம்புநிலைக் குரல்கள், நிறுவனப் பகடிகள், அர்த்த மேற்பரப்பில் திளைத்தல், நீண்டகால உண்மைகளின் மீது சந்தேகம் கொள்ளல், ஒடுக்கப்பட்டோரின் போராட்ட இன்பம் எனத் தங்கள் பன்மைத்துவங்களைப் புதிய பண்புகளாய் வித்தியாசமாக்கி முன்வைத்து, மொழியில் அதைப் பதிவாக்கியும் வந்துள்ளன. செவ்வியல் மரபுகளைக் காட்டிலும் சமகால பொருளியல் நிதர்சனங்கள், கவிதைகளில் இன்று உரையாடலாய்த் தொடர்கின்றன.

சுருக்கமாகச் சொன்னால், மரபுசார் அழகியலில் இருந்த நில உடைமைவாத அல்லது நிலையாமைப் புரட்டல்வாத சுரண்டல் ஆணாதிக்க அறிவுடைமைகளின் வகிபாகத்தைத் துண்டித்துக் கொண்டிருக்கிறது கவிதை.

விஞ்ஞானம், உழைப்பு, உடல், அதன் விருப்ப உறுதிகள், விருப்ப வேட்கைகள் போன்றவை இடம் காலம் கலைத்து பண்பளவில் இன்று கவித்துவ அரசியலாகின்றன. இதில் ஒரு அமைப்புவாத சிந்தனைப் புலப்பெயர்வு முற்போக்காய் மனிதத் தன்னிலை நோக்கி நகர்ந்திருக்கிறது.

• • •

## மகுடேசுவரன்

**புதிய புதிய கோட்பாடுகள், பாடுபொருள்கள், மொழிதல்கள் உருவாகியுள்ள போதும் தற்காலக் கவிதைகளில் ஆழ்ந்து தோய்ந்து போக**

**முடியவில்லை என்கிற கருத்தை எப்படிப் பார்க்கிறீர்கள் ?**

எல்லார்க்கும் வாழ்க்கை ஒன்றுபோல் ஆகிவிட்டது. புதிதாய் எனக்கு நேர்ந்தது இன்னொருவர்க்கும் அவ்வாறே நேர்கிறது. ஒன்றைக் கூறுவதன்வழியாக அதனை வினவுவோரிடம் ஆர்வத்தைத் தோற்றுவிக்க இயலவில்லை. இது கவிதைக்கு மட்டுமில்லை, உரைநடைக்கும் பொருந்தும். அதனால்தான் பரபரப்பான உரைநடையாளர்கள் செம்மறியாட்டுக்கு முடிகழித்தலுக்கு நிகரான பணிகளில் ஈடுபட்டிருப்பதையும் பார்க்க முடிகிறது.

தற்காலக் கவிதைகளின் போதாமை என்று கருதுவது ஒவ்வொரு வரியும் அடர்ந்த குலையாய் பொருட்செறிவு பெற்றிராமல் வெற்றுத்தொடர்களாய் அமைந்திருப்பதுதான். எளிமையாய் ஒன்றைக் கூறுவதாக நினைத்துக்கொண்டு எதையுமே கூறாமல் நிற்கிறார்கள். பாடுபொருள்கள் ஒரே வகையில் இருப்பினும் பார்வையால் சுவை சேர்க்க முடியும். அதற்கு எழுதுபவரின் நுண்மையும் மேதைமையும் துணை நிற்க வேண்டும். படிப்போரின் நினைவில் தங்கி முகிலாய் அலையும் கவிதைகளை எழுத வேண்டும். அது இயலவில்லை எனில் அங்கே கவிஞரும் தோற்கிறார். கவிதையும் தாழ்கிறது.

**சொல்லின் மீது கவனம், நுட்பமான பொருளைத் தேடியடைவதில் ஆர்வம், நினைவில் தங்கும் ஒற்றை வரிக்காக உழைப்பு- இவையெல்லாம் தற்காலக் கவிஞர்களிடத்தில் இருக்கின்றனவா ?**

ஒரு சொல்லுக்காக ஏங்கி நிற்க வேண்டும், மருந்தாய் மாறும் அச்சொல்லில் ஆயிரம் குணப்படுத்தல்களை நிகழ்த்த முடியும். ஒரு சொல்லை வாகாகப் பொருத்தி அமர்த்தும் சொற்றொடர்க்காக மண்டையைப் பிய்த்துக்கொள்ள வேண்டும். இன்னும் மேம்பட்ட பொருளைத் தருமாறு ஏதேனும் செய்ய இயலுமா என்று பார்க்க வேண்டும். அவ்வாறு எதுவும் நடப்பதில்லை. நடந்தால் மகிழ்ச்சியே. தாம் எழுதியவற்றில் 'மிகச்சிறந்த பொன்வரி' என்று எதனைக் கூற முடியும்? இந்தக் கேள்வியைத் தமக்குள் கேட்டுக்கொண்டாலே குழப்பங்கள் தீர்ந்துவிடும். அத்தகைய தன்னாய்வுகள் இன்றைய கவிஞர்களிடத்தில் நிகழ்ந்தாலே போதும். சொல்லுணர்ச்சியே இல்லாமல் உரைப் பீய்ச்சல்களாக எழுதிக்கொண்டே செல்வது எப்படிக் கவிதையாகும் ?

**மொழி வளம் குறித்த பொறுப்பின்மை தற்காலக் கவிதைச் சூழலில் மலிந்துவிட்டது- இது குறித்த உங்கள் கருத்து என்ன?**

கவிதை என்பது மொழியின் உயர்வடிவம். மொழியை அதன் மேம்பட்ட வெளிப்பாட்டு முறையில் கவிதையில் பயன்படுத்த வேண்டும். ஆனால், இங்கே என்ன நடக்கிறது? பிழை மொழிவுதான் இறைந்து கிடக்கிறது. எழுதுவோனிடம் அறியவும் உணரவுமே படிப்பவர்கள் வருகிறார்கள். அவர்கட்கு இடப்படும் இலையே கிழிந்திருக்கிறது. படிக்கிறவர்கட்குத் தெரிந்த பிழைகள்கூட எழுதுவோர்க்குத் தெரியா நிலை. பிழையைத் திருத்த 'குமாஸ்தா' போதும் என்பார்கள். ஒரு 'குமாஸ்தா'வுக்குத் தெரிந்திருக்கும் மொழிகூட எழுத்தாளர்க்கும் கவிஞர்க்கும் தெரியவில்லை என்றால் வெட்கமாக இல்லையா? கண்ணதாசனே மனம் நொந்து சொன்னது- "இன்று எழுதப்படும் பாடல்களில் இசையும் இல்லை, இலக்கணமும் இல்லை. தெரிந்தே எல்லாரும் பெரும்பாவத்தைச் செய்கிறோம்." மொழியை இறுக்கிப் பிடிக்காமல் எழுதினால் என்ன நற்பெயர் கிடைக்கும்? காலப்போக்கில் எண்ணற்ற வளர்ச்சிகள் ஏற்பட்டுவிடும். அப்போது பல தொழில்நுட்பங்களின் உதவியால் மொழியின் செம்மையோடு எளிதில் புழங்கும் மொழித்தலைமுறையும் தோன்றும். அன்றைக்கு மாட்டிக்கொள்ள நேரலாம். அதனால் பொறுப்புணர்ந்து எழுதுவது நன்று.

- தொடரும். ■

# பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

வெளியே சென்றுவிட்டு
வீடு திரும்பிய ஒரு பின்னிரவில்
பூட்டியிருந்த கதவைத் திறக்க
சாவியைத் தேடிய சமயத்தில்
சிரித்துக்கொண்டே வெளியே வந்தான்
எனக்குள் இருந்து அவன்...

யார் பூட்டியது இந்தக் கதவை?
என்று கேட்டான் அவன்..

நான் என்றேன்
சாவியைக் கையில் எடுத்தபடி...

பூட்டியது நீ என்றால்
பிறகு எதற்கு சாவியைத் தேடுகிறாய்? என்றான்...

கதவைத் திறந்து வீட்டிற்குள் வந்து
கதவை மீண்டும் மூடிவிட்டு...
சாவி இல்லாமல் எதைத் திறக்க முடியுமென்றேன்?

மனதைத் திறக்க சாவி தேவைப்படுவதில்லை
என்றான்...

அவன் மேலும் கேட்டான்..
எதற்காக கதவை மூடிவிட்டுச் சென்றாய்?

இது என்ன கேள்வி?
வெளியே செல்லும்போது
வீட்டுக் கதவை மூடி விட்டுத்தானே
செல்ல வேண்டும் என்றேன்...

இப்போதுதான் உள்ளே வந்துவிட்டாயே
பிறகு எதற்கு மூடுகிறாய் என்றான் அவன்...

என்னைக் கேட்காமல்
எதுவும் உள்ளே வரக் கூடாது
என்பதற்காகத்தான் கதவை மூடினேன் என்றேன்...

மனதின் கதவை இப்படி மூடியிருந்தால்
நான் வந்திருக்கவே மாட்டேனே

கதவுகள் என்பதே நம்பிக்கையின்மைதானே
என்றான்

அவன் மேலும் சொன்னான்...
மூடுவதும் திறப்பதுமாக
நீ இருந்தாலும்
உன்னால் எந்தக் கதவும்
மூடப்படுவதுமில்லை திறக்கப்படுவதுமில்லை

இது என் பூட்டு
இது என் சாவி
இது என் கதவு
என்னால் எதையும் பூட்டி வைக்க முடியும் என்றேன்

உன் மரணமெனும் கதவு
திறந்தேதான் இருக்கும்
அதை உன்னால் பூட்டி வைக்க முடியாது
என்றான்

– அவன் இன்னும் சொல்வான் ■

● அமாசே

# பெருமக்கட் கூட்டத்தின் சிறு தீ

**நூல் : மிளகு பருத்தி மற்றும் யானைகள் (நரன்)**

நிர்வாணத்தை எத்தனை பேர் விரும்பி ஏற்பீர்கள்.. ஆண்குறியும் பெண்குறியும் உடலின் வியர்வை போல் என எத்தனை பேர் உணர்வீர்கள். இந்நூல் கவிதைகள் முழுக்க முழுக்க நிர்வாணம் சார்ந்தன. சிந்தனை நிர்வாணமே கவிதையின் உயிர். இந்தப் புத்தகமும் அப்படித்தான். தாயின் நிர்வாணத்தைச் சிந்திக்க முடியுமா என்றால் முடியும். அவள் உனக்கான உயிர் தந்து அவளின் யோனியை வழியாக்கி உதிரத்தைப் பாலாய்த் தந்து வழிவிடுகிறாள்.

கவிதை புரிதலுக்காகவா அல்லது சிந்திக்க வைக்கவா என்றால் எனதளவில் சிந்திக்க வைக்க வேண்டும் என்பதே சாலச்சிறந்தது.

தொகுப்பில் மொத்தம் பத்து கவிதைகள். உள்ளே புதைந்திருப்பது நாம் நாள்தோறும் கேட்டும் பேசியும் பேசாமலும் கடந்து செல்லும் பெருமக்கட் கூட்டத்தின் சிறு தீ என்றே கூறலாம்.

நம் வீட்டின் அருகிலே வயதானவர் / இளையவர் ஒருவர் அவர் வீட்டைக் கடக்கும்போது தெவ்டியா பையா என்று நம்மைத் திடீரென்று கடிந்துகொள்வார். அவர்களின் உலகம், அந்த மூளைக்குள் தோன்றும் எண்ண விருட்சங்கள், ஒலிகள், உருவங்கள் இவைகளை ஆசிரியர் அளவே விளக்க ஆயிரம் சிந்தனை வேண்டும்.

உயிரின் தோற்றமென்பது இயற்கையின் ஆகப்பெரும் வரம்.. கண்ணுக்கு எட்டாப் பூச்சியிலிருந்து நாம் காணும் பெரும் உயிர்கள் வரை. ஒரு உயிரை இழந்த தாயின் வலி, அதன் தாக்கம், அதன் முடிவிலியெனக் கூறென்பது, வாழ்வென்பது கவிதைப் பகுதிகள் எட்டும் கைகளுக்கு எட்டாமல் ஏனோ ஏமாற்றியே பயணிக்கிறதென எண்ண வைக்கிறது. வாழ்வின் ஆகப்பெரும் தத்துவம் மரணமென்பதை மனம் ஏற்க மறுக்கிறதெனப் புத்தகம் முழுக்க எண்ண வைக்கிறார்.

உலகின் முதல் பாவி மதம் கண்டவன். நான் உன்னோடிருக்கிறேன் எனக் கூறி முடித்ததும் அவன் விலாவில் ஈட்டி எய்தி மீண்டும் யாருமில்லை என்பதை உணர்த்திக்கொண்டே மதத்திற்கே ஒளி ஏற்றியதைப் புத்தகத்தின் பல இடங்களில் அமணமாக அமர வைத்துள்ளார்.

இயற்கை, அரவம், மதம், வாழ்வைத் தொலைத்தவள், ஆண்குறிகளின் நீளம், யோனியின் ஆழம், முலைகளின் இலக்கணம், மனித இதயத்தின் வஞ்சமென வாசிக்க வாசிக்க வயதின் முதிர்ச்சி எல்லை மீறுகிறது. ■

சிறுகதை

- பவித்ரா பாண்டியராஜ்
- ஓவியங்கள் - அழ.ரஜினிகாந்தன்

# கமலா

**ம**ழைப்பொழிவிற்கான சிறு முகாந்திரமுமற்ற உள் பனியன் வேர்த்துக்கிடக்கும் கூதிர் காலத்து மதிய நேரமது. மண்டையைப் பிளக்கும் வெயிலை ஒட்டுகளிட்ட புடவை முந்தானையால் தன்னைக் காத்தபடியும், கழுத்தில் பூத்திருந்த முத்துக்களைத் துடைத்தபடியும், மேம்பாலத்தின் பக்கவாட்டுப்பகுதியில் வீட்டை நோக்கி நடக்கலானாள் கமலாம்பிகா.

அம்பிகா என்ற பெயர் அவளுக்கு மறந்தும் வருடமாகியிருக்கும். அக்கம் பக்கத்திலும், வேலைசெய்யும் வீடுகளிலும் அவளின் பெயர் கமலா மட்டும்தான். அம்பிகா என்றாலே அந்த ஏமாற்றுக்காரனின் நினைவுதான் வரும். “நீ பாக்குறதுக்கு அப்படியே சினிமா ஸ்டார் அம்பிகா கணக்கா இருக்க.. அம்பிகான்ற ஒன் பேருக்கு முன்னாடி எந்த சோமாரி பய கமலானு கெளட்டு பேர சொருவுனவன். அவன் மட்டும் என் கையில கெடச்சான் மாறுகால் மாறுகை வாங்கிடுவேன். இனிமே உன்ன நான் வெறும் அம்பிகா அம்பிகானுதான் கூப்புடுவேன்.”

மலையளவு எரிச்சல் உடல் முழுவதும் தகிக்க, “தெவிடியா பய.. அவன் சொன்னா மாரியே ஒன்னியும் இல்லாத வெறும் அம்பிகாவாதான் ஆக்கிட்டுப் பொயிட்டான் திருட்டு கம்னாட்டி.” திட்டியபடியே டீக்கடையோரமாய்ச் சாலையிலிருந்த கழிவுநீரில் தொப்பென்று காலை வைத்திருந்தாள், சுற்றுப்புறம் உறைத்தது. நடுநெற்றியில் அறைந்துகொண்டு, புடவையை இடதுகையில் தூக்கிப் பிடித்துக்கொண்டு நடையைத் தொடர, “அச்சச்சோ இன்னா கமலா.. காலெல்லாம் சேறா பூட்சி போல, உள்ள வந்து கைவினு போறதுதான” என்ற டீக்கடைக்காரனின் அப்பட்டமான வழிசல் குரலில் நின்றிருந்தாள்.

“ஏற்கனவே கயுவுன உன் கட கப்பு தான் தெரு வர்லியும் நாறுதே. அப்பறம் நான் வேற வந்து உன்ன நாறடிக்கனுமா,” என்று விட்டு விடுவிடென நடையைத் தொடர்ந்தாள். “சனியன் புடிச்சவன் பொம்பள தனியா இருக்கானு தெரிஞ்சா போறும், வயசு வித்தியாசம் பாக்காம நாக்கத் தொங்க போட்டுனு அலையுவான்.. திருட்டு கம்முனாட்டி”.

அன்றைக்கும் அப்படிதான், மகளிடம் டீ வாங்கி வர அனுப்பியிருந்தாள். சிறுமியின் கன்னத்தைக் கிள்ளி... கைகளுக்கிடையே தடவி

முத்தம் கொடுத்திருக்கிறான். அவன் மனைவி இவளை அதட்டி இனி இங்க வரக்கூடாதென்று சொல்லி அனுப்பிவிட்டாள். இந்தச் சம்பவம் நடந்து இரண்டு வருடமாகிவிட்டது. அப்போது வசந்திக்கு ஒன்பது வயது. இப்போது நினைத்தாலும் அவன் மீது கொலைவெறி வரும்.

"இப்போ நெஞ்சு வேற வெளிய வர ஆரம்பிச்சிடுச்சு.. எந்நேரத்துல உக்காருவாளோ தெரியல." புலம்பியபடியே வீடு வந்து சேர்ந்திருந்தாள். ஒரு அடிக்கும் அடுத்த அடிக்கும் இறங்குமுகமாகச் செல்லும் சற்றே குறுகலான சந்து. ரோட்டிற்கும் வீட்டிற்கும் குறைந்தபட்சம் ஒரு கிலோமீட்டர் தூரமாவது இருக்கும். கூவமாற்றிற்கும் இவள் வீட்டிற்கும் நடுவே இருப்பது இருபதடிக்குக் குப்பைகளும் ஒரு தகர சுவரும்தான்.

மகள் பிறப்பதற்காக ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டுப் போனவன்தான் தாமஸ். ஏதோ பெரிய திருட்டுக்கேஸில் சம்மந்தப்பட்டிருக்கிறான். போலீஸ் தேடுவது தெரிந்து எங்கேயோ ஓடியவன்தான், வரவில்லை. போலீசும் அவனைப் பிடிக்கவில்லை. அவனோடு இருந்த வீடும் வாடகை தராததால் காலியாயிற்று. சாந்தியக்கா இல்லையென்றால் இந்த வீடும் கிடைத்திருக்காது. விழுப்புரம் அருகே சிறிய கிராமம்.

சென்னையிலிருந்து பட்டறை வேலைக்கு ஹெல்பராக வந்தவனுடன் காதல் மலர்ந்துவிட அவனுடன் வந்துவிட்டாள். அன்றைய தினம் இன்றும் அவள் கண் முன் விரிந்தது.

தாய்சேய் நல மருத்துவமனையின், சுகப்பிரசவப் பிரிவது. அட்டெண்டர் யாருமற்றுக் கழிவறையின் ஓரமான ஒரு பெட்டில் பாதிப்பிணம் போலக் கிடத்தப்பட்டிருந்தாள் கமலா. பிறந்த குழந்தையைக் கை நீட்டி வாங்கக்கூட ஆளில்லை. சாந்திக்கா அந்த மருத்துவமனையில் தற்காலிகமாக ஆயாவாக வேலை பார்த்தவர்.

"சிஸ்டர் அந்த லாஸ்ட் பெட்டுக்கு அட்டண்டர் யாரும் இல்லையா?"

"அது ஒரு ஓடி வந்த கேஸு சிஸ்டர். புருசன போலீஸ் தேடுது. பிரச்சனை ஆகிடுமோனு அக்கம் பக்கத்துல இருந்தவங்களும் யாரும் வரல. ஏதோ இந்தப் பொண்ணே பஸ்ஸ புடிச்சு வந்து அட்மிட் ஆகிருக்கு. பேருக்கு அட்டண்டர்னு பக்கத்துல நின்னுட்டு இருந்த யாரோ ஒருத்தர் கையெழுத்து போட்டு இருக்கார். கவர்மெண்ட் காசையாவது வாங்கிக் குடுத்து ஊருக்குப் போகச் சொல்லணும். பிளீடிங் வேற அதிகமா இருக்கு. சாந்தியைக் கூப்ட்டு அந்தப் பொண்ணுக்கு நாப்கின் மாத்த ஹெல்ப் பண்ணச் சொல்லு."

"சாந்திம்மா, அந்த லாஸ்ட் பெட்க்கு நாப்கின் மாத்த ஹெல்ப் பண்ணுங்க."

இரண்டு நாப்கின்களை எடுத்துக்கொண்டு கையுறையை மாட்டியபடியே கமலாவின் காலருகில் வந்து நின்று துணியை மெல்ல முட்டி வரை தூக்கியிருப்பாள் சாந்தி. திடுக்கிட்டவளாய் எழுந்து மறுப்பாய்த் தலையசைத்துக்கொண்டிருந்தாள். கண்களில் பயம் அப்பட்டமாகத் தெரிந்தது.

"இன்னாமா பாக்குற.. உதுரம் ரொம்போ போவுதுனு சிஸ்டர்தான் மாத்தச் சொன்னாங்க." பெருவிரலளவு பொட்டும் மிகவும் எளிமையான முகமும் வரிசைப்பற்களுடன் கூடிய புன்னகையும் சாந்தியைப் பரிச்சயமான ஒரு ஆளாகக் காட்டியது.

"கால தூக்கிக் குத்துக்காலு வையி. மேலே பெட்சீட் போட்டுக்க, மாத்தி உட்டுர்றேன்."

"இல்ல வேணாம்."

"வேணாமா.. எம்மோவ் சின்ன சிஸ்டரு. அந்த பெரிய சிஸ்டர கூட்டியா, இந்தப் பொண்ணு நாப்கின் மாத்த வேணாம்து.."

"என்னா மென்டலா நீயி. நாப்கின் மாத்தலனா இன்பெக்சன் ஆகிடும். உன் குழந்தைய பாத்தியா. அழுதுனு இருக்கு, அதுக்குப் பால் குடுக்கணும். சீக்கிரம் மாத்து ம்ம்.."

"இல்ல, என்கிட்ட காசு எதுவும் இல்ல.. குடுக்கவும் யாரும் இல்ல. என் புருசனையும் காணல. ஊருக்கும் போகமுடியாது. அங்கயும் யாருமில்ல."

"சரி.. அழுகாத.. குழந்தைய அனாதை ஆசிரமத்துல சேத்துடலாமா?" என்ற கேள்வியில் ஆழம் பார்க்கும் தன்மை அப்பட்டமாகத் தெரிந்தது.

"குழந்தை அனாதையாயிட்டா அப்பறம் நானும்தான அனாதையா பூடுவேன். அந்த எழவெடுத்தவன கட்டுலனாலும் நான் வேற யார கட்டிருந்தாலும் குழந்தை பெறந்திருக்கும்ல. அவன் செத்துப்போயிருந்தா? இல்ல வேற எது ஆனாலும்.. என் வயித்துல இருந்து வந்ததுதான.. அதுக்கு நான்தான பொறுப்பு. அதெல்லாம் வேணாம். நானே வளத்துக்குவேன்" என்ற வார்த்தைகள் ஆழத்திலிருந்து பிறந்தவையாக அங்கு சூழ்ந்திருந்த இருவரும் உணர்ந்தனர்.

"ம்ம்ம். குட். இப்ப உன் ஹெல்த் சரியாகணும். அதான் முக்கியம். உனக்கு சாப்பாடு வந்திடும். சாப்பிட்டு குழந்தைக்குப் பால் குடு.. இன்னும் ரெண்டு நாள்ல நீ டிஸ்சார்ஜ் ஆகிடுவ. சரியா.."

அவள் அந்த மருத்துவமனையை விட்டு வெளியேறுவதற்குள் அவளுக்கு இந்த வீட்டை ஏற்பாடு செய்திருந்தாள் சாந்தி. அவளின் வீடும் அந்த ஏரியாவில்தான் இருந்தது.

"ஊடு புடிச்சிக்கிதா கண்ணு. என்னா பக்கத்துலயே கூவம் வேற. அதான் ஓசனையா இருக்கு எனக்கு."

"நான் கூவம் நாத்தம்னு நெனைக்கலகா.. இது நாத்தம்னு மூக்க பொத்துறவன் கப்புதான் இதுல ஓடுது. அதனால இங்க குடியிருக்குறது குத்தமும் இல்ல.. அவமானமும் இல்ல. இப்ப எனக்கு இருக்க ஒரே கவலையே இந்தக் கொயந்தய எப்படி காப்பாத்த போறேன்னுதான்."

"அதெல்லாம் நான் ஒனக்கு வேலை பாத்து வெக்கிறேன், கவலப்படாத. எனக்கு இருக்குற கவல எல்லாம் இங்க இருக்க ஆம்பள பொரம்போக்கு பயலுங்க ஒரு பொம்பளைய விடமாட்டானுங்க.. தந்திரமா பேசி வலைய விரிப்பானுங்க.. நீ சின்ன வயசுக்காரி.. ஏற்கனவே ஒருத்தனால அடிபட்டவ, புரிஞ்சி நடந்துக்க."

"அக்கா நான் ஏற்கனவே ஒரு ஆம்பளையால இந்த நெலையில நிக்கிறேன்.. திரும்பவும் இன்னொரு ஆம்பளைகிட்ட நான் சீரழிய விரும்பல. எனக்கு என் புள்ள போதும்," என்ற கமலாவின் வார்த்தைகளில் விரக்தியும் வெறுப்பும் கலந்திருந்தன.

"எல்லா ஆம்பளையும் கெட்டவன்னு ஒதுக்கிட முடியாது. சுத்தி இருக்குறவன்ல எவன் நல்லவன் கெட்டவன்னு கண்டுபுடிக்க வேண்டியது நம்ம வேலையில்ல. நீ பாட்டுக்கு உன் வேலையைப் பாரு. நல்லதோ கெட்டதோ ரெண்டும் சேந்ததுதான் ஒலகம், புரியுதா?"

"ம்ம்.. சரிக்கா.."

சாந்தியின் அறிவுரைப்படிதான் இன்றுவரை நடக்கிறாள். அவள் உடல்நிலை தேறும் வரை அவளின் செலவிற்கென்று அரசு உதவிப்பணமும் ஊழியர்களிடம் வசூலித்த கணிசமான பணமும் வழங்கினார் தலைமைச் செவிலி.

ஒரு மாதத்திற்குப் பின் சாந்திக்குத் தொந்தரவாக இருக்க விரும்பாமல் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வீட்டு வேலைக்குச் சென்றுவிட்டாள். ஆரம்பத்தில் மிகவும் குறைந்த வருமானத்திற்கு மேலோட்டமான வேலைகள்தான் செய்தாள். நாளாக நாளாக வேலையும் வருமானமும் அவளுக்குப் புதுத் தெம்பையும் தைரியத்தையும் வாழ்வில் சிறு தன்னம்பிக்கையையும் அளித்தது.

வேலை செய்யும் வீட்டில் கொடுத்த குழம்பை அடுப்பில் சூடேற்றிவிட்டு, பாத்திரங்களைக் கழுவச்சென்றால் குடம் பக்கெட் தொட்டி என்று அனைத்தும் நிரம்பியிருந்தது..

"இவ்வளோவும் எப்புடி மேட்டு மேலேயிருந்து தூக்கியாந்துச்சோ தெர்லயே.."

என்று மகளை அங்கலாய்த்தபடியே வேலைகளை முடித்து சற்று இளைப்பாறப் படுத்தாள். தூக்கம்தான் வந்தபாடில்லை. ஆனாலும் உடலுக்கு ஓய்வு தேவையாய் இருந்ததுபோலும். ஒரு துணி மூட்டையைத் தலைக்கு வைத்துக்கொண்டு இடது கையை வெளிச்சத்தை மறைத்தாற்போல் அசையாமல் படுத்துக்கிடந்தாள்.

"தடால்" என்ற சப்தத்துடன் வீட்டின் தகரக்கதவைத் தள்ளிக்கொண்டு வந்து விழுந்தது ஒரு புத்தகப்பை. திடுக்கிட்டு எழுந்தவள் பையைப் பார்த்துவிட்டு மறுபடியும் அதேபோல் அசையாது படுத்துக்கொண்டாள். வெளியே பெருங்கூச்சல் சப்தம்.. மொத்தம் மூன்று குரல்கள்.. மூன்றும் பழக்கப்பட்ட, நன்கு தெரிந்த குரல்கள். சாயந்திரம் கமலா வேலைக்குச் சென்றதும் என்னென்ன விளையாடலாம் என்ற கருத்துக் கணிப்புகள்.

"மூன்ல ஒன்னாச்சும் படிக்கலாம்னு சொல்லுதா பாரு" என்று நினைத்துக்கொண்டிருக்கையில், 'வ்வ்க்க்க்ர்ர்ர்ரிரிரீச்' என்ற கதவின் ஓசை. இந்த ஓசை வசந்தி கதவைத் திறக்கும்போதும்

மூடும்போதும் மட்டும் கேட்கும் பிரத்யேக ஓசை. அவளுக்கும் அந்தத் தகரக் கதவிற்குமான மொழி, பிரியம், பிணைப்பு அல்லது அழைப்பு அல்லது நட்பு அல்லது எதுவோ ஒன்று. அந்தக் கதவு வெறும் தகரம்தான் அஃறிணைதான். ஏதோவொன்றைப் பற்றுவது போலொரு பற்று. துளி அன்பால் செய்த நம்பிக்கை. வருபவளை வாவென்று அழைப்பதைப்போல. பசியோடு கதவைத் திறக்கும்போது, "சாப்பிடேன்" என்று வாஞ்சையாய்ச் சொல்வதைப் போன்றொரு ஓசை என்று ஒரு பௌர்ணமி தினத்தில் நிலாவைப் பார்த்தபடி கதவில் சாய்ந்து அமர்ந்துகொண்டு வசந்தி அம்மாளிடம் கூறியிருந்தாள்.

உள்ளே நுழைந்தவள் கமலத்தைக் கடந்து பாத்திரத்தை உருட்டிவிட்டு, அவளின் பூப்போட்ட தட்டைத் தேடுகிறேனென்று மீதத்தையுமுருட்டி, ஒருவழியாய்த் தட்டைக் கண்டடைந்து சாதத்தை அள்ளிப்போட்டுக்கொண்டு, குழம்பைக் கிளறாமல் மேலோட்டமாக ஊற்றிக்கொண்டு உட்கார்ந்தாள். தன் மகளின் செய்கைகளைக் காது வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த கமலம், "குடிக்க தண்ணிய எடுத்து வெச்சின் உக்காரு".

"முய்ச்சின்தா இர்க்கியா மா" என்றபடியே குட்டி செம்பில் தண்ணீருடன் மறுபடியும் உண்ண அமர்ந்துகொண்டாள்.

இன்றைய நவீன உலகில் வீடென்ற வரையறைகட்குள்ளடங்காத ஒரு வீடு.

பொருளாதார நிபுணர்கள் வறுமையென்று கிழித்திருக்கும் கோடுகளுக்கும் கீழான வாழ்வைத் தலைவணங்கி ஏற்றவர்கள் வாழும் வீடு. நாளும் நாளும் நல்லதொரு நாளே என்று வாழ்வை வாழத் துணிந்து, வாழ்வை வாழக் கற்றுக்கொண்டவர்கள் வாழும் வீடு. அன்னியோன்யங்களால் நிரம்பிய மகிழ்ச்சி வீடு. அந்த வீட்டினுள், நான்கு அடுக்கு கொண்ட இரும்பு ஷெல்ப், அடுப்பு வைக்கவென்று ஒரு பழைய டேபிள், டேபிள் கீழே குடிதண்ணீர் குடம், டேபிளிற்கும் ஷெல்ப்பிற்கும் இடையே சமையல் பாத்திரம், படுத்துறங்க, இன்னபிற அவ்வளவே.

"சாந்தரம் வேலிக்கி போவியா மா" என்று கேட்டுக்கொண்டே அம்மாவின் வலது கையைத் தலையணையாக்கிக் கொண்டாள். மகளின் புறம் திரும்பிப் படுத்துக்கொண்டு.. "ம்" என்ற ஒற்றை எழுத்தைப் பதிலாக்கினாள் அன்னை. அவர்களின் சாயங்கால விளையாட்டுப் பிளான்களை அடுக்கிக்கொண்டிருந்தாள் வசந்தி. பல "ம்" களால் அறையெங்கும் கனத்திருந்தது.

மாலை வேலையை முடித்து கமலா வீடு வந்து சேர்வதற்கு ஏழு மணிக்கு மேல் ஆகிவிடுவதுண்டு. மதியம் அடித்த வெயிலிற்கும் புழுக்கத்திற்கும் பலத்த மழைவருமென அந்தப் பகுதி மக்கள் அனைவரும் வானிலை அறிக்கை முன்பு நின்றிருந்தனர்.

இலேசான, மிதமான மழையென்றால் ஆறு தாங்கிக்கொள்ளும். கனமான மழையென்றால் ஆறு பக்கத்திலிருக்கும் ஐந்து தெருமக்களும் பஸ்ஸ்டாண்டில் படுக்க இடம் பிடிக்க வேண்டும். இரண்டு மூன்று நாட்கள் மழை நீடித்தால் அருகிலிருக்கும் அரசுப்பள்ளியைத் திறந்துவிடுவார்கள். ஆனால், மழைக்கு வாய்ப்பேயில்லை என்று வானிலை அறிக்கை நிபுணர்கள் கூறியதால் அனைவரும் அவரவர் வீடுகளில் சிறு எச்சரிக்கை உணர்வுமின்றி உறக்கத்தைத் தழுவிக் கிடந்தனர்.

தகரம் மேவிய கூரையில் பாறாங்கற்களை எரிவதைப்போல மழை பொழியத் துவங்கியது. திடீரென எங்கிருந்து அவ்வளவு பெரிய பிசாசு மழை வந்து தொலைந்ததோ தெரியவில்லை. கமலம் எந்திரித்து வெளியே எட்டிப் பார்க்க, கூவம் ஆற்றின் தண்ணீர் வரத்து உள்ள பகுதியில் ஏற்கெனவே மழைப்பொழிவு போலும், மழைநீர் பின் தகரத்தை எட்டி நின்றது. ஏற்கெனவே மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. மண்ணெண்ணெய் விளக்கை ஏற்றி வைத்துவிட்டு கமலா விடுவிடுவென வேலையில் இறங்கினாள். பாத்திரங்களை எல்லாம் ஒரு சாக்கில் போட்டுக் கட்டும்போதே வசந்தி எழுந்து உதவிக்கு வந்தாள்.

அடுப்பைத் தகர ஷெல்பின் மேல் வைத்துக் கொடிக்கயிற்றை அவிழ்த்து இறுக்கிக் கட்டினாள். பாத்திரசாக்கை டேபிளின் ஒரு காலில் இறுக்கிக் கட்டினாள். பிளாஸ்டிக் குடத்தைப் பக்கெட்டில் போட்டுத் தொட்டியில் மூழ்கடித்தாள். தொட்டியின் மேல் தகரத்தை வைத்து மூடி அது விழாதபடி அம்மிக்கல்லை மேலே தூக்கி வைத்தாள். அதற்குள் ஒரு கட்டைப்பையில் இரண்டு போர்வைகள், இருவருக்கும் மாத்துத்துணி, புத்தகப்பை என அனைத்தையும் எடுத்துக்கொண்டு, "அம்மா நான் பஸ் ஸ்டாண்ட்ல போயி எடம் புடிக்கிறேன் வந்துடு" என்று ஒரு பிளாஸ்ட்டிக் பையைத் தலையில் மாட்டிக்கொண்டு ஓடினாள் வசந்தி. இருந்த சேர்வாட்டுப் பணத்தையெல்லாம் ஒரு பாலித்தின் கவரில் சுருட்டி ஜாக்கெட்டின் இடதுபக்கம் சொருகிக்கொண்டு வீட்டை மூடிவிட்டு ஓட்டமும் நடையுமாகப் போகலானாள் கமலா.

அக்கம்பக்கத்து வீடுகளும் விழித்திருந்தது சிமினி விளக்கில் பளிச்சிட்டது. அனைவரும் அரக்கபரக்க அங்குமிங்கும்

ஓடிக்கொண்டிருந்தனர். மேட்டு மேலிருந்து வரும் தண்ணீர் வரத்து அதிகரித்துக்கொண்டேயிருந்தது. நேர்வழியாகச் சென்றால் பஸ் ஸ்டாண்டிற்குச் செல்ல நேரமாகும். எனவே, பாலத்தின் குறுக்கு சுவற்றில் ஏற்கனவே ஒரு அரசுப்பேருந்து இடித்ததால், உருவான சிறிய வழியில் உடலை நுழைத்துச் சாலையைக் கடந்து பஸ்ஸ்டாண்டை அடைந்துவிட்டிருந்தாள். நனைந்து கிடந்த முந்தானையைப் பிழிந்து முகத்தைத் துடைத்துக்கொண்டு மகளைத் தேடலானாள். அது நகரத்தின் மையப்பகுதியிலிருக்கும் பெரிய பேருந்து நிலையம். கைவிடப்பட்ட முதியவர் பிச்சைக்காரர் என ஆதரவற்றோருக்கு ஆதரவளித்திருக்கும் இடம். இன்று இவர்களுக்கும்.

மகளைத் தேடியபடியே பேருந்து நிலையத்தை ஒரு சுற்று வந்துவிட்டிருந்தாள் கமலம். முதலில் இல்லாத பதட்டம் இப்போது அவளைப் பீடித்திருந்தது. மறுபடியும் மறுபடியும் மறுபடியும் என நான்கு முறை மகளைத் தேடி பேருந்து நிலையத்தைச் சுற்றிவிட்டாள். முதலில் நடந்தபடியே தேடியவள் எப்போது அவளின் நடை ஓட்டமாக மாறியது என்று அவளே அறியவில்லை. ஒவ்வொருவரும் இவளை விநோதமாகப் பார்க்க ஆரம்பித்திருந்தனர். அது எதையும் உணரும் நிலையில் கமலா இல்லை. தெரிந்தவர்கள் ஓடுபவளை நிறுத்தி விசாரிக்க, கண்களை உலவ விட்டபடியே "எம் பொண்ணு.. எம் பொண்ணு" என்ற பதிலையே திரும்பத் திரும்பக் கூறியபடி வசந்தியின் வயது குழந்தைகளின் முகத்தைத் திருப்பித் திருப்பிப் பார்க்கலானாள். திடீரென்று எதிர் சாரியிலிருக்கும் இதேபோலொரு பேருந்து நிலையத்தின் நினைவு வர.. வண்டி வாகனம் எதைப்பற்றிய சிந்தனையும் சிறிதுமற்றுத் தடதடவென ரோட்டைக் கடந்து ஓடலானாள். அங்கேயும் ஓட்டமும் நடையுமாகப் பேருந்து நிலையத்தைப் பலமுறை சுற்றிவந்தாள்.

'நாம இங்க வந்த நேரத்துல வசந்தி அந்த பஸ்ஸ்டாண்ட் போயி நம்மள தேடுவாளோ' என்ற நினைப்பு வந்த உடனே முதலில் வந்த பேருந்து நிலையத்திற்கு வந்துவிட்டிருந்தாள். சுற்றிச் சுற்றி தேடியது மட்டும்தான் மிச்சம். மகளை எங்கும் காணவில்லை. ஒரு மூலையில் தன்னையுமறியாமல் அமர்ந்துவிட்டிருந்தாள். கமலாவிற்கு அதிகமான பயம் சூழ்ந்துகொண்டது. 'இதுக்கு முன்னாடி சண்டைப்போட்டவங்க யாராவது நம்மள பழிவாங்க குழந்தையை ஓடுற ஆத்துல தூக்கி போட்டுருப்பாங்களோ.. இல்ல அந்த டீக்கடைக்காரன் ஏதாவது பண்ணிருப்பானோ.. இல்லைனா அவ அப்பன் வந்து கூட்டின் போயிருப்பானோ.. இல்ல வேற யாராவது கடத்தியிருப்பாங்களோ..' ஒவ்வொன்றையும் நினைக்க நினைக்க அவளுள் பூகம்பம் வெடித்துக்கொண்டிருந்தது. பைத்தியத்தைப்போல ஒன்றுக்கொன்று தொடர்பற்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

மழைவிட்டு வானம் வெளுக்கத்தொடங்கியிருந்த சமயம். வெயில் முகத்திலறைந்து அவளை உலுப்பிக்கொண்டிருந்தது. ஒரு எந்திரத்தைப் போல, சவத்தைப்போல.. நீரில் கரைந்த கோலத்தைப்போல மகளில்லாத உலகை வெறுத்தவளாய் கமலா ஒரு முடிவுடன் வீட்டை நோக்கி நடக்கலானாள்.. ஏதுமற்றவளாகியிருந்தவளுக்கு எதுவுமற்றிருந்தது இந்த உலகு. மழையில் நனைந்த வெற்றுக்காகிதமாய் நடந்துவந்தாள். கதவின் ன்வ்வ்க்க்க்ர்ர்ர்ரிரிரீச் என்ற ஒலியில் முட்டிக்கொண்டு வந்த அழுகையை அடக்கிக்கொண்டு கணுக்காலளவு உள்ள நீரில் வீட்டினுள் நுழைந்தாள். இந்த உலகில் வாழ்வதற்கான ஒரு பிடிப்பு தன்னை மட்டும் தளர்த்திவிட்டு, இருளைப் பூசிக்கொண்டதைப் போல், என்ன செய்வது ஏது செய்வதென்ற எந்த யோசனையுமற்றவளாய் மரணம் மட்டுமே பிரதானமாய்.. அனைத்திற்குமான தீர்வாய்.. தன் மகளை நோக்கிய பயணமாய் சாவைமட்டுமே பார்த்தபடி நின்றிருந்தாள்.

இரும்பு ஷெல்பில் பாதி நனைந்துகிடந்த புடவையைக் கையிலெடுத்துக்கொண்டாள். கொஞ்சம் எக்கினாலே கூரை எட்டிவிடும் உயரம்தான்.. ஒரு பக்கப் புடவையைக் கூரையில் முடிந்துவிட்டாள்.. மறுமுனையில் கழுத்திலிடும் சுருக்கைப் போட்டுவிட்டாள். கால் தரையில் படாதவாறு தொங்க வேண்டுமெனில் உயரத்திற்கு ஏதாவது வேண்டும். டேபிளை இழுத்துவர போனவளுக்கு அதை இழுக்க முடியவில்லை. பிறகுதான் கவனித்தாள்.. அதன் மேல் ஏதோவொரு துணிமூட்டை இருந்ததை. அதன் ஓரத்தில் இரத்தக் கறை வேறு.

கை நடுங்க விரல்கள் நடுங்க அதைத் திறந்து பார்த்தால் அது துணி மூட்டையல்ல, அவளின் வசந்தி துணிகளுக்கு நடுவே பத்திரமாய்ச் சுருண்டு படுத்துக்கிடந்தாள். துணிகளை விலக்கியதில் விழித்து, எழுந்தமர்ந்து "அம்மா" என்பதற்குள் வசந்தியின் கன்னத்திலிருந்து வந்த 'பளார்' என்ற சப்தம் வீட்டை நிறைத்தது.. இடியோசைகளுக்கிடையே இரண்டு அழுகுரல்களும் வெளியே சற்று மங்கித்தான் கேட்டன. ■

உலக சினிமா

தொடர் - 15

• கவிஜி

# மீண்டெழும் ஒரு துயர வாழ்வு

**வே**லையில்லாமல் இருப்பது அல்லது வேலையில் இருந்தும் சம்பளம் இல்லாமல் இருப்பது அதுவும் திருமணம் ஆகி குழந்தையும் வந்த பிறகு இப்படி ஆவது சிக்கலின் உச்சம். மனதில் ஏறி நிற்கும் பாரத்தின் சுவடுகளை வார்த்தைகளால் வடிக்க இயலாது. கல்லும் கரையும் பெரும் பசியின் தர்க்கத்தை *The Pursuit of Happyness* என்ற திரைப்படத்தில் வரும் அப்பாவின் (வில்ஸ்மித்) சின்ன கண்கள் வழியே காண முடியும். ஐந்து வயது குழந்தைக்கு (ஜேடன் வில்ஸ்மித்) எதுவும் புரியாதபோதும் ஏதோ புரிந்துகொண்டேயிருப்பதாய் இருக்கிறது. அது குழந்தையின் கண்கள் வழியே மிக மிக சாமர்த்தியமான பேருண்மையைக் கொட்டித் தீர்க்கிறது.

ஸ்கேனர் விற்கும் விற்பன்னன் இக்கதை நாயகன்.

படம் ஆரம்பத்தில் இருந்தே அவனுக்கும் மனைவிக்கும் இடையே பொருளாதாரப் பிரச்சனைகள். ‘நான்கு வாரமாகத் தொடர்ந்து நான்கு ஷிப்ட்டுகள் பார்க்கிறேன்’ என்று சொல்லி கண் கலங்கும் மனைவியின் பக்கம் அதிகபட்ச நியாயங்கள் இருக்கின்றன. பெரும் சுமையின் தாங்கொணாப் படபடப்பு அது. மேல் தட்டு வாழ்வை விரும்பிய ஒரு பெண்ணின் அசைக்க முடியாத நம்பிக்கைகள் தவிடு பொடியாக நொறுங்கிச் சிதறுவதை அவளால் பொறுத்துக்கொள்ளவே முடிவதில்லை. என்ன செய்ய.... எல்லாம் கடந்த கனவுக்குள் கணவனின் லட்சியங்களும் வாழ்வின் மீதான பெரு மதிப்பும் அவனைத் தொடர்ந்து போராட மட்டுமே சொல்கிறது. பணம் அற்ற நாட்களில் அவன் ஒரு பிணத்தின் நடையைக் கொள்வது.. நம்மூர் என்றெல்லாம் இல்லை, அமெரிக்காவிலும் அது இயல்புதான் போல.

என்ன...! கோட் சூட் போட்ட பிச்சைக்காரர்கள்.. அவ்வளவுதான்.

பொருளாதாரச் சமன்பாடின்மை... உலகம் எங்கும் ஒரே மாதிரியான தாக்கத்தைத்தான் ஏற்படுத்துகிறது. பசி இங்கே கஞ்சிக்கு. அங்கே பிரட்டுக்கு. அவ்வளவுதான். மனைவி விட்டுச் சென்றபின்.. வேலை தேடி நாயா அலையும் கதை நாயகன்.. பெரும் பயத்தை நமக்குள் விதைக்கிறான். அப்படி என்ன ஆயிரம் ஆண்டுகளா வாழப் போகிறோம் என்ற வலிமையான மனதைக் கூட சற்று அசைத்துத்தான் பார்க்கிறது வேலையற்று இருக்கும் சூழல். அடுத்த வேளை சோற்றுக்கு என்ன செய்வது... அன்றிரவு தங்கி தூங்க என்ன செய்வது.. விடிந்ததும் குளித்து.. டாய்லெட் போக என்ன செய்வது. இந்த மூன்று கேள்விகளுக்குப் பின்னால் இருப்பதுதான் ஒரு மனித வாழ்வின் பெரும் பகுதி. பணம் சேர்ப்பதெல்லாம் அதற்கு அப்புறம்தான். தனி மனிதன் ஒருவனுக்கு உணவில்லை என்றால் அது உணவில்லை என்றுதான் அர்த்தம். பசித்தவன் ஏதாவது அதன் பிறகு கத்தலாம். யாருக்கும் கேட்காது.

வீட்டிற்கு வாடகை கொடுக்க முடியாமல் ஒவ்வொரு முறையும் வீட்டு ஓனரிடம் கூனி குறுகி நிற்கையில் அந்த ஆறடி உயரம்.. அரை அங்குலமாக அடி பணிந்து போவதில் தானற்றுப் போகிறது... தான் என்பதெல்லாம். நான் என்று சொல்வதெல்லாம் பணம் கொண்டவன் கொள்ள வேண்டியது. இல்லை பிச்சைக்காரன் சொல்ல வேண்டியது. இடைப்பட்ட மனிதன் அந்த வார்த்தைக்கு வெகு தொலைவில்.. அப்பாலுக்கு அப்பால் இருக்கிறான்.

நாளை ஒரு வேலைக்கு நேர்முகத் தேர்வுக்குப் போக இருக்கும் சூழலில், டேக்ஸ் கட்டாத குற்றத்துக்காகப் போலீஸ் கதை நாயகனைக் கைது செய்துகொண்டு போகிறது. எத்தனை சொல்லியும் சட்டம் தன் கடமையைச் செய்கிறது. விடிந்ததும் விடுதலை செய்ய, அங்கிருந்தே ஓடிச் சென்று நேர்முகத் தேர்வு அறைக்குள் நுழைகிறான். உள்ளே அணிந்திருக்கும் பனியன் தெரிய, மேலே ஒரு பழைய கேசுவல் கோட். ஜீன்ஸ் பேண்ட். முகம், உடல் எல்லாம் காவல் துறை கைது செய்தபோது, கொடுக்க இயலாத வாடகையைச்

சமாளிக்க, வீட்டிற்குச் சுண்ணாம்பு அடித்துக் கொண்டிருந்ததால் தெறித்த சுண்ணாம்புத் துளிகள். இப்படி ஒரு கோலத்தில்தான் நேர்முகத் தேர்வு.

எடுத்ததுமே உண்மையைச் சொல்லிவிடுகிறான். நேர்முகத் தேர்வுக் குழு பார்க்கிறது. நேர்முகத் தேர்வில் பொதுவாகவே கவர்வதற்காகப் பவ்யமாய் நாம் பேசுவோமே.. அப்படி ஒரு முகபாவனையில் இருக்கிறது அவனின் பாவப்பட்ட உடல்மொழி. அவனாகவே கூறுகிறான். "இப்ப ஒரு கேள்வி நீங்க கேட்டு, அதுக்கு எனக்குப் பதில் தெரியலன்னா நான் தெரியலன்னு சொல்ல மாட்டேன். அதத் தேடிப் போய்க் கண்டடைவேன்" என்கிறான். ஆனாலும் திருப்தி அடையாத குழு "ஒருவன் நேர்முகத் தேர்வுக்குச் சட்டையில்லாமல் வருகிறான். அந்தச் சூழலில் நான் என்ன சொல்ல வேண்டும்" என்று கேட்கிறது.

"ஒருவேளை அவனின் பேண்ட் நன்றாக இருக்கிறது என்று கூறலாம்" என்கிறான் கதை நாயகன்.

பளிச்சென்று ஒரு தோற்றம் அல்லது ஒரு தெளிவு அல்லது ஒரு வலிமை முன்னால் தோன்றிவிடுகிறது. வேலை கிடைத்துவிடுகிறது. ஆனால் கொஞ்ச நாட்களுக்கு அவனுக்குச் சம்பளமில்லை. சும்மாதான், இன்டெர்ஷிப் மாதிரிதான் வேலை செய்ய வேண்டும். வேறு வழியின்றி அவனும் சம்மதிக்கிறான். அதற்கிடையில் ஒன்று இரண்டு ஸ்கேனர்கள் விற்க முடிகிறது. அதன் மூலம் வரும் வருமானத்தில்தான் குழந்தைக்கும் தனக்குமான நாட்களைக் கடத்துகிறான். ஒரு கட்டத்தில் வீட்டு உரிமையாளர் கதவை அடைத்து வெளியே தள்ளிவிடுகிறார். எங்கு செல்வது என்று தெரியாமல்... இயலாமையின் சுவற்றில் பிடிகளற்று நிற்கையில் நாமும் கண் கலங்க நேர்கிறது. ஏதோ புரிந்துகொண்ட குழந்தை அங்கிருந்து வர மாட்டேன் என்று அழுது அடம் பிடிக்கிறது. இருக்கும் கோபத்தை எல்லாம் குழந்தை மீது காட்டி இழுத்துப் போகையில் வாழ வழியில்லாத, வாழ்வாதாரம் அற்ற ஒரு தந்தையின் தவிப்பு அங்கே வேகவேகமாய் நடக்கிறது.

குறிக்கோளற்ற பாதைக்குக் குறுக்கு வழிகள் கிடையாது.

ரயில்வே ஸ்டேஷன்.. டாய்லெட்டுக்குள் அந்த இரவைக் கழிக்கிறார்கள். மடியில் குழந்தை தூங்கிக் கிடக்க வெறித்த விழிகளோடு... வீறிட்டு அழ முடியாத பெரும் துக்கத்தைக் கொண்டவனாக அமர்ந்திருக்கிறான். அப்போது யாரோ கதவைத் தட்ட.. கதவைத் திறக்கவும் முடியாமல்.. திறக்காமல் இருக்கவும் முடியாமல் அந்த அப்பா தடுமாறும் இடம், "காணி நிலம் வேண்டும்..." என்று பாரதி நம் காதுக்குள் கத்திச் சொல்வது போலவே இருக்கிறது. இந்த உலகம் வீடற்றவர்களை ஒருபோதும் மதிப்பதில்லை. வாய்ப்பு கிடைத்தால் மிதிக்கவும் மறப்பதில்லை. அந்தச் சின்ன கண்கள் வழியாக வேறு வழியில்லாமல் கண்ணீர் வந்து விழுகிறது. துடைக்கவும் மறந்த கன்னங்களில்தான் எத்தனை சோகம். அத்தனையும் சோகம்.

அதன் பிறகு.. தினமும் வரிசையில் நின்று அடித்துப் பிடித்து இடம் பிடித்து அந்த இரவு மட்டும் தூங்கிக்கொள்ளும் வசதி கொண்ட லாட்ஜில் வாழ்வு தொடர்கிறது. ஒருநாள் திடும்மென மேலதிகாரி அவனை உள்ளே அழைத்து 'நாளையில் இருந்து நீங்கள் புதிய சட்டை அணிந்துகொண்டு வரலாம்' என்று சொல்லி சின்ன சஸ்பென்ஸுக்குப் பின்.. பணி நிரந்தரம் ஆனதையும், இனி சம்பளம் உண்டு என்பதையும் சொல்கிறார்கள். விட்டால் அழுதுவிடும் கண்கள் சிவக்க.. முகத்தை மீறிய அழுத்தத்தோடு.. நன்றி சொல்லிவிட்டு... சாலையில் கூட்டத்துக்குள் நடக்கத் தொடங்குகிறான். கூட்டம் பிளக்கும் நடையில் கதை நாயகனின் உடல் மொழியும்... முக பாவனைகளும் அமர்க்களப்படுத்தும். அது வாழ்வின் அடுத்த கட்ட நகர்வு. பசி கொண்ட வயிற்றின் கதவுகள் மெல்ல மெல்ல அடைபடும் கர்வம். நாமும் இந்த மனிதர்கள் போலத்தான்.. என்று இத்தனை நாள் தனித்து விடப்பட்ட புள்ளியில் இருந்து இந்த உலகோடு தன்னை இணைத்துக்கொள்ளும் பாங்கும்... மெல்லின சலசலப்பு. கையைத் தூக்கிக் கத்தத் துடிக்கும் செய்கையில் அப்படியே மெல்லக் கரைந்து தனக்குள்ளாகவே பொங்கிப் பிரவாகமாவது நெகிழ்வின் நெகிழித்தன்மை. இப்போதுதான் தான் ஒரு மனிதனாகவே ஆகி இருக்கிறோம் என்ற நினைப்போடு ஓடிச் சென்று இந்த உலகில் தனக்கென்று இருக்கும் தன் குழந்தையைத் தூக்கிக் கட்டிக்கொள்கையில் நமக்கு நிம்மதி பெருமூச்சு வருகிறது.

அதன் பிறகு அந்தக் கதை நாயகன் பெரும் பணக்காரன் ஆகிவிட்டான். இது ஓர் உண்மை சம்பவத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட கதை... எடுக்கப்பட்ட படம் என்று டைட்டில் போடுகிறார்கள். ஒரு துயரமான வாழ்வு மீண்டெழுவதை மிக அருகில் இருந்து நாம் பார்த்திருக்கிறோம்.

இந்த வாழ்வில் வேலையற்று இருப்பதுதான் மிகக் கொடுமையான தண்டனை. அதன் நீட்சியில் நம்மை ஒதுக்கித் தள்ளும் இவ்வுலகத்தைப் போல கண்ணாடி வேறு ஒன்று எப்போதுமே இல்லை. உடையும் வரைதான் கண்ணாடி அழகு. உடையாத வரைதான் உள்ளமும் அழகு.

**திரைப்படம் : The Pursuit of Happyness**
**இயக்குநர் : Gabriele Muccino**
**மொழி : ஆங்கிலம்**

# அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..

**கடிதம் - 10**

***எழுதியவர் : கவிஞர் வைரமுத்து***

சென்னை

*23.1.98*

*இனிய கவிஞன் விக்ரமாதித்யனுக்கு!*

*உங்கள் 'ஆதி' பார்த்தேன்; அர்த்தமுள்ள கவிதைகளின் அற்புதத் தொகுப்பு.*

*புதிய முயற்சியால் புதுக்கவிதைக்குப் புதுரத்தம் பாய்ச்சியிருக்கிறீர்கள்.*

*சங்க இலக்கியத்தைப் போல் – உங்கள் கவிதைகளில்தாம் சொற்செட்டும் சொற்சிக்கனமும் இருக்கின்றன.*

*நவீன கவிதைகளெல்லாம் வெறும் உள்மன உளைச்சல்களாகவே வந்துகொண்டிருக்கும் காலகட்டத்தில் உங்கள் கவிதைகள் சமூகம் சார்ந்தவையாக இருப்பது பாராட்டுக்குரியது.*

*சீரிய கவிதைகளின் சிறிய தொகுதியாக இது இருந்தாலும் ஒவ்வொரு கவிதையும் ஒரு தீக்குச்சியைப் போல் திகழ்கின்றன; கந்தகமும் வெப்பமும் சரியான விகிதத்தில்.*

*படிக்கின்ற வாசகன் பற்றிக்கொள்வான்.*

*இந்தத் தொகுப்பில் என்னை மிகவும் கவர்ந்த அம்சம் எந்தக் கவிதையிலும் இருண்மை இல்லை.*

*'அடிமாடுகள்' – மனதைக் கனக்க வைத்த கவிதை.*

*'பயணப்பாடு – கண்ணாடிக் கலைஞர்கள் – எந்த நம்பிக்கையில் – திமிரும் கவிமனம் – காசு பணம் பற்றிய கவிதை –*

இவன் கனவில்'... இப்படி தலைப்பிட்ட கவிதைகளும் தலைப்பில்லாப் பல கவிதைகளும் என் மனசின் பரப்பெங்கும் மையமிட்டிருக்கின்றன.

நெஞ்சைக் கவ்வுகின்ற உத்திகளும் – நினைத்து நெகிழவைக்கின்ற சொல்லாட்சிகளும் – ஒரு கவிஞனுக்குரிய ஈரமும் – இதயத்தில் மின்னல் வெட்டுகிற கற்பனைகளும் உங்கள் 'ஆதி'யின் பரப்பெங்கும் பரவிக்கிடக்கின்றன.

கவிதையை உணர்ந்த அளவுக்கு உணர்த்தியிருப்பது உங்கள் விரலுக்குக் கிடைத்த வெற்றி.

மொழியை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை ஒவ்வொரு கவிதையிலும் உணர்ந்து வியந்துபோனேன்.

நவீன கவிதை என்று சொல்லிக்கொண்டு என்னென்னவோ எழுதிக்கொண்டிருக்கும் சிலரின் குழப்பம் தெளிவிக்க இந்த 'ஆதி' பயன்படும் என்பதில் ஐயமில்லை.

நீங்கள் உடல்நலம் காப்பது முக்கியம்.

'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று திருமூலர் சொல்லியிருப்பதைப் போல- உங்கள் உடம்புதான் உயிர்; உயிர்தான் ஒளி; ஒளிதான் கவிதை.

நல்ல கவிஞன் நீங்கள்!

நீங்கள் நீடுவாழ வேண்டும்!

அந்தம் இல்லாமல் உங்கள்

'ஆதி' தொடரட்டும்.

வாழ்த்துக்களோடு...

வைரமுத்து

*23 1 98*

•

***அடிக்குறிப்புகள் :***

என் இலக்கிய வாழ்வில் முதன்முதலில் வாங்கிய விருது கவிஞர் வைரமுத்து வழங்கும் கவிஞர்கள் தின விருதுதான். பிற விருதுகள் எல்லாமே அதற்குப் பிறகு வந்தடைந்தவைதாம். அவருடைய பிறந்தநாளில் வழங்கப்படுவது அது. அந்த நாளில் என்னைப் பார்த்ததும் அவர் சொன்னது, 'உங்களை முதன்முதலில் இப்போதுதான் பார்க்கிறேன்.' 'இல்லை, நக்கீரன் இதழுக்காக இருவேறு உலகம் என்ற தலைப்பில் உங்களை நேர்காணல் கண்டிருக்கிறேன்,' என்று பதிலளித்தேன். அது சமயம் அவர் இயக்குநர் பாரதிராஜாவின் ரஜினி நடித்த கொடி பறக்குது பாடல் பதிவில் இருந்தார். நானும் நண்பர் சாந்தாராமும் சென்றிருந்தோம். அப்போது அவர், 'நான் சொன்னவை அப்படியே என் சொற்களில் எடுக்கவேண்டும்,' என்றார். 'பொதுவாக நான் அப்படித்தான் செய்வது வழக்கம்' என்றேன். அந்த நேர்காணல் முக்கியமான ஒன்று.

என்னுடைய ஆதி தொகுப்பை அவருடைய வீட்டுக்குச் சென்று கொடுத்திருந்தேன். அந்தக் காலகட்டத்தில் இயக்குநர் கே.ராஜேஷ்வரின் படம் ஒன்றிற்காகப் பாடல் எழுதும் பொருட்டு இயக்குநர் ராஜேஷ்வரின் வீட்டுக்கு வந்திருந்தவர் நான் அங்கிருப்பது தெரிந்து வேட்டி சட்டை பரிசளிப்புடன் இந்தக் கடிதத்தையும் சேர்த்து வழங்கினார்.

• • •

## கடிதம் - 11

***எழுதியவர் : கவிஞர் வைரமுத்து***

கவிஞர் விக்ரமாதித்யன் அவர்கள்

தென்காசி

*6.1.2005*

அன்புடையீர்!

வணக்கம்.

"வைரமுத்து இலக்கியத்தடம்" தொகுப்பிற்கு "அகவாழ்வை அழகுபடச் சொல்லும் கவிஞன்" என்ற தலைப்பில் அரியதொரு கட்டுரை அளித்தமைக்கு நன்றி.

என் இசைப்பாடல்களின் பரப்பில் உங்கள் உள்ளம் பரவலாகத் தோய்ந்ததன் சிறப்புமிக்க

தெறிப்பு அந்தக் கட்டுரை. இசைவயப்பட்ட இதயத்துடன் இயங்கும் படைப்பாளர் நீங்கள் என்பதையும் அது பறைசாற்றுகிறது.

உங்கள் அன்பில் நெகிழ்கிறேன்.

உங்களுக்கு இந்நூலின் படியொன்றை அனுப்பியிருக்கிறேன்.

இக்கட்டுரைக்காக நீங்கள் செலவழித்த பொன்னான பொழுதை, உங்கள் விரல்களின் வலியை என்னால் உணரமுடிகிறது.

உங்களுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்புள்ள

வைரமுத்து.

• • •

## கடிதம் - 12

**எழுதியவர் : கவிஞர் பாலைநிலவன்**

கோவை

*8.8.98*

அன்புநிறை நம்பிக்கு...

தம்பி பாலைநிலவன் எழுதுவது.

ஞானி அய்யா அவர்களோடு தங்களைச் சந்தித்த அந்தப் பொழுது அருமையானது.

இருபது வரிக்குள் அடங்கிவிடுவது கவிதை என்ற தங்களின் புதிய கவிதைக் கண்டுபிடிப்பு சற்றே ஆழமானது. நிறைய அகோரமானது. நீண்ட விவாதங்களுக்குள் செல்லாமல் நிறைய பேசுவது நல்லதென்று எனக்குப் படவில்லை.

மூன்று வரிக்குள் அய்க்கூ ஒரு மௌனம் கலந்த கவிதைச் சலனத்தை ஏற்படுத்துமெனில்.. வியப்பில்லை. இருபது வரிக்குள் அந்தக் கவிதைச் சலனம் இருக்கவேண்டுமென்பதும் அதற்குமேல் எழுதப்படும் வரிகள் எழுத்துக்கள் அடங்கிய குப்பையென்றும் நீங்கள் சொல்லவருவது... உங்களிடத்தில் இப்படியான மேதமையை எதிர்பார்க்கவில்லை.

ஆதி கவிதைக்குக் கிடைத்த பரிசுச் சுகத்தில் உட்கார்ந்திருக்கும் தங்களுக்கு என் அதிகம் நீண்ட கடிதம்கூட அகோரமானதாகப் படக்கூடும்.

இருந்தும் தங்களின் கவிதைகள் பலம் வாய்ந்தவை என்பதில் எனக்கு எப்போதும் மாற்றுக் கருத்து இல்லை.

என்ன நடக்கிறது

ஏது செய்வது

மாய இருட்டைத் துடைத்து

சிறிது வெளிச்சக்கீற்றைக் காண

ஒரு நேரம் காலம் எப்போது வரும்.

என்ற தங்கள் கவிதையின் எதிர்பார்ப்பைப் போல் நீண்ட தோழமைச் சுகம் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

தமிழுக்குத் தங்களின் படைப்புகள் தந்த பலம் மகிழ்ச்சியானது.

அதிகம் எழுதினால் படிக்காமல் கிழித்தாலும் கிழித்துவிடுவீர்.

ஆக... என்ன சொல்ல வருகிறேன்..

கவிஞர் விக்கிரமாதித்யனிடமிருந்து நிறைய கற்றுக்கொள்ள வேண்டும்.

முடிந்தால் கடிதம் போடுங்களேன் பதினைந்து வரியில்.

தோழமை கலந்த காதலுடன்

தம்பி

பாலைநிலவன்

இத்துடன் என்னுடைய நிறைய வரிக்கவிதைகள் அடங்கிய தொகுப்பு அனுப்பியுள்ளேன். குப்பையா என்று பார்த்துச் சொல்லவும்.

பாலைநிலவன்

• • •

## கடிதம் - 13

**எழுதியவர் : கவிஞர் பாலைநிலவன்**

கவிநிறை

அண்ணன் விக்ரமாதித்யன் அவர்களுக்கு

பாலை எழுதும் அன்புமடல்.

நலம்தானே.

இத்தனை நாட்கள் பதில் கடிதம் அனுப்பாமைக்கு மன்னியுங்கள்.

கவிதைகள் பொய்யழகாய் மாறிக்கொண்டிருக்கும் ஒரு காலத்தில் கடிதங்கள் அன்பின் அண்மையைக் கோரச் சிறந்ததொரு மரணமாய் எழுதப்படுவதாய் எண்ணிக்கொண்டிருந்ததால் இத்தாமதம் தவிர்க்க முடியவில்லை.

அன்பைச் சரியாக எழுத முடியாமை – அதன் துரத்துதல், ஒருவிதமான சிநேகித வெட்கத்தை எனக்கு ஏற்படுத்துகிறது. அதுவும் வாழுகிற சித்தன்களுக்கு எழுதும்போது சிநேகித வெட்கம் கொஞ்சம் கூடுதலாகிறது.

இன்னமும்

நான் சந்திக்காத கால கொடூரத்தில் அசைக்க முடியாத கவிதா உயிர்ப்புக்களை எழுதி முடித்த விக்கிரமாதித்யன் என் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிறான். அவனோடு நான் நிற்பதற்கு இன்னும் கூடுதலாய் வாழ்வைத் துறக்கவேண்டியிருக்கிறது. அதற்குத் தைரியமும் வேண்டியதாயிருக்கிறது.

எழுத்துக்குச் சிக்காத சிநேகிதம் என்னுடையது. உங்கள் எதிர்க்கவிதைகளுக்கு அண்மையானது அது.

உங்களோடு அமர்ந்திருந்து மனசில் வெறியனாய் அழுதுகொண்டு கோவையில் நான் கழித்த நேரங்கள் இன்னமும் தனது அசாத்திய பேருண்மைகளை எனது சதையில் எழுதிக்கொண்டேயிருக்கிறது.

வாழ்தல் அரிதாயிருக்கிறது என்ற கருத்தில் உங்களோடு ஒத்த கருத்துக் கொண்ட நான் சாவதில் முந்திக்கொள்வேன் போல் தெரிகிறது – இல்லாமலும் போகலாம். வாழ்தல் எனக்கு ஆசையானது.

கவிதைகள் எழுதிக்கொண்டிருக்கிறேன். கடிதங்கள் எழுதி பல மாதங்கள் இருக்கும். தீவிரமாய் யோசிக்கும் சில வேளைகளில் கடிதம் எழுதுதல் செயற்கையும் துதியும் சேர்ந்த துன்பமாக இருந்துகொண்டிருக்கிறது எனக்கு. அதனால்தான் எழுதிய கவிதைகளை அனுப்பாமல் வைத்திருக்கிறேன்.

நான் இன்றும், பல நேரங்களில் நேற்றும் நினைத்தது, என்னுடைய விக்கிரமாதித்யனோடு என் இருப்பை ஒருசேர பங்களிப்பதைப் பற்றித்தான்.

பதில் எழுதாமல் இருந்துவிடாதீர்கள்.

அன்புடன்

தம்பி பாலைநிலவன்.

•

**அடிக்குறிப்புகள் :**

பாலைநிலவன் முதன்முதலில் திருப்பூர் தமிழ்ச்சங்க பரிசளிப்பின்போது அறிமுகமானார். தமிழின் மிக முக்கியமான கவிஞர்களுள் ஒருவர். அவருடைய முதல் தொகுப்பின் அட்டையில் என் கோட்டோவியத்தையே வெளியிட்டிருக்கிறார். கோவை ஞானி, ஆரண்யம் இதழின் ஆசிரியரான அருமை நண்பர் ஸ்ரீபதி பத்மநாபா, நாஞ்சில் நாடன், பாமரன் எல்லோரும் கலந்துகொண்ட அந்த வெளியீட்டு விழாவிற்கு என்னையும் அழைத்திருந்தார். அன்றைக்குக் குடிபோதையில் நினைவிழந்துவிட்டதில்

கூட்டத்தில் பேசமுடியாது போயிற்று. அதற்குக் கழுவாயாக பாலைநிலவன் கவிதைகளைப் படித்துவிட்டுக் கட்டுரை எழுதியிருக்கிறேன். பைபிள் நடை சாயலில் உள்ள அவரது கவிதைகள் வாழ்வின் இருப்புநிலையை விசாரம் செய்பவை. பாலைநிலவன் கவிதைகள் மீது மதிப்பும் அவருடைய வாழ்வின் மீது மதிப்பும் இன்றளவும் நீடித்துவருகிறது. அவருடைய கவிதைகளுக்கு உரிய கவனிப்பு கிடைக்காமல் போனது வருத்தம் தருவதாகவே இருக்கிறது.

• • •

## கடிதம் - 14

**எழுதியவர் : கவிஞர் கூ.வெங்குட்டுவன்**

அன்புள்ள விக்ரமாதித்யன் அண்ணாச்சிக்கு,

நலம். நலமே விளைக. தாங்கள் அனுப்பிய புத்தகங்களைப் பெற்றுக்கொண்ட அந்தச் சாயுங்கால நேரம் வீடு வந்ததும் தங்களுக்கு போன் செய்தேன். சற்று நேரம் இருவரும் உரையாடினோம். தங்களின் புத்தகங்கள் ஐந்தையும் படித்து முடித்துவிட்டு இரண்டொரு நாளில் மீண்டும் கூப்பிடுவதாகக் கூறினேன். கிட்டதட்ட இரண்டு மாதங்களே ஆகிவிட்டது. இன்னமும் தங்களுக்கு போன் செய்யாமலேயே இருக்கிறேன். அதற்காக வருந்துகிறேன். மன்னிப்பும் கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கமான வேலைகள், சோலி, தொந்தரவுகள் மற்றும் சோம்பேறித்தனம் ஆகியவை காரணமாக தங்களின் புத்தகங்கள் ஐந்தையும் படித்து முடிக்க இத்தனைநாள் ஆகிவிட்டது. கடைசியாகப் படித்தது ஆழித்தேர். அந்த சண்டி ராணி, ரவுடி ராக்கம்மா கவிதை வெகுசுவாரசியம். சங்கக்கவிதைகளில் எனக்குப் பெரிய பரிச்சயம் கிடையாது. வெகு குறைவாகவே போகிறபோக்கில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வாசித்திருக்கிறேன். விளக்க உரை இல்லாது வெறும் பாடல்களை மட்டும் படிக்க, என்னால் பொருள் புரிந்துகொள்ள முடியாது. தங்கள் கவிதைகளை வாசிக்கையில், செய்யுட்களைப் படிக்காது சங்கப் பாடல்களுக்கான விளக்க உரையை மட்டும் படித்துக்கொண்டு செல்வது போலத் தோன்றுகிறது. இதை உங்களின் தனித்தன்மையாக நான் கருதுகிறேன்.

தங்கள் கவிதைகள் பெரும்பாலும் மொழி பற்றியும் கவிதை பற்றியும் இலக்கிய உலகம் பற்றியதுமாகவே இருப்பதாக நினைக்கிறேன். தங்கள் சொல் செயல் சிந்தனை யாவுமே மொழி, கவிதை, இலக்கிய உலகம் பற்றியதாகவே எந்த நேரமும் இருந்துகொண்டிருப்பதுதான் காரணம் என்றும் தோன்றுகிறது. மாயம் செய்யும் கவிதை புத்தகத்திலுள்ள கட்டுரைகள் சிறப்பானவை. தங்கள் உரைநடையின் ரசிகன் நான். எல்லாவற்றையும் புரிந்துகொண்ட நிதானமான தொனியை அதில் உணர்கிறேன்.

பெரும்பாலும் யாரேனும் தன்னைப் பற்றித் தானே பிரஸ்தாபித்தால் அதைப் படிக்க முடியாது. கேட்க முடியாது. எழுத்தாளனின் தன்னகங்காரம் எந்த ரூபத்திலும் உள்ளே வராத எழுத்தே எனக்குப் பிடித்தமானது. நீங்கள் உங்களைப் பற்றியே நிறைய கவிதைகளில் பிரஸ்தாபித்திருக்கிறீர்கள். என்றாலும் ஏனோ அது எனக்கு வழக்கமாக உண்டு பண்ணும் ஒவ்வாமையை ஏற்படுத்தவில்லை. தன்னகங்காரம் அற்ற, அல்லது அந்த தன்முனைப்பையே ஆடவிட்டு வேடிக்கை பார்க்கும் நிலையிலிருந்து பிரஸ்தாபிக்கிறீர்கள் என நினைக்கிறேன்.

நல்லது அண்ணாச்சி. இந்தக் கடிதத்தில் மேலும் உங்கள் கவிதைகள் மற்றும் சமகால, சங்ககால இலக்கியம் குறித்துப் பேசி, என் வாசிப்புப் போதாமையை வெளிப்படுத்த விரும்பவில்லை. இலக்கியத்தைப் பொறுத்தவரை மற்றவர்கள் எடுத்து இயம்ப தெரிந்துகொள்ளும் நிலையிலேயே நான் இன்னமும் இருக்கிறேன். உங்களை நேரில் சந்தித்து எல்லாவற்றையும் குறித்து நீங்கள் பேச, அதை நான் விடியவிடிய பொழுதா பொழுதுக்கும் (அவ்வப்பொழுது மது அருந்தியவண்ணம்) கேட்கவேண்டும் எனும் ஆவல் கூடியபடியே இருக்கிறது.

இந்தத் தீபாவளிக்கு சென்னை போய் நான்கு நாட்கள் தங்கியிருந்தேன். ஒரு

வெள்ளிக்கிழமை மாலை பிரேம்சந்த் வந்து அவர் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார். பேரன் உட்பட மூவரின் ஜாதகங்களையும் பார்த்தேன். எவ்வளவோ வேண்டாமெனச் சொல்லியும் பிரேம்சந்தும் அவர் மனைவியும் கேட்கவேயில்லை. சும்மா ஜோதிடம் சொல்லக்கூடாது என வற்புறுத்தி என் பஞ்சாங்கத்தில் பணம் வைத்தனர் (இருநூறு ரூபாய்). கிளம்புகையில் வீட்டுக்குள் போன பிரேம், என் அளவுக்குத் தகுந்த வெள்ளை காட்டன் சர்ட் ஒன்றும் பரிசளித்தார். சந்தோசமாக இருந்தது. மறுநாள் பெங்களூரு போனேன். க.சீ.சிவக்குமார் வீட்டுக்கு. பிரேம் கொடுத்த சட்டையை நான் சிவாவுக்குப் பரிசளித்தேன். “ஓ.. நம்பி ஞாபகமா இருக்கட்டும். கொடுங்க... கொடுங்க...” என உடனே வாங்கிக்கொண்டார். எனக்கு ரொம்ப சந்தோசமாக இருந்தது.



பிரேம்சந்துடன் வண்டியில் திரும்பவும் நான் தங்கியிருந்த இடத்துக்கு வருகையில் மழை வருவது போல இருந்தது. சில இடங்களில் லேசான தூறலும் போட்டது. ஆற்றுப்பாலமொன்றின் நடைபாதையில் ஒரு மனிதன் தன் விரிப்பை விரித்து படுக்கத் துவங்கினான். அதே நாள் முற்பகலில் நண்பர் ரமேஷ் உடன் மெரினா பீச் போயிருந்தேன். மழை ஈரம் கடற்கரை மணல் வெளியை ஊடுருவியிருந்தது. வெயில் அற்ற முற்பகல். கூட்டம் குறைவாக இருந்தது. சிறுவர்கள் விளையாடி கலைத்துவிட்டுச் சென்றிருக்க வேண்டும். சிறு மணல் குவியல். அதில் முதுகையும் தலையையும் சாய்த்தபடி அழுக்கு வெள்ளை நிறமுடைய ஒரு ஆண் நாய் படுத்திருந்தது.. ஏகாந்தமாக. இந்த இரண்டு காட்சிகளும் எனை அரிதான ஒரு உணர்வுநிலைக்கு ஆட்படுத்தியது. இதுவரைக்குமான இலக்கிய வாசிப்பு காணவேண்டியதைக் கண்டுகொள்ளும் ஒரு பார்வையை வழங்கிவிட்டதாக

நினைக்கிறேன் அண்ணாச்சி. நோக்க நோக்க களியாட்டம் என்பது போல பேருவகை மனமெங்கும் நிரம்பி வழியத் துவங்கிவிடுகிறது.

பதினைந்து வருடங்களுக்கும் மேலே இருக்கும் என நினைக்கிறேன். முதன்முதலாக ஆனந்தவிகடன் வாயிலாக உங்களைப் பற்றி அறிய நேர்ந்தது. ஒரே கேள்வியைப் பலரிடமும் கேட்பது மாதிரியான அந்தப் பகுதியில் அந்தக் கேள்வியை உங்களிடமும் கேட்டிருந்தனர். நீங்கள் சொன்ன பதிலும் உங்களின் புகைப்படமும் வந்திருந்தது. விக்ரமாதித்யன் என்று ஒரு கவிஞர் இருக்கிறார் என்பதே எனக்கு அப்பொழுதுதான் தெரியும். பிறகு நவீன இலக்கியம் பரிச்சயமானபின் அங்கொன்றும் இங்கொன்றுமாக உங்களின் படைப்புகளை வாசித்திருக்கிறேன். கவிமூலம் புத்தகம் எதேச்சையாக நூலகத்தில் தட்டுப்பட்டது. பொற்பாதச் சித்திரம் கவிதை மறக்கவே முடியாத அளவு மனதில் ஆழப் பதிந்துவிட்டது.

ஜோதிடம் குறித்து, இலக்கியம், வாழ்க்கை எல்லாவற்றையும் பற்றி

உங்களோடு நிறைய பேசவேண்டும் என விரும்புகிறேன் அண்ணாச்சி. நீங்களே உங்களுக்கு சவுகரியப்பட்ட ஒரு நாளைச் சொல்லுங்கள். இந்த வாரத்தில் பாவு காலியாகிறது. கொஞ்சம் வேலைப்பளு அதிகமாக இருக்கும். எனவே, டிசம்பர் 10 தேதிக்குப் பிறகு ஒரு நாளைக் குறிப்பிடுங்கள். கிளம்பி வருகிறேன். எங்கள் தறியில் நெய்த வேட்டியையும் சட்டைத்துணியையும் நேரில் வருகையில் கொண்டு வருவேன். மறுக்காமல் பெற்றுக்கொள்ள வேண்டும். நன்றி அண்ணாச்சி. நேரில் பேசலாம்.

சு. வெங்குட்டுவன்

*29.11.2014.*

•

**அடிக்குறிப்புகள் :**

• கவிஞர் சு. வெங்குட்டுவன் : ‘இசையோடு வாழ்பவன்’ என்ற முதல் கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார், மணல்வீடு பதிப்பகம் வாயிலாக. அதிலேயே அவருடைய கவித்துவம் புலப்படுகிறது. நம்பிக்கைக்குரிய கவிஞராகத் திகழ்கிறார். தாராபுரத்திலிருந்து திருப்பூர் போகும் வழியிலுள்ள ஒரு கிராமத்தில் வசித்துவருகிறார். இவருடைய இன்னொரு சிறப்பு, ஜோதிடரும்கூட. அதையே இப்போது தொழிலாகவும் கொண்டுள்ளார். என் கவிதைகளைப் படித்துவிட்டு நேரடியாக ஒருமுறை தென்காசிக்கு வந்து இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். நானும் அவரும் குற்றாலம் ஐந்தருவி, சங்கரானந்தா ஆசிரமம் என்றெல்லாம் போய்வந்தோம். இன்னொரு முறை எழுத்தாளர் கீரனூர் ஜாகிர்ராஜாவுடன் வந்திருந்தார். அவருடைய ஊருக்குக் கொஞ்ச தூரத்திலுள்ள கொங்கணர் மலைக்கோயிலுக்கு வருமாறு திரும்பத்திரும்ப வலியுறுத்திக் கூறிக்கொண்டிருந்தார். வாசகர் மு.மாரியப்பன் துணையுடன் கடந்த 2019ஆம் ஆண்டு அவருடைய ஊருக்குச் சென்று கொங்கணர் கோயிலுக்குச் சென்றுவந்தோம். கீழேயே தவசித் தம்பிரான் ஜீவசமாதி கோயிலும் உள்ளது. மிக நல்ல நண்பர்.

- தொடரும்.

கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன்

# ஊர்மிளை

விட்டகுறை
தொட்டகுறையாய்
வீதியெங்கும் அலைந்த
விதி
ஊர்மிளையை மட்டும்
விட்டேனா பார் என –
தொடர்ந்தது
அது
பட்டாபிஷேக மண்டபத்திலும்
பையப் பையப்
பதுங்கி வந்து
பழியாய்க் –
கிடந்தது...

மாண்டவி
பரதனோடு –
வந்தாள்
சுருதகீர்த்தி
சத்ருக்கனோடு–
வந்தாள்
சீதாதேவி
இராமனோடு –
வந்தாள்
இலக்குவன் மட்டும்
இணையில்லாமல்
தனித்தே வந்து
இருக்கையில் –
அமர்ந்தான்

மகுடத்தைக்
கையிலேந்தியபடி
மந்திரிகள் –
வந்தனர்
அட
பாதி மறைத்த
முகத்தோடு
விந்தி விந்தி
மந்தரையும் –
வந்தாள்

கைகேயியின்
தோளிலும்
சுமித்திரையின்
தோளிலும்
கைபோட்டபடி
கோசலையும் –
வந்தாள்..

முனிவர்களும்
ரிஷிகளும் வந்து
முன்வரிசையில் –
அமர்ந்தனர்

அனுமன் தலைமையில்
வந்திருந்த
வானரப்படையில்
நடுநாயகமாக
அமர்ந்திருந்தான் –
சுக்ரீவன்
அவனுக்கு
அடுத்த வரிசையில்
அமர்ந்திருந்தான் –
குகன்

மிதிலை தேசத்திலிருந்து
இராம இலக்குவனின்
மாமன்
சனகன் –
வந்திருந்தான்

பாராமுகத்தோடு
சென்றவனைப்
பார்த்தபடியே
பார்வையாளர் மாடத்தில்
அமர்ந்திருந்தாள் –
ஊர்மிளை

பரந்து விரிந்து கிடக்கும்
தர்பார் மண்டபத்தின்
இருக்கைகளில் எல்லாம்
பல்வேறு தேசத்துப்
பட்டத்தரசிகளும்
ராஜமாதாக்களும்

இளவரசர்களும்
இளவரசிகளும்
அமைச்சர்களும்
அதிகாரிகளும்
காரியதரிசிகளும்
தளபதிகளும்
குறுநில மன்னர்களும்
மெய்க்காப்பாளர்களும்
நிறைந்திருக்க....
ஆருமற்ற
அநாதைபோல்
தூரத்துத் தூணொன்றின்
மறைவில்
இருவிழிகளால்
தேகத்தை
நனைத்துக் கொண்டிருந்தாள் -
ஊர்மிளை..

அண்ணன் இராமனுக்காக
தன்னையே
அர்ப்பணித்த
தம்பியின் கடமை
தடையற நடைபெற
வேண்டும்
அதற்கு
தன்னால் ஏதேனும்
தடைவருமோ என்றஞ்சி
தழைத்து வளர்ந்த
தாம்பத்திய வாழ்க்கையில்
இருந்து
விடைபெற வேண்டும் என்று
நினைத்தவள்-
ஊர்மிளை
அதனால்தான்
இலக்குவனை
வெறுப்பது போல் -
நடித்தாள்
வெறுமனே அடம் - பிடித்தாள்
இந்த வெற்றிக்காக
சபதமேற்று -
முடித்தாள்...

பார்வையாளர் மாடத்தில்
இருந்த அவளை
யாரும் -
பார்க்கவுமில்லை
பட்டாபிஷேகக்
குழுவில் அவளை
யாரும் -
சேர்க்கவுமில்லை..

அரசவையில் நடக்கும்
அமளிதுமளியில்
ஊர்மிளை
எங்கிருக்கிறாள்
என்பதை
ஒருவருமே -
அறியவில்லை
இது
ஊழ்வினையின்
விளையாட்டு என்பது
ஒருவருக்கும் -
புரியவில்லை...

இராவணனை விடவும்
இருமடங்கு
சக்தி வாய்ந்தவன்
அவனது மகன்
இந்திரஜித் என்னும் -
மேகநாதன்
ஈரேழு ஆண்டுகள்
உறங்காது
தவமிருப்பவன்
மட்டுமே
தன்னை வெல்லவேண்டும்
என்று
வாங்கிவந்தான் ஒரு -
வரம்
இராவணனுக்கும் இராமனுக்கும்
நடந்த
யுத்தத்தில்
அவனது கரங்களால்
வெட்டுண்டு வீழ்ந்தன
பலரது -
சிரம்
அழிக்கவே முடியாதபடி
வரம் வாங்கி வந்தவனை
எதிர்த்து நிற்க
யாருக்குமே இல்லை
நெஞ்சில் -
உரம்...
அவனைத்தான் இலக்குவன்-
வீழ்த்தினான்
தன்னை வீழ்த்திய
இலக்குவனை
இறக்கும் தருவாயில்
இந்திரஜித் -
வாழ்த்தினான்
ஆகப்பெரிய இராமனால் கூட
இயலாத காரியத்தை
அநாயசமாக
இலக்குவன் -
நிகழ்த்தினான்

காரணம் புரியாமல்
கார்வண்ண மேனியன்
குழம்பினான்
தனது சிவதனுசை
விடவும்
சக்தி கொண்டது
தன் தம்பியின்
தவ தனுசு என்று
அறிந்து
உற்சாகக் களிப்பில் -
முழங்கினான்

ஈரேழு ஆண்டுகள்
உறங்காமல்
இலக்குவன் எங்கே
தவம் செய்தான்
எந்தத் தவ வலிமையால்
அவன்
இந்திரஜித்தை -
வதம் செய்தான்
என்பது புரியாமல்
தவித்த இராமனுக்கு
ஊர்மிளையின்
ஞாபகம் - வந்தது
இலக்குவனின்
உறக்கத்தையும்
சேர்த்து
ஊர்மிளையே
உறங்கியதால்தான்
இந்த வெற்றி
சாத்தியமானது என்பதை
உள்ளுக்குள் உணர்ந்து-
சிலிர்த்தான்

- ஊர்மிளை வருவாள் ■

சிறுகதை

● சுரேஷ் பரதன்
● ஓவியங்கள் - அழ.ரஜினிகாந்தன்

# வெற்றிடம்



கலைந்து கிடந்த புகைப்படங்களுக்கு மத்தியில் கருப்பு வெள்ளையில் இருந்த அந்தவொரு புகைப்படத்தில் முதலில் அம்மா நின்றிருந்தாள். அம்மாவுக்கு அடுத்து மாலதி. மாலதிக்கு அடுத்தாற்போல் ஒரு ஆள் நிற்பதற்கான ஒரு வெற்றிடம். அந்த வெற்றிடத்திற்கு அப்புறம் நான். எனக்கும் மாலதிக்கும் நடுவில் அந்த வெற்றிடத்தைத் தனக்கென விட்டுவைக்கச் சொன்னவள் இரஞ்சனி. ஹாலிலிருந்த டீவிக்கு மேல் இரஞ்சனி தன் யாசிகா கேமராவை வைத்து டிவிக்குப் பின்னால் நின்று அதன் வ்யூ ஃபைண்டர் வழியாக எங்கள் எல்லாரையும் ஒருமுறை பார்த்து ஆடோமேடிக் ஸ்விட்சை அழுத்திவிட்டு ஓடி வந்து சேர்ந்துகொள்ள வேண்டியவள் வரும்பொழுது டீவிக்கு அடுத்திருந்த ஜன்னல் கம்பிக் கொக்கியில் அவளது துப்பட்டா மாட்டிக்கொள்ள, அதை விடுவித்து எடுத்து, சரி செய்து அணிந்து வருவதற்குள் இரஞ்சனியின் யாசிகா எங்கள் மூவரை மட்டும் தன் ஃபிலிம் சுருளுக்குள் பதித்துக்கொண்டது. இரஞ்சனி உண்டாக்கிய வெற்றிடங்கள் பலவுண்டு. அதிலொன்றுதான் இந்தக் கறுப்பு வெள்ளைப் புகைப்படம்.

சட்டென்று நான் அந்த புகைப்படத்தைத்தான் முதலில் எடுத்தேன். அருகிலிருந்த இரஞ்சனி முகத்தில் ஒரு மின்னலைப் போல புன்னகையொன்று தோன்றி மறைந்தது. அதையும் நான் கவனிக்கத் தவறவில்லை. அவளருகில்லாத காலங்களிலேயே அடுக்கடுக்காய் அவளது ஞாபகங்களை மட்டுமே பொக்கிஷமெனச் சுமப்பவன் அவளருகிலிருக்கும்போது அவளது ஒவ்வொரு கணத்தையும் ஒவ்வொரு அசைவையும் எப்படித் தவறவிடுவேன்.

'ஒரு பன்னிரண்டு வருடங்களிருக்குமா ராஜு... இந்த போட்டோ எடுத்து..' இரஞ்சனி கேட்டாள். நான் பதிலேதும் சொல்லாத கணத்தை அவளே நிரப்பி மேலே தொடர்ந்தாள். 'ப்ரிட்டிஷ் கவுண்சிலில் ஆபிஸ் அஸிஸ்டென்ட்டா இருந்தப்ப இல்ல.. நீ கில்ஃபெர்டுக்கு வாறேன்னு சொன்னவுடனே காரேஜ் பாக்ஸையெல்லாம் தேடித் தேடி இந்த போட்டோக்களை கண்டுபிடிச்சு எடுத்தேன். உனக்குத்தான் பழைய போட்டோக்கள்ன்னாலே இஷ்டமாச்சே. நீ மாறவேயில்லை ராஜு.'

ஆனால் ரஞ்சனி நிறைய மாறியிருந்தாள். காட்டன் பட்டன் ஷர்ட்டும், ப்ளைட் பென்சில் ஸ்கர்ட்டும் தோள்பட்டை வரை வெட்டியிருந்த கர்லியான முடியும் என நம்பவே முடியாத அளவுக்கு கிட்டத்தட்ட ஒரு பிரிட்டிஷ் கன்ட்ரி ஸைட் மிடில் ஏஜ் பெண்ணாகவே மாறியிருந்தாள். நான் காலையில் கில்ஃபெர்டு இரயில் நிலையத்தில் வந்து இறங்கியபோது எதிரே வந்தவளைப் பார்த்ததும் ஒரு கணம் திகைத்து பின் மீண்டேன். அம்மா இப்போது அவளைப் பார்த்தால் அன்றைக்கு நினைத்தது போல எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க நினைப்பாளா.. சந்தேகந்தான்.

மூர்த்தி மாமா இரஞ்சனிக்கு அப்போது தீவிரமாக மாப்பிள்ளை தேடிக்கொண்டிருந்தார். இரஞ்சனியோ வேலைக்குத்தான் போவேன் என்று பிடிவாதம் பிடித்தாள். அவளுக்குச் சாதகமாக பிரிட்டிஷ் கவுண்ஸிலில் ஆபீஸ் அஸிஸ்டென்ட் வேலை கிடைத்தது. கிட்டத்தட்ட ஒரு செகரட்டரி மாதிரியான வேலை. அப்போதுதான் அவள் எங்கள் வீட்டில் மாலதி அறையில் அவளுடன் தங்கியிருந்தாள். நான் அப்போது இப்போது பார்க்கும் இந்த மினிஸ்ட்ரி வேலைக்காக பரீட்சை எழுதியிருந்தேன். அம்மாவுக்கு இரஞ்சனியைத் தன் மருமகளாக்கி வீட்டோடு வைத்துக்கொள்ளும் ஆசை அப்போது வேரூன்றிவிட்டது என்பது அவளது செய்கைகளிலும் பேச்சிலும் அப்பட்டமாகத் தெரிய ஆரம்பித்துவிட்டது. இரஞ்சனியின் கல்யாணத்தை மாமா அவசரப்படுத்திய போதிலெல்லாம் அம்மா இரஞ்சனிக்கான வக்கீலாய் ஆஜரானாள்.

'அத்தை இல்லேன்னா இப்படி தூர தேசத்துல எனக்கொரு வாழ்க்கை இல்லை ராஜூ. அவங்கதான் அப்பாகிட்ட நான் வேலைக்குப் போக யூகேவுக்குப் போக எல்லாத்துக்கும் பெர்மிஷன் வாங்கித் தந்தாங்க.. ஆனா பாரு என்னால அவங்களோட கடைசி காலத்துல கூட வந்து பாக்க முடியாம போயிருச்சு. அப்பதான் என்னோட டிவோர்ஸ் கேஸ் நடந்திட்டிருந்துச்சு. மாலதி நோஸ் எவ்ரிதிங்.'

'எனக்கும் தெரியும் ரஞ்சு.'

'ம்.. அத்தைக்குத்தான் என்னோட மனசு நல்லாத் தெரியும் ராஜு. பொண்ணுன்னா படிச்சு முடிச்சவுடனே கல்யாணந்தான் பண்ணிக்கணுமா.. படிச்ச படிப்புக்கு தக்கன ஒரு வேலையைப் பாக்கட்டுமே.. வெளிநாடு போறதுன்னா சும்மாவா.. அதுவும் இலண்டன் போகுது புள்ள.. உனக்கும் எனக்கும்தான் இதெல்லாம் கொடுத்து வைக்கலை.. புள்ளைங்களாவது போயிட்டு வரட்டுமேன்னு ஒவ்வொரு தரமும் அப்பாகிட்ட அத்ததான் பேசுவாங்க.. இன்னும் கொஞ்ச நாள் அவங்க இருந்திருக்கலாம் ராஜு.. நீதான் அத்தை போன பிறகு தனியா...'

'இல்ல ரஞ்சு.. அப்படியெல்லாம் இல்ல. தோப்பிலே இருந்தாலும் ஒவ்வொரு மரமும் தனி மரந்தான்.. இப்ப நீ இங்கேயே தனியா இல்லையா.. அது மாதிரிதான். ஐ ஹாவ் அ வொண்டர்ஃபுல் ஜாப். அண்ட் ஐ லவ் தட். ஈவன் ஐ வொர்க் அட் ஹோம் டூ. என்னோட வேலைதான் எனக்கு ஒரு நல்ல நண்பன்.'

'ஹா.. அன்னிக்கு மாதிரியே இன்னிக்கும் நீ ஃபிலாஸஃபி பேசுற. எங்க கத்துக்கிட்ட இப்படியெல்லாம் பேச..'

'வாழ்க்கையோட ஒவ்வொரு நிமிஷமும் நமக்குப் பாடஞ் சொல்லித்தர்றது ரஞ்சு. படிச்சுக்கிறதும் விட்டுற்ரதும் நம்ம கையிலதான் இருக்கு இல்லையா..'

'நெஜந்தான் ராஜூ. படிச்ச பாடங்களை விட படிக்காமவிட்ட பாடங்கள்தான் ஜாஸ்தியா இருக்கு. இல்லேன்னா உலகம் பூரா இங்கிலீஷ் லேங்குவேஜைக் கொண்டு போய்ச் சேர்த்த ஒரு நாட்டோட புள்ளைங்களுக்கு இங்கிலீஷ் க்ராமர் சொல்லிக் கொடுக்க நல்ல வாத்தியார் இல்லைன்னு சொன்னா யாராச்சும் நம்புவாங்களா... ஸ்டில் பிரிட்டிஷ் கன்ட்ரி ஸைட் ஸ்கூல்ஸ் ரிக்குயர் குட் இங்கிலீஷ் டீச்சர்ஸ்... இட்ஸ் அ ஹை டிமாண்ட். பவுண்டுகளில் சம்பளத்தைக் கொட்டிக் கொடுப்பார்கள்.'

பேச்சை சடுதியில் மாற்றினாள் ரஞ்சு. நான் மற்ற போட்டோக்களையும் பார்க்கத் துவங்கினேன். மாலதியும் ரஞ்சுவும்.. அம்மாவும் ரஞ்சுவும்.. அம்மா மாலதி ரஞ்சு மூன்று பேரும்.. மாலதியும் நானும்.. அம்மாவும் நானும்... ஆனால் நானும் ரஞ்சுவுமாய் உள்ள போட்டோ ஒன்றைக்கூடக் காணோம்.. கேட்போமா என்று நினைக்கையில் உள்ளே ஏதோ ஒன்று அவசர அவசரமாய்த் தடுத்தது. ஏன் இல்லையென்ற காரணத்திற்கு ரஞ்சுவின் மனம் சஞ்சலப்படலாம். அல்லது சங்கடப்படலாம்.

மதியம் ரெட் வைனுடன் புலவ் சாப்பிட்டோம். எனக்காகவே புலவ் பண்ணியதாய்ச் சொன்ன ரஞ்சு ஆங்கிலேய ப்ரட்டுக்கும் உருளைக்கிழங்குக்கும் டின்னில் அடைத்த பீன்களுக்கும் மீட்டுக்கும் தான் பழகிவிட்டதாகச் சொன்னாள். பத்து வருட இங்கிலாந்து வாழ்க்கை நடை உடை உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றாதா என்ன. சாப்பிடும்போது மீண்டும் பேச்சு அம்மாவை இழுத்துக்கொண்டு வந்துவிட்டது.

'எல்லாத்தையும் அத்தையின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு அப்பாவிடம் அடம் பிடித்ததைப் போல என்னால் என் கல்யாணத்தைப் பற்றி அத்தையிடம் சொல்லவே முடியாமல் போயிற்று ராஜு. அது இன்னமும் என்னை உறுத்திக்கொண்டிருக்கிறது.'

படக்கென்று தொண்டையில் சோறு சிக்கிக் கொண்டதைப் போல உணர்ந்தேன். பக்கத்திலிருந்த வைன் கிளாஸிலிருந்து ஒரு மடக்கை வாயில் விட்டு தொண்டைக்குள் இறக்கினேன்.

'விடு ரஞ்சு.. கல்யாணம்ன்றது அவங்கவங்க மனசுக்குப் பிடிச்சாப்பல பண்ணிக்கிறதுதான் சரி. நீ பண்ணதும் ரொம்பச் சரி...'

மனசுக்குப் பிடிக்காத பொய் வெறும் வாய் வார்த்தைகளாய் வெளி வந்தது.

'இல்ல ராஜு.. அத்தைக்கிட்டயாவது சொல்லியிருக்கணும்.. அவங்களுக்குப் பிடிக்குதோ இல்லையோ எனக்காக அப்பாகிட்ட பேசியிருப்பாங்க.. நிச்சயம் பேசியிருப்பாங்க. ஆனா அப்பாகிட்ட சொல்ல நான் எவ்வளவு பயந்தேனோ அவ்வளவு பயந்தேன் அத்தைகிட்ட சொல்ல. அவங்க மனசை அவங்க அன்பை அந்த விசயத்திலேதான் நான் காயப்படுத்திட்டேன்னு இன்னிக்கு வரைக்கும் கில்ட்டியா ஃபீல் பண்ணீட்டே இருக்கேன்..'

'யூ ஸில்லி கர்ள்.. அதெல்லாம் தேவையில்லாத ஒன்னு. இட் ஹாப்பன்ட் அ லாங் அகோ.. அதையே ஏன் இன்னமும் நினைச்சிட்டு.. லீவ் இட். ரஞ்சுன்னா அம்மா செல்லம்.. இது எல்லாருக்கும் தெரியும்.. ஷீ வாஸ் ஹாப்பி யூ நோ வென் யூவேர் மாரீட்.'

திரும்பவும் இன்னொரு பொய்.

ரஞ்சு சட்டென்று தன் கண்களில் பூத்த கண்ணீரை அது விழியை விட்டு இறங்கு முன்னர் மடியில் கிடந்த நாப்கினால் துடைத்தாள். அப்போது அவள் ஒரு உண்மையான இங்கிலீஷ்காரியாய்த் தெரிந்தாள்.

'அத்தையின் சாவு எனக்குள் இரண்டாவது வெற்றிடத்தை உருவாக்கிற்று ராஜு. என்னுடைய டிவோர்ஸ் முடிந்த பின் நான் நேராய் அத்தையிடம்தான் ஓடி வர நினைத்தேன். ஆனால் அதற்கு முன்..'

'ரஞ்சூ....' என்றவாறு அவள் சாப்பாட்டு மேஜை மேலிருந்த அவளது இடது கையைப் பிடித்தேன். செல்லமாய்.. ஆறுதலாய் ஒரு அழுத்தமும் தந்தேன்.

'இட்ஸ் ஓகே ராஜூ.. அத்தைக்கிட்ட கேட்க முடியாத மன்னிப்பை உன்னிடம் கேட்பது எவ்விதத்தில் நியாயம். அது அத்தைக்குச் செய்யும் அடுத்த துரோகம்.'

அடிப்பெண்ணே.. அம்மா உன்னிடம் ஏமாந்தது நீ மன்னிப்பு கேட்கவில்லை என்பதில் இல்லை என்பதை நான் உனக்கு

எப்படிச் சொல்வேன்.. இன்னமும் சொல்லப் போனால் அவள் உன் திருமணத்தில்கூட தான் ஏமாந்து போனதாய் எண்ணவேயில்லை. நான் என் திருமணத்தை மறுத்த போதல்லவா அவள் ஏமாந்து போனாள். எத்தனை காரணம் சொல்லி இருப்பேன் ஒவ்வொரு முறையும் அவள் என் திருமணத்தைப் பற்றிப் பேச வந்தபோதெல்லாம். ஆனால் எல்லாவற்றிற்கும் அடியில் இருந்த ஒரு கான்க்ரீட் ரீஸன் நீதானடிப் பெண்ணே...

ஒன்றும் சொல்லாமல் மௌனமாய்ச் சாப்பிட்டேன். சாப்பிட்டு முடித்ததும் இருவருமாகச் சேர்ந்து கிச்சனில் பாத்திரங்களைச் சுத்தம் செய்தோம்.

ரஞ்சுவிடம், மேலே கண்ணாடி மூடி வைத்து, அழகான வழு வழு மரச் சட்டப் பலகையில் செய்த ஒரு இயான் கம்பனி மேக் டர்ன் டேபிள் ஒன்று இருந்தது. அதற்கென ஒரு பிரத்தியேக மேஜை ஒன்றும். அந்த மேஜைக்கு கீழே ட்ராயரிலும் மேஜைக்கு மேலே கப்போர்டிலும் நிறைய வினைல் ரெக்கார்டுகள் வைத்திருந்தாள். நான் அதன் அருகில் சென்றேன். முதலாய் இருந்த ஒரு ரெகார்டை எடுத்தேன். தி ஸீக்ரெட்ஸ் பிட்வீன் தி ஸாடோ அன் தி ஸோல். ஜாஸ் இன்ஸ்ட்ருமென்டல். யாரோ ஒரு ஆப்பிரிக்க அமெரிக்கன் ஸாக்ஸஃபோனில் குழைந்து குழைந்து வாசித்தான். நிச்சயமாய் ஒன்றுமே புரியாவிடினும் அந்த இசை மனதை உயிரைக் குழைக்கத்தான் செய்தது.

ரஞ்சு மெல்ல என் அருகில் வந்தாள்.

‘ராஜூ இங்கே நெய்பர்ஸ் எல்லார் வீட்டிலேயும் இரவு உணவுக்கு முன் இசையை மெலிதாக இசைக்கவிட்டு, அந்த இசைக்குத் தகுந்தாற் போலவே நடனமாடுவார்கள் தெரியுமா. ஹஸ்பண்ட் அன்ட் வொய்ஃப் ரெண்டு பேருமோ அல்லது அப்பாவும் பொண்ணுமோ அல்லது அம்மாவும் பையனுமோ ஜோடி போட்டுக்கொண்டு ஆடுவார்கள். மெல்லிய அசைவுகளாலான நடனம் அவ்வளவு அழகாக இருக்கும். உனக்கு ஆடத் தெரியுமா..’

‘என்னது ஆட்டமா.. ஆளை விடு ரஞ்சு.. எனக்கு அதெல்லாம் வராது.’

‘நான் சொல்லித் தருகிறேன்.. எழுந்து நில். இப்படி வா.. நேராய் நில்... உன் வலது கையை என் இடது கையோடு கோர்த்துக்கொள்.. கோர்த்த நம் கைகளை இப்படி இவ்வளவு உயரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கோர்த்த நம் கைகளை நாம் விட்டுவிடக் கூடாது. உன் இடது கையை என் இடுப்பைச் சுற்றி வைத்துக்கொள்.. அப்படி அல்ல.. இப்படி.. நான் என் வலது கையை உன் இடது தோளைப் லேசாய்ப் பற்றியவாறு வைத்துக்கொள்வேன். இப்போது நான் அசைந்து அசைந்து முன்னும் பின்னும் நகர்ந்து ஆடும்போது நீயும் என்னோடு ஈடு கொடுத்து என்னோடு என்னைப் போல ஆடு.. அப்படித்தான்.. (சிரித்தாள்) அப்படித்தான்.. (மீண்டும் சிரித்தாள்..) பார்த்தாயா.. நான் சொன்னது மாதிரி இது ரொம்ப சாதாரண விசயம்தான்.’

எனக்கு ஆட்டத்தை விட அதிகமாய் முதலில் சிரிப்பு வந்தது. பின்னர் ஆட்டத்தின் அசைவுகள் பிடிபட ஆரம்பித்தபோது மெல்லிதாய் வெக்கம் வந்தது. அப்போது இரஞ்சனியின் மூச்சுக் காற்று மெதுவாய் ஒரே சீராய் என் மீது பட்டுக்கொண்டிருந்தது. சுவற்றில் மாட்டியிருந்த கடிகார முள் அசையாதது போல, கடிகாரம் நின்றுவிட்டதைப் போல, ஏன் காலமே ஓடாமல் நின்றுவிட்டதைப் போல அக்கணத்தில் எனக்குத் தோன்றிற்று. எவ்வளவு நேரம் அப்படி மெதுவாய் ஆடிக்கொண்டிருந்தோம் தெரியவில்லை.

ஆனால் காலம் இப்படியே உறைந்துபோய் நின்றுவிடாது என்றும் என்னை மீண்டும் லண்டன் வாட்டர் லூ ஸ்டேஷனில் இறக்கிவிடக் கூடிய அந்த ரயில் இன்னும் சற்று நேரத்தில் கில்ஃபெர்டு இரயில் நிலையத்தை வந்து அடைந்து விடுமென்றும், அதைச் சரியான நேரத்தில் பிடிக்க வேண்டுமென்றால் நான் சீக்கிரமாகவே இங்கிருந்து கிளம்ப வேண்டும் என்றும் எனக்குள் இன்னொரு குரல் ஒலித்துக்கொண்டேயிருந்தது. ■

● ஆதிரன்

# மனநிலைக் குறிப்புகள் - 8

## தத்துவ மனநிலை

மனிதனின் அமைப்பியல் என்றால் என்ன' என்று வரைமுறைப்படுத்துவதுதான் மொத்த உளவியல் அறிவியலின் நோக்கம். அதனாலேயே குடும்பமுறையை உளவியல் - அதன் தொடக்க நிலையிலிருந்தே – அக்குவேறாய் ஆணிவேறாய்ப் பிரித்து மேய்ந்து வருகிறது. சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் இடையிலானதொரு இயங்கியல் அலகுதான் இந்தக் குடும்பமுறை. இதன் பல்வேறு இயக்கநிலைகளை ஆய்வாளர்கள் தொடர்ந்து ஆராய்ந்துவருகிறார்கள். பொருளாதார அடிப்படையிலான உற்பத்தி உறவுகளின் விளைவுகளில் ஒன்று குடும்பமுறை என்கிறது மார்க்ஸியம். தனிமனித நடத்தை – குடும்ப இயங்கு நிலை – சமுதாய நடத்தை ஆகிய மூன்று அலகுகளில் மனிதனின் செயல்முறைகளை, அவன் தன்னை எப்படி தகவமைத்துக்கொள்கிறான் என்பதை உளவியலாளர்கள் பல்வேறு சிந்தனை முறைகளாக உருவாக்கியிருக்கிறார்கள். இந்த மூன்று அலகுகளும் ஒன்றுக்கொன்று வினைபுரிந்து ஒரு சூழலை உருவாக்குகிறது. அதன் விளைவாய் மனித பிரக்ஞை/நடத்தை உருவாகிறது எனலாம். புரட்சிகரமான உளவியல் சிந்தனைகளை உருவாக்கியவர் சிக்மண்ட் ஃப்ராய்ட் என்பதை நாம் அறிவோம். ஆனால் அவரது சிந்தனை வழி உருவான மற்றொரு மனிதரை நாம் பொதுவாக அறிந்திருக்க முடியாது. அவர் பெயர் ஆல்ஃப்ரெட் அட்லர் (*Alfred Adler*). இந்த இருவரின் சிந்தனைகளைச் சுருக்கமாக இந்தப் பத்தியில் எழுதுகிறேன். இருவரும் மனித நடத்தை (*human behaviour*) பற்றிய நீண்ட மற்றும் ஆழமான பரிசோதனைகளைச் செய்தவர்கள். மனித நடத்தை என்பது பாலுறவு மற்றும் ஆக்ரோசம் (*aggression*) போன்ற உயிரியல் உணர்வுகளால் உருவாகிறது. இவற்றைத் தவிர மனிதர்களுக்கு வேறு தேர்வு இல்லை, மேலும் அது கடந்தகால குழந்தைப்பருவ அனுபவத்தின் விளைவுகள் என்றும் மனிதஆளுமை (*personality*), இயல்பூக்கம் (*id*) அகம் (*ego*) விழுமியம் (*supper ego*) என்ற மூன்று வகைமைகளால் ஆனவை என்றும் (இதை லகான் வேறுதளத்தில் விவாதிக்கிறார். அதுபற்றி மற்றொரு முறை சொல்கிறேன்) மேலும் நடத்தை என்பது பெற்றோர் மற்றும் குழந்தைகளின் நேரடி உறவுமுறை செயல்பாடுகளாலும் ஆனது என்றும் அது தன்னுணர்வற்ற நனவிலி (*unconscious*) செயல்பாட்டில் உருவாகிறது என்றும் ஃப்ராய்ட் முன்மொழிந்தார். மாறாக அட்லர் மனிதநடத்தை சமுதாய ஆதிக்கத்தாலும் தன்னை மேன்மைபடுத்திக்கொள்ளும்

விருப்பத்தினாலும் *(striving for superiority)* உருவாகிறது என்றும் அவர்களின் நடத்தைக்கு அவர்களே காரணமென்றும் நிகழ்நடத்தை *(present behaviour)* என்பது எதிர்காலச் சிந்தனைகளில் இருந்து உருவாகிறது என்றும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்தே இருக்கிறார்கள் என்றும் தனிமனிதனை முழுமையாக *(as whole)* உணரவேண்டும் என்றும் குடும்ப உறவுகளில் பெற்றோரைப் போலவே மற்ற அனைத்து உறவுகளும் பிரதானமானவை என்றும் வாதிட்டார்.

பொதுவாகவே உளவியல் மற்றும் மன அலசல் *(psychoanalysis)* பற்றிய பரவலான உரையாடல்கள் தமிழகச் சூழலில் இல்லை என்பது மிகுந்த வருத்தம் தரக்கூடிய உண்மை. உளவியல் ஆய்வாளர் க. செல்லப்பாண்டியன் (பயங்கரவாதம்: ஓர் உளவியல் பார்வை உள்ளிட்ட புத்தகங்களின் ஆசிரியர்) அவர்களின் 'மற்றமை' இதழ் ஒரு மிகச்சிறந்த நிகழ்வு. இன்னும் வருகிறதா என்று தெரியவில்லை. போலவே உளவியலாளரும் நண்பருமான கம்பம் சூஃபி *(9443129121)* அவர்கள் தமிழ் இலக்கியச் சூழலில் நன்கு அறியப்படுபவர். மேலும் உளவியல் சார்ந்த இலக்கிய ஆர்வம் உள்ளவர்கள் நிச்சயமாகப் படிக்க வேண்டியது கோபிகிருஷ்ணனின் படைப்புகள். அவரது படைப்புகள் முழுத்தொகுப்பாகக் கிடைக்கின்றன.

'இட், ஈகோ, சூப்பர் ஈகோ' என்பது என்ன என்று மிகச் சுருக்கமாகப் பார்க்கலாம். இயல்பூக்கம் *(id)* மிக அடிப்படையான மனித ஆளுமைப்பண்புகளில் ஒன்று. அடிப்படை உணர்வான உணவு மற்றும் பாலுணர்வின் மீதான ஆசையைப் பிரதிபலிக்கிறது. இயல்பூக்கம் இந்த அடிப்படைத் தேவைகளின் உடனடி தீர்வை எதிர்பார்க்கிறது. அதன் தேவை உடனடியாகத் தீர்க்கப்படாத பட்சத்தில் பதற்றம் கொள்கிறது. அதே சமயம் அகம் *(ego)* என்பது இந்தியச் சூழலில் அகங்காரம் அல்லது தன்னுணர்வு என்ற வகையில் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. அடிப்படையில் அகம் என்பது மனதின் 'காரண-காரிய' தன்மையைப் புரிந்துகொள்ளும் விழிப்புநிலைச் *(consciousness)* செயல்பாடு. இது ஆன்மீகவயப்பட்டதல்ல. நேரடியான உளவியல் பிரச்சனை. நான் என்கிற அகங்காரத்திற்கும் ஈகோ என்கிற பதத்திற்கும் நிறைய வேறுபாடுகள் இருப்பதை ஃப்ராய்டியம் சுட்டுகிறது. போலவே விழுமியம் *(super ego)* என்பது புறவெளியில், சமுதாயச்சூழலில் நாம் எதைச் செய்யவேண்டும் அல்லது எதைச் செய்யக் கூடாது என்கிற வரைமுறைகளின் தொகுப்பாகும். இது முழுக்க அறம் சார்ந்த சிக்கல்களை உள்ளடக்கியது. அடிப்படை தேவைகளை எதிர்பார்க்கிற இயல்பூக்கம், காரணகாரணியங்களை அலசுதல், எதைச் செய்யலாம் அல்லது எதைச் செய்யக்கூடாது என்பதை முடிவுசெய்தல் ஆகிய மூன்றும் மனதின் செயல்பாடு என்கிறது ஃப்ராய்டியம். இந்திய அளவில் மருத்துவ உளவியலும் *(psychiatry)* நடைமுறை மனஅலசல் *(applied psychoanalysis)* அறிவியலும் தேக்கநிலையிலேயே இருக்கிறது. இந்திய உளவியல் அறிவியலின் முன்னோடிகளான கிரீந்த்ரசேகர்போஸ், சுதீர்கக்கர், ஆஷிஸ்நந்தி போன்றோரின் சிந்தனைகள் பரவலாக்கப்பட வேண்டியுள்ளன. கிரீந்த்ரசேகர்போஸ் தனது வாழ்நாளில் ஃப்ராய்ட் உடன் நேரடித் தொடர்பில் இருந்தவர். மற்றபடி, எனக்கு அணுக்கமான உளவியல் சிந்தனை அட்லரின் அடிப்படையிலானது என்றாலும் ஃப்ராய்டியத்தைப் புரிந்துகொள்ளாமல் மற்ற வகைமை உளவியல் சிந்தனைகளைப் புரிந்துகொள்வது மிகவும் கடினமே.

• • •

## இலக்கிய மனநிலை

கபீர் தாசன் பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த வட இந்தியக் கவி. அவர் இயற்றிய கவிதைகள் ஹிந்தி, போஜ்புரி, ப்ரஜ், அவதி, ராஜஸ்தானி ஆகிய உள்ளூர் மொழிகளின் நாட்டார் கலவை. வாழ்நாள் முழுதும் நெசவுத் தொழில் நடத்தி, அவ்வப்போது சந்தைக்குச் சென்று விற்று அதில் வரும் வருமானத்தால் எளிய வாழ்க்கை. சீக்கியர் மிகப் புனிதமாகப் போற்றும் "குரு க்ரந்த ஸாகிப்"இல், மிகப் பரவலாக இவரது கவிதைகள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. சீக்கியர்கள், 'குரு க்ரந்த ஸாகிப்'க்கு அளிக்கும் அதே மரியாதையையும், ஏற்றத்தையும், கபீர் கவிதைகளுக்கு அளிக்கின்றனர். எனக்கு மிக அணுக்கமான கவி.

• • •

உனதருகில் படுத்திருக்கிறேன்
முத்தமிடப்படுவதற்குக் காத்திருந்தவாறு
நீயோ முகத்தைத் திருப்பிக்கொண்டு
துரிதவுறக்கத்தில் ஆழ்ந்தாய்
உன் குறட்டையைவிட என்
கழுத்தை அறுக்கும் ரம்பத்தின் ஒலி
இனிமையானது ஆனாலும் எனது
கைகளால் உன்னை வளைத்து
உனது காதருகில் மெல்லிய குரலில் சொல்வேன்:
எனக்கொரு கணவன் நீ
உனகொரு மனைவி நான்
நமக்கிடையில் வர எவருண்டு?
கபீர் சொல்கிறான்
கவனம் உன் காதலனிடம்
அவன் ஒரு வில்லங்கமான வாடிக்கையாளன்
அவன் நம்மைப் பிரிப்பதா
முதலில் ஒரு வைரத்தைத் துளையிடு பார்க்கலாம்
நாம் தாமரையும் தண்ணீரும் போல
எஜமானனும் வேலைக்காரனும் போல
உனக்கான எனது காதல் ரகசியமற்றது
உனது ஒட்டுண்ணிப் பூச்சிக்கு உணவுப்புழு நான்
உனது கடலுக்கு நதி நான்
உனது தங்கத்திற்கு அதன் தரம் கூட்டும் தாது நான்..
சொல் என்னிடம். விவேகமான ஒன்றை.
ஒரு ஆணிடமிருந்து பெண்ணாக வந்தேன்
ஒருபோதும் மணம் செய்துகொண்டதில்லை
ஒருபோதும் கர்ப்பம் தரித்ததில்லை
ஆனால் ஆண்குழந்தைகளை ஈன்றேன்
கணக்கில் வைத்துக்கொள்ள முடியாதபடிக்கு
இளம் ஆண்களை நான் புணர்ந்தேன் ஆனாலும்
எனது கன்னித்தன்மையை நான் இழந்துவிடவில்லை
பார்ப்பானின் வீட்டில் பார்பாத்தி நான்
யோகியின் குடிலில் யோகினி நான்
துருக்கிய வீடுகளில் கல்மா
ஓதும் பெண் நான் ஆனாலும்
நான் எப்பொழுதும் தனிமையானவள்
வீடென்று சொல்வதற்கு ஒன்றுமில்லாமல்
கேளுங்கள் ஞானிகளே.. கபீர் சொல்கிறான்
இது எனது உடல்
எனது கணவன் அல்லது யாரையும்
இதைத் தொட அனுமதிக்க மாட்டேன்..

• • •

பேரீச்சமரமும் பல மரங்களைக் காட்டிலும்
மிக உயரமாகத்தான் வளர்ந்துள்ளது;
அதன் கீழ், வழிப்போக்கர் எவருக்கும்
அதுவும் கால்நடையாகப் போகும் பயணிகளுக்கும்,
களைப்பாற சிறு நிழலையும் அளிக்க இயலாதது,
பேரீச்சம்பழமும் பறிக்க முடியாத உயரத்தில் உள்ளது.
யாராவது நமக்காக பிரயாசை எடுத்து
இதன் பழத்தை நமக்கு அளித்தால்தான் உண்டு.
மேலும், கோடைக்காலமானால், அம்மரத்தில்
நமக்காக ஏறி, பேரீச்சம்பழத்தைப் பறித்து
யார் அளிக்கப் போகிறார்கள்?
வேண்டும்போது உதவாத பேரீச்ச மரத்தால்,
யாருக்கு என்ன பிரயோஜனம்?
இல்லாவிடில் களைத்துப்போன ஒருவர்
தானே கடும் வெய்யிலில் உயரமான
அம்மரத்தின்மீது ஏறத்தான் முடியுமா?
கீழே உட்கார்ந்து அதன் நிழலில்,
இளைப்பாறத்தான் முடியுமா?

கபீர் சந்தையில் நின்றுகொண்டு சொல்வது
இதுதான்:

வியாபார விசயத்தில் சினேகமும் வேண்டாம்,
விரோதமும் வேண்டாம், எப்படி இருப்பினும்,
வியாபாரத்தில் எல்லோருக்கும் நல்லதையே
விரும்ப வேண்டும்.

• • •

இரு மாவரைக்கும் கற்களின் நடுவில்
அகப்பட்ட தானியத்தின் மூல உருவத்தைக்
காணாது ஏன் கண் கலங்குகிறாய் கபீர்!
இரு கற்களின் நடுவில் அகப்பட்ட
அனைத்து தானியங்களின் மூல உருவமும்
தானியம் என ஒன்று ஆரம்பத்தில் இருந்ததென
எவ்வித அடையாளமுமின்றி,
இறுதியில் மாவாகிவிடுமே!

• • •

நீங்கள் நீர் அருந்தும்போது நினைத்துப்பாருங்கள்
நீங்கள் வசிக்கும் குடிசையில் உலகமே அடங்கியுள்ளது
அடிக்கொரு மனிதர் புதையுண்டு
மண்ணில் ஒன்றிப்போயுள்ளனர்
மீனும் ஆமையும் முதலையும்
பிறந்து இறப்பதால் நீரெல்லாம் ரத்தம்
கலந்திருக்கிறது
ஆற்று வெள்ளம் வாய்க்காலில் பாய்கிறது
மாக்களும் மக்களும் அதில் கரைந்துள்ளனர்
எலும்பு கரைந்து கொழுப்பு உருகாமல்
எங்கனம் கிடைக்கிறது பால்
ஓ பண்டிதர்காள்..
மண்ணில் அமர்ந்தே நீரைப் பருகினீர்கள்
ஆனால் மண்பாண்டம் அசுத்தமாகிவிட்டது
என்கிறீர்கள்.

• • •

## ஓவிய மனநிலை

கணினி பயன்பாட்டுக்குள் உலகம் வந்தவுடன் எல்லாமே டிஜிட்டல் மயமாகிப்போனது என்பது நமக்குத் தெரியும். ஓவியமும் விலக்கில்லாமல் டிஜிட்டல் ஆகிப்போனது. கணினி உதவியுடன் இன்று உலகில் உருவாக்கப்படும் ஓவியங்கள் அதிசயக்கத்தக்க வகையில் பிரமாண்டம் அடைந்துள்ளது. உண்மையில் மனிதன் தனது கனவுகளைத் தீட்டி தத்ரூபமாக உலவ விட்டுக்கொண்டிருக்கிறான். இலக்கமம் அல்லது எண்ணியல் (digital) அதன் வரலாற்றை 1947ஆம் வருடம் டிசம்பர் 23இல் அமெரிக்க விஞ்ஞானி வில்லியம் ஷாக்லே தமது குழுவினருடன் திரிதடையம் (transister) என்ற ஒன்றைக் கண்டுபிடித்ததிலிருந்து தொடங்குகிறது. 1951இல் கணினிகள் விற்பனைக்கு வரத் தொடங்கின. 1988 – முதல் இலக்கம ஒளிப்படக் கருவி (digital camara) உலகத்திற்கு அறிமுகம் செய்யப்பட்டது. உடனடியாக கலை உலகம் தலைகீழாக மாறிப்போனது. இன்று மனிதன் மெய்நிகர் யதார்த்தத்தில் (virtual reality) உலகளாவிய சமுதாயத்தை, 'சமுதாய ஊடகம்' (social media) வழியாக உருவாக்கியுள்ளான். ஓவிய உலகில் இலக்கமப் பயன்பாடு தறிகெட்டுக் கிடக்கிறது. இலக்கமக்கலையின் (digital art) அசுர வளர்ச்சி தொடங்கிய தொண்ணூறுகளில் மரபார்ந்த விசயங்களைச் சோதனை முயற்சியாக - அனைத்து ஊடகங்களைப் போலவே - ஓவியத் துறைகளிலும் புகுத்தி, சோதனை முயற்சிகளை ஓவியர்கள் மேற்கொண்டார்கள். அந்தவகையில் பழைய மரபுகளை இலக்கமக்கலையில் மீட்டுருவாக்கம் செய்யும் விதமாக மரபார்ந்த இலக்கமக்கலை (tradigital art) என்ற பதத்தை அமெரிக்க ஓவியரும் ஆசிரியருமான ஜூடித் மோன்கிரிஃப் (Judith moncrieff) உருவாக்கினார். மரபார்ந்த ஓவியச் செயல்களைக் கணினி அடிப்படையில் உருவாக்குவது இதன் நோக்கமாகும். இது இன்றைய நிலையில் அதன் உச்சத்திற்குப் போய்விட்டதென்றே

சொல்லலாம். வால்ஸ்ட்ரீட் பத்திரிக்கை இவ்வகை 'மரபுசார் இலக்கமக் கற்பனைத்திறன்'தான் *(tradigital creatives)* எதிர்காலம், அது 'நாளை'யின் குரல் என்று வர்ணிக்கிறது. இங்கே நான் அளித்திருக்கும் ஓவியம் பெனிசெல்வேனியாவைச் சேர்ந்த ஓவியர் லிசா வ்ரே *(Lisa Wray)* வரைந்தது. ஓவியத்தில் தத்துவத்தை உருவாக்கும் இவர் இந்த ஓவியத்திற்கு வாழ்க்கையின் திரவம் *(brew of life)* என்ற தலைப்பை அளிக்கிறார். *brew* என்ற சொல்லிற்குக் காய்ச்சுதல் அல்லது வடித்தல் என்ற பொருள் வருகிறது. உள்ளூர் மொழியில் *brew* என்றால் *beer* என்று அர்த்தம். தமிழில் இச்சொல்லிற்குக் கசாயம் என்ற பொருள் தருகிறது *google*. இந்த ஓவியத்தில் மரபுசார் செயல்பாடு என்ன என்பதை உங்கள் யூகத்திற்கே விட்டு விடுகிறேன்.

• • •

## பொதுவான மனநிலை

இரண்டாயிரத்து பதினெட்டில் கைபேசியின் விற்பனை அதன் உச்சத்தைத் தொட்டது. உலகம் முழுக்க ஒன்றரை பில்லியன் கைபேசிகள். அதாவது சராசரியாக ஒரு நாளைக்கு நான்கு மில்லியன் (நாற்பது லச்சம்) கைபேசிகளை விற்றுத் தீர்த்தன நிறுவனங்கள். ஒரு மனிதன் சராசரியாக ஒரு கைபேசியை இரண்டு ஆண்டுகள் உபயோகிக்கிறான். எளிய விகிதாச்சாரம்தான் இல்லையா. கடந்த மூன்று ஆண்டுகளில் ஏறக்குறைய நான்கு பில்லியன் (நானூறு கோடி) கைபேசிகள் மட்டுமே குப்பைகளாகி விட்டன. உலகத்தில் உருவாக்கப்படும் எலக்ட்ரானிக் கழிவுகளின் ஐந்து சதமானம் மட்டுமே இது. நண்பர்களே, ஒரு தகவலுக்காக நமக்கு எளிமையாகக் காணக்கிடைக்கும் விக்கிபீடியாவில் பூமியில் உயிர்களின் பரிணாம வளர்ச்சி பற்றிய ஒரு பத்தியை அப்படியே தருகிறேன்:

"இன்றைய நிலையில், (பிரபஞ்சத்தில்) புவியில் மட்டுமே உயிர்களின் பரிணாம வளர்ச்சி ஏற்பட ஏதுவான சூழல் உள்ளது. நான்கு பில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஆற்றல் மிகு வேதியியல் வினைகளால் சுயமாக உருவாகும் மூலக்கூறுகள் ஏற்பட்டன, பிறகு அரை பில்லியன் வருடங்களுக்குள் எல்லா உயிரினங்களின் பொது மூதாதையரான உயிரினம் உருவாகியது. தாவர உயிரினங்களின் ஒளிச்சேர்க்கைத் தன்மையினால் சூரிய ஆற்றலை உபயோகப்படுத்தின; இந்த வேதி வினையினால் ஏற்பட்ட பிராணவாயு (ஆக்சிஜன்) வளிமண்டலத்தை நிரப்பியது. மேலும் ஓசோன் (ஆக்சிசன் மூலக்கூறின் ஒருவடிவம் [O3]) படலம் மேல் வளி மண்டலத்தில் உருவாக உதவியது. பல சிறு செல்கள் பெரிய செல்களுடன் சேர்ந்ததினால் நுணுக்கமான செல்கள் யூகேர்யோட்டுகள் *(eukaryotes)* உருவாகின. இப்படிப்பட்ட காலனிகளில் அடங்கிய செல்கள் தனித்தன்மையுடன் செயல்படத் தொடங்கியபோது உண்மையான பல

செல் படைத்த உயிரினங்கள் உருவாகின. மேலும் வளி மண்டலத்தின் மேற்பரப்பில் அமைந்த ஓசோன் மண்டலம் வெளியிலிருந்து புவிக்கு வரும், கேடு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களை உறிஞ்சியதால் பூவுலகில் உயிர்கள் தழைத்தன. 1960ஆம் ஆண்டு முதல் ஆய்வாளர்கள், நியோபுரோட்டிசோயிக் காலத்தில் அதாவது 750 மற்றும் 580 மிமுவில் புவியின் பெரும்பகுதி பனியால் மூடியிருந்ததென்றும் மற்றும் மிகப்பல பனிக்கட்டியாறுகள் ஓடியதென்றும் அறிவிக்கின்றனர். அந்தக் காலத்திய புவியை "பனிப்பந்து புவி" என அழைக்கின்றனர். அந்தக் காலகட்டம் மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. ஏனெனில் இது பல செல் உயிரினங்கள் தோன்றிப் பரவிய கேம்ப்ரியன் விரிவாக்க காலத்திற்கு முன்னால் வந்தது. கேம்ப்ரியன் காலத்து விரிவாக்கத்தைத் தொடர்ந்து, 535 மில்லியன் வருடங்களில் புவியில் ஐந்து பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. கடைசியாக ஏற்பட்ட பேரழிவு 65 மில்லியன் வருடங்களுக்கு முன் ஒரு பெரிய விண்கல் புவியில் வந்து விழுந்ததால் ஏற்பட்டிருக்கக் கூடும் என நம்பப்படுகிறது. இந்தத் தாக்கத்தினால் டைனோசர் உட்பட பல ராட்சத பல்லிகள் மற்றும் பறவையினங்களைத் தவிர்த்து மற்ற எல்லாமுமே கூண்டோடு அழிந்து போனது. இதில் தப்பியது எலியைப் போன்ற ஷ்ரூ என்றழைக்கப்படும் பாலுண்ணிகளே. கடந்த 65 மில்லியன் வருடங்களில் பாலுண்ணிகள் பல்வேறு பரிணாமங்களை அடைந்துள்ளன, சில மில்லியன் வருடங்களுக்கு முன், ஆப்பிரிக்கா கண்டத்தில் மனிதக்குரங்கைப் போன்ற ஓர் மிருகம் நிமிர்ந்து நிற்க ஆரம்பித்தது. அவ்வாறு நின்றதால் கருவிகளை உபயோகிக்கவும் தகவல் பரிமாறவும் முடிந்தது, இதுவே மூளையின் வளர்ச்சிக்கு வித்திட்டது. இவ்வாறு அதிவிரைவாக வளர்ந்த மனிதனே முதலில் புவியில் விவசாயம் மற்றும் நாகரீகத்தையும் அறிமுகப்படுத்தினான். இதனால் ஏற்பட்ட தாக்கம் மற்ற புவி வாழ் உயிரினங்களின் வாழ்க்கை மற்றும் போக்கு இவற்றை மாற்றியமைத்தது. இப்போதுள்ள பனிக்கால சுழற்சி 40 மில்லியன் வருடங்களுக்கு முன் ஏற்பட்டதென்றும் மூன்று மில்லியன் வருடங்களுக்கு முன் பிளாய்டோசீன் காலத்தில் தீவிரமடைந்தது என்றும் கூறப்படுகிறது. அது முதல் துருவப் பகுதிகளில் உள்ள பனி 40–100,000 ஆண்டுகளுக்கொரு முறை உருகியும், உறைந்தும் ஏற்படுகின்றது. கடைசி பனிக்காலம் 10,000 வருடங்களுக்கு முந்தி முடிவடைந்தது."

சமகாலத்தை 'மனிதக் காலம்' (Anthropocene Epoch) என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள். ஏறக்குறைய நானூற்று ஐம்பது கோடி ஆண்டுகள் பழமையான நீலக்கிரகத்தில் மனிதக் காலம் தொடங்கி 11,700 வருடங்கள் மட்டுமே ஆகிறது நண்பர்களே. ஒரு 'ஒளி ஆண்டு' (light year) என்பது காலம் அல்ல. அது தூரத்தைக் குறிக்கும். அதாவது ஒளி ஒரு வருடத்தில் பயணம் செய்யும் மொத்த தூரமே ஒரு ஒளி ஆண்டு என்று கணக்கிடப்படுகிறது. ஒளி ஒரு வினாடிக்கு ஏறக்குறைய மூன்று லட்சம் மைல்கள் (299792458 m/s) பயணிக்கும். நிற்காமல் ஒரு வருடம் ஒளி பயணிக்கும் தூரமே ஒரு ஒளி ஆண்டு. பல்லாயிரக்கணக்கான கேலக்ஸிக்கள் கொண்ட இந்த அண்டத்தில் நமது சூரியக் குடும்பம் இருக்கும் பால்வீதியின் (milky way galaxy) தூரம் ஒரு லட்சம் ஒளிஆண்டுகள். அதாவது ஒன்றுக்குப் பக்கத்தில் பதினெட்டு பூஜ்ஜியங்களைப் போட்டால் கிடைக்கும் எண் என்னவோ அத்தனைக் கிலோமீட்டர்கள். பூமியின் சுற்றுப்பாதை வெறும் 12,742 கிமீ. மனிதர்களாகிய நாம் இந்த அழகினும் அழகான பூமியை வெறும் குப்பைத் தொட்டி என்ற அளவில் டீல் செய்கிறோம் இல்லையா? இந்த எலக்ட்ரானிக் கழிவுகளைக் கண்டு திகைப்படைந்திருக்கிறது ஏறக்குறைய தொண்ணூறு லட்சம் வகைகளான உயிரினங்கள் மற்றும் தாவரங்களுக்கு இடம் கொடுத்திருக்கிற பூமிப்பந்து. ■

தொடர் – 18

● கரிகாலன்

# தேநீர் சாலை

**செழுங்கிளை!**

~

கடன் பெறும் பொருட்டு வங்கி ஒன்றின் முகவரை அழைத்திருந்தேன். மூன்றுமாத பே சிலிப், ஆறுமாத பேங்க் ஸ்டேட்மெண்ட், வழக்கமாக ஆதார்கார்ட், பேன்கார்ட் என ஏகப்பட்ட ஃபார்மாலிட்டீஸ்.

விண்ணப்பத்தை நிரப்பியவர், 'பிசி/எம்பிசி/ஓசி, இதுல நீங்க எந்த கேட்டகிரி சார்?' என்றார்.

'பேங்க் லோனுக்கு எதுக்கு சாதியெல்லாம்?' என்றேன்.

'சார் நான் சாதாரண ஏஜண்ட்!' விழித்தார்.

'சொந்தக்காரங்க பேர் சொல்லுங்க!' 'வள்ளுவர், வெள்ளிவீதி, கம்பர், ஆண்டாள், ஔவை' என்றேன்.

'இந்தப் பேரெல்லாம் எங்கோ கேள்விப்பட்டதுபோல இருக்கே!'

'நாங்க பெரிய குடும்பம்' சிரித்தேன்.

'சார், இவங்க இப்ப உயிரோட இருக்காங்களா?'

'இல்லையே!'

'சார், ப்ளீஸ் விளையாடாதீங்க! உயிரோட இருக்கிற சொந்தக்காரங்கள சொல்லுங்க!' என்றார்.

'அருந்ததிராய், லூயி க்ளுக்' என்றதும் திரும்பவும் குழம்பினார்.

'இதெல்லாம் நம்ம ஊர் பெயரா தெரியலையே!' என்றார்.

'ஆமாம். யாவரும் கேளிர்ன்னு நீங்க படிச்சதில்லையா?'

'அதெல்லாம் வேண்டாம். அண்ணன், தம்பி, மாமன், மச்சான்! இப்படி யாரையாவது சொல்லுங்க!'

'குகனொடும் ஐவரானோம் முன்பு; பின் குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனோம்!' கம்பன் ஞாபகத்துக்கு வந்தான்.

நாங்கள் இருந்த இடம் மாஸ் இன்ஃபோடெக். அருகில் தம்பி பழனிவேல் அமர்ந்திருந்தார்!

'இவரும் தம்பிதான். இவர் பெயரை எழுதிக்கொள்ளுங்கள்!' என்றேன்.

உறவுகளைக் குறிக்க 'கிளை' என்றொரு வார்த்தை தமிழில் உண்டு. செல்வர்க்கு அழகு செழுங்'கிளை' தாங்குதல் என்கிறது வெற்றிவேற்கை.

மரத்தின் உணவுத் தொழிற்சாலை இலைகள். அந்த இலைகளைத் தாங்குபவை கிளைகள். இலையுதிர் காலத்தில் கிளையை வைத்துதான் தாவரவியலாளர்கள் மரத்தை அடையாளம் காண்கிறார்கள். கிளைகளென்பது நிழல் அளிக்கக்கூடியவை.

எனக்கு கோவிட் வந்தது. சொந்தங்கள் யாரிடமும் சொல்லவில்லை. வீட்டுக்குள்ளேயே முடங்க வேண்டிய நிலை. கோவிட் தொற்றாளர்கள் இறந்தார்கள். பெற்ற பிள்ளையோ, உற்றாரோ, உறவினரோ அருகில் வரவே அஞ்சிய காலம்!

ஆனாலும், பழனி தினமும் மருந்து, பால், பழம், காய்கறியென அனைத்தும் வாங்கி வந்தார். தம்பி பாரதி ஆரும் அப்படிதான்.

உறவு குருதித் தொடர்பால் மட்டும் உருவாவதில்லை. அது ஆரிக்கிளில் கசியும் அன்பிலிருந்தும் உருவாகிறது. வள்ளுவன் நட்பைக் குறிக்கவும் 'கிளை' ('கிளை'ஞரை நீட்டி அளப்பதோர் கோல்) எனும் சொல்லைப் பயன்படுத்துகிறான்.

ஹெச்டிஎஃப்சி வங்கி முகவர், பழனிவேல் என்று எழுதி அடைப்புக் குறியில் *brother* என்று எழுதினார். கணியன் பூங்குன்றனையும் வள்ளுவனையும் கம்பனையும் தமிழர்கள் உறவாகக் கொண்டால் சாதியும் மதமும் பகையாகிப் போகும்!

• • •

## அழகுற வாழ்வது!

~

விடியற்காலை படுக்கையை விட்டு எழுந்தேன். அருகிலிருக்கும் அம்மன் ஆலயத்திலிருந்து பனியில் நனைந்த எல்.ஆர். ஈஸ்வரியின் குரல்.

வாசலில் தமிழ் கோலமிட்டுக் கொண்டிருந்தார். மார்கழியும் கோலமும் பிரிக்க முடியாதவை. அம்மாக்களும், அக்காக்களும் முற்றத்தில் அழகுசெய்த கோலங்களில் விளையாடி வளர்ந்தது எங்கள் இளம்பருவம்.

கோலங்களில் பெண்களின் ஆழ்மனச் சுவடுகள் இருக்கின்றன. நேற்றிரவு தமிழும் நானும் மெல்லிய பனிவிழும் தெருக்களில் நடந்தோம். வழியில் கிடந்த சாணத்தைத் தமிழ் எடுத்து வந்தார். அதுபோலவே பக்கத்து வீட்டில் பரங்கி மொக்குகளைப் பறித்தார்.

இவை அனைத்தும் முற்றத்தை அழகாக்கவே. சாணம், பரங்கி எல்லாம் முல்லை நிலத்தை நினைவூட்டுபவை. தமிழர் பண்பாடு முல்லை நிலத்திலிருந்தே தொடங்குகிறது.

'வரிஆர் சிறுமனை சிதைஇ வந்து' நற்றிணை கோலத்தை வரி என்கிறது.

'திருந்துகோல் எல்வளை'

'சில்கோல் எல்வளை'

குறிஞ்சிப்பாட்டும் அகநானூறும் கோலத்தைக் கோல் என்கிறது.

'வெள்ளை நுண்மணல் கொண்டு சிற்றில் விசித்திரப்பட வீதிவாய்த் தெள்ளி நாங்கள் இழைத்த கோலம் அழித்தியாகிலும் உன்றன் மேல்'

கோல் என்பது நாச்சியார் திருமொழியில் கோலமாகப் பரிணாமம் அடைகிறது.

கௌதம புத்தரே கோலம் எழுதும் ஆர்வமுற்று, கற்றுக்கொண்டதாகப் படித்திருக்கிறேன். இது *myth* ஆக இருக்கலாம். ஆனால் இன்றும் புத்த மடங்களில் பத்து பதினைந்து துறவிகள் சேர்ந்து கோலமிடுவதைக் காணமுடியும்.

கோலங்களைப் பற்றி ஆய்வு செய்த சென்னை கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியர் கிஃப்ட்சிரோமெனி, அதை ஒரு கணித முறையென நிறுவினார்.

புள்ளிகளைச் சட்டகமாகக் கொண்டு, ஒரு புள்ளியில் ஆரம்பித்து பல புள்ளிகளை இடைவிடாது கடந்து பிறகு, அதே புள்ளியில் இணையும் கம்பிக் கோலங்களே மூலக் கோலங்கள். பரிணாம வளர்ச்சியில் மூலக் கோலங்கள் மாற்றம் அடைந்தன.

பெரும்பாலான கோலங்கள் கணிதவியலின் பண்பான சமச்சீர்மையைக் *(Symmetry)* கொண்டிருக்கின்றன.

இக்கோலங்கள் *90º, 180º, 270º* கோணங்களில் சுழற்சி செய்தாலும் மாறாதவை. புள்ளிக் கோலங்களின் அடிப்படை அலகு கம்பிகளின் முடிச்சாகும்.

கணிதவியலில் இதன் *Curve, Folium of Descartes*ஐ ஒத்து இருக்கிறது. இதைப் பல சமன்பாடுகளாக கிஃப்டசிரோமெனி வரையறை செய்கிறார்.

பெண்களுடைய மனங்களில், கரங்களில், அறிவியலும் கணிதமும் ஆட்சி செய்கிறது. பெண்கள் கோலங்களை அழகுக்காக மட்டும் எழுதவில்லை. அவர்களுக்கு சமூகத் தொடர்பு மறுக்கப்பட்டிருந்த காலத்தில், கோலத்தை ஒரு தொடர்பு கொள்ளும் ஊடகமாக மாற்றியிருந்தார்கள்.

கோலம், நிறைய முடிச்சுகளாலும், இலைகளாலும், மலர்களாலும் உருவாக்கப்படும் ஒரு சங்கேதக் கவிதை.

லாந்தர் வெளிச்சத்தில் கோலமெழுதும் அக்காவைக் கவனித்துதான் கரிகாலன் கவிதை எழுதத் தொடங்கியிருந்தான்.

பாதையை அடைத்து கோலம் இட்டிருந்தாலும், அதை மிதித்துச் சென்றுவிடாதீர்கள். ரசித்து ஒதுங்கிச் செல்லுங்கள்.

கோலம் என்பது அழகு. கோலம் என்பது மனசு. மனசை மிதித்துப் பழகுவது அழகாகாது அல்லவா?

• • •

## முதல் மலையாள சினிமா!

~

உலகில் சலனப்பட வரலாற்றை, *1895* டிசம்பர் *28*ஆம் நாள் பாரிஸ் நகரில் தொடங்கி வைத்தவர்கள் லூமியேர் சகோதரர்கள். ஒரு ரயில் வருவதுதான் மொத்தப் படமும். படத்தைப் பார்த்தவர்கள் தங்கள் மீது ரயில் மோதிவிடுமோ எனப் பயந்து ஓடினார்கள். லூமியர் சகோதரர்களின் இந்தத் திரையிடலை அடுத்து, இரண்டு ஆண்டுகளில் சென்னைக்கு சினிமா வந்துவிட்டது.

எட்வர்ட் எனும் ஆங்கிலேயர் விக்டோரியா ஹாலில் சில துண்டுப் படங்களை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து திருச்சியைச் சேர்ந்த

வின்சன்ட் சாமிக்கண்ணு என்பவர் சினிமா முயற்சிகளில் ஈடுபட்டார். ஊர் ஊராகச் சென்று படம் காட்டினார். டூரிங் டாக்கீஸ் அமைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார்.

இருப்பினும் ஆர்.நடராஜ முதலியார் என்பவர்தான் தென்னிந்தியாவின் முழுநீள சினிமாவை எடுத்த பெருமைக்குரியவர். கீசகவதம், வஸ்திராபகரணம், லவகுசா, ருக்மணி சத்யபாமா போன்ற படங்களைத் தன் நிறுவனமான 'இந்தியா ஃபிலிம் கம்பெனி' மூலம் இவர் எடுத்திருந்தார்.

மிதிவண்டி விற்பனை, கார் விற்பனை என வசதியான தொழிலதிபராக இருந்தவர் நடராஜன். சினிமா ஆர்வத்தால் அவரது இறுதிக்காலம் துயரமாக அமைந்தது. அவரது லேப் தீக்கிரையானது. அதே ஆண்டு மகனும் இறந்து போனார்.

இவரது சினிமா பங்களிப்புக்காக, கலைஞர் ஒரு வெள்ளிப்பதக்கம் கொடுத்தார். இதைத் தவிர இவருக்குப் பெரிய அளவில் கௌரவம் எதுவும் கிடைக்கவில்லை. தமிழக அரசு இவரது பெயரில் திரைத்துறை விருதுகள் தரலாம். தந்ததா? தெரியவில்லை.

கடைசி காலத்தை மகளோடு அயனாவரத்தில் கழித்து தமிழர்களின் நினைவுகளில் இருந்து உதிர்ந்து போனார்.

தமிழில் எத்தனையோ பயோஃபிக் வந்தன. தமிழ் சினிமா வரலாற்றின் தொடக்கப் புள்ளியாக இருந்த நடராஜன் குறித்து சினிமா எடுக்கும் எண்ணம் ஏனோ யாருக்கும் வரவில்லை. இத்தனைக்கும் இந்தியாவில் பாலிவுட்டுக்கு அடுத்ததாகப் பெரிய வணிகமுடையது கோலிவுட்.

ஆனால், மல்லுவுட் சினிமா வரலாறு நம் தமிழைவிட சற்று பின்னால்தான் தொடங்குகிறது. மலையாளத்தில் முதல் சலனப்படத்தைத் தயாரித்து இயக்கியவர் ஜே.சி.டேனியல். அவர் எடுத்த அந்தப் படம் விகதகுமாரன்.

ஃப்ரெஞ்சிலோ, தமிழிலோ, மலையாளத்திலோ முதலில் சினிமா எடுக்க முனைந்தவர்கள் லாபம் சம்பாதிப்பதற்காக எடுத்தவர்கள் அல்லர். கலையும் அறிவியலும் இணைந்த ஓர் அழகியல் வடிவத்தின் மீது எழுந்த ஆர்வமே, சொத்துக்களைப் பணயம் வைத்தாவது, தங்கள் கனவை நோக்கி இவர்களைப் பயணிக்க வைத்தது.

இத்தகைய வரலாற்றுக்குரிய ஜே.சி. டேனியலின் பயோஃபிக்தான் 'செல்லுலாயிட்'. 2013இல் வெளியானது செல்லுலாய்ட். சேலங்கட் கோபாலகிருஷ்ணன் எழுதிய 'லைஃப் ஆஃப் ஜே. சி. டேனியல்' சரிதையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம்.

சினிமா மீது ஜே. சி.டேனியல் (பிருத்விராஜ்) கொண்ட காதலை வெளிப்படுத்துகிற படம். மலையாளத்தில் ஒரு சலனப்படத்தைத் தயாரித்து இயக்க வேண்டும் என்கிற லட்சியம் இவரை மும்பைக்கு தாதாசாகெப் பால்கேவையும், தமிழகத்துக்கு நடராஜனையும் தேடிப் பயணிக்க வைக்கிறது.

இவரது படத்தில் நாயகி பாத்திரத்தில் நடிக்க மும்பை நடிகை ஒருவர் நிறைய கிராக்கி பண்ணுகிறார். இறுதியாக டேனியல் நாட்டுப்புறக் கலைஞரும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவருமான ரோசம்மாவை (சாந்தினி) நடிக்க வைக்கிறார்.

விகதகுமாரன் படத்தை எடுத்து முடிப்பதற்குள் டேனியலின் சொத்து முழுமையும் அழிகிறது. ஒரு வழியாய் படத்தை எடுத்து 'சினிமாபுரா' எனும் திரையரங்கில் வெளியிடுகிறார். கதைப்படி நாயர் பெண்ணாக நடிக்கிறார் ரோசம்மா. ஒரு தலித் பெண் ஆதிக்கசாதியான நாயர் பெண்ணாக நடிப்பதா? என நாயர்கள் படத்தை ஓடவிடாமல் ரகளை செய்கிறார்கள். ரோசம்மாவின் குடும்பத்தையே பாழாக்குகிறார்கள்.

சொத்துக்களை இழந்த டேனியல் தமிழகத்துக்கு வருகிறார். பல் மருத்துவம் படித்து கிளினிக் நடத்துகிறார். இப்போது ஆறுதலாக இருப்பது அவரது மனைவி ஜேனட் (மம்தா மோகன்தாஸ்) மட்டுமே.

இந்நிலையில் டேனியலைப் பற்றி அறியும் சேலங்கட் கோபாலகிருஷ்ணன் அவரது கதையை எழுதுகிறார். மலையாளத்தின் முதல் சினிமாவை எடுத்த அவரது இயக்கத்தை மலையாள வரலாற்றில் பதிய முயல்கிறார். அரசாங்கத்தின் கௌரவத்தைப் பெற்றுத்தரவும் முயற்சி எடுக்கிறார்.

ஆனால் டேனியல் எடுத்த விகதகுமாரன் படச்சுருள்கூட இப்போது இல்லை. ஷூட்டிங்கில் எடுத்த ஒரு புகைப்படம், படம் வெளியானதை அறிவிக்கும் ஒரு நோட்டீஸ் மட்டுமே அவரது சாதனைக்குச் சாட்சியாக இருக்கின்றன.

இதை ஏற்க மறுக்கிறது கேரள அரசும் சினிமாத்துறையும். இறுதியில் ஜே.சி. டேனியலுக்கு முதல் மலையாள சலனப் படத்தை எடுத்தவர் என்கிற அந்தஸ்து கிடைத்ததா? இல்லையா? என்பதற்கு விடை தருவதாக முடிகிறது படம்.

இப்படியெல்லாம் தமிழ் சினிமாவில் சிந்திக்க ஒரு கமல், பிரித்விராஜ் ஏன் இல்லை? இந்தப் படத்தைப் பார்த்து முடித்தபோது ஆதங்கம் எழுந்ததைத் தவிர்க்க முடியவில்லை!

*

படைப்பு பெருமையுடன் வழங்கும்

# குறு நெடில்

**விரைவில் படப்பிடிப்பு**